பிப்ரவரி
2014
ரூ. 25/-
இறக்கை : 3 இறகு : 2

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்



## அம்பல மேட்டில் ஆம் ஆத்மி

**கட்டுரை** ஏகன், க.சந்திரசேகரன், இன்குலாப், தஞ்சாவூர் வி.அ.இளவழகன், இரா.தமிழரசி, விக்ரமாதித்தியன், வே.மு.பொதியவெற்பன், மா.அமரேசன்

**கவிதை** ஆதவன் தீட்சண்யா, நல்லினி, மங்கையர்செல்வன்

**சிறுகதை** டி.எம்.சுஹரா, நந்தன் [illegible] **நூல் மதிப்புரை** இரா.எட்வின், அறமொழியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர் தமிழர் திருநாள்

Fête de la Diaspora Tamoule

# பிரான்சில் நடைபெற்ற புலம்பெயர் தமிழர் திருநாள் 2014

## பொங்கல் விழாக் காட்சிகள்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

இறக்கை 3 இறகு 2

திருவள்ளுவராண்டு 2045

தை - மாசி பிப்ரவரி 2014

வெளியிடுபவர்
ஆசிரியர்
**வி. முத்தையா**

ஆசிரியர் குழு
**அழகிய பெரியவன்**
**இரா. எட்வின்**
**ச. முகில்நிலா**

நெறியாளர்கள்
**கி.பி. அரவிந்தன்**
**ஞானாலயா பா.கிருஷ்ணமூர்த்தி**
**செந்தலை ந.கவுதமன்**
**ஓவியர் வீர.சந்தானம்**
**டிராட்ஸ்கி மருது**

புலம்பெயர் நாடுகளுக்கான தொடர்புக்கு :



கனடா :
**வி. மகேந்திரன்**
V. Mahenthiran
Mahenthiran_v@hotmail.com

பிரித்தானியா :
**ஹரி**
Lotus club, 16-18 Burrage Road
Woolwich, London, SE18 7LH

பிரான்ஸ் :
**க. முகுந்தன்**
K. Mukunthan
kmukunthan@gmail.com

யேர்மனி :
**கோ. கபிலன்**
G. Kabilan
g.kabilan@googlemail.com

நோர்வே :
**தமிழியம் சுபாஷ்**
Tamiliam Subas
facebook@tamiliam.com


## இது மனிதர்கள் வாழும் நாடுதானா?

பழங்குடி இனத்தைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் உயர்சாதி இளைஞர் ஒருவரைக் காதலித்த குற்றத்திற்காக, 13 பேர் சேர்ந்து வன்புணர்ந்து சீரழித்துள்ள கொடுமை மனித நேயமிக்கவர்களை நிலைகுலையச் செய்திருக்கிறது.

காதலித்த குற்றத்திற்கு தண்டனையாக அந்த இளம்பெண்ணிற்கு 50,000 ரூபாய் அபராதம் விதித்திருக்கிறது ஊர்ப் பஞ்சாயத்து. அந்தப் பெண்ணால் உடனடியாக அப்பெரும் தொகையை செலுத்த இயலாமல் போகவே அந்த இரவு முழுக்க யார் வேண்டுமானாலும் அவரை வன்புணர்ந்து கொள்ளலாம் என்று தாராளம் காட்டியிருக்கிறது அந்தப் பஞ்சாயத்து.

இந்திய நாட்டில் மேற்கு வங்க மாநிலத்தில் பிர்பும் மாவட்டத்தின் சுபல்பூர் பகுதியில் நடந்துள்ள இந்தக் கொடூரம், இது மனிதர்கள் வாழும் நாடுதானா என்று அய்யம் கொள்ள வைத்திருக்கிறது.

பாதிக்கப் பட்ட இளம்பெண் மருத்துவ மனையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார். ஈனர்கள் 13 பேரும், காதலனும் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். மாநில ஆளுநர் கண்டனம் தெரிவித்திருக்கிறார். மத்திய அமைச்சர் கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

பெண்களைத் தாயாகவும், தெய்வமாகவும் வழிபடுகிற இந்த தேசத்தில், இந்திய நாட்டின் முதல்குடிமகனைத் தந்த மாநிலத்தில், அதுவும் ஒரு பெண் முதல்வராக இருக்கிற மாநிலத்தில், இந்தக் கொடூரம் நடந்திருப்பது ஜனநாயகத்தின்மேல் நம்பிக்கை கொண்டிருக்கிற எவரையும் அசைத்துப் போட்டிருக்கிறது.

சுதந்திரம் பெற்று 65 ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்ட உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த, இது போன்ற கொடூர நிகழ்வுகள் தொடர்கதையாகிக் கொண்டுள்ளது பெரும் தலைக் குனிவை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இதுபோன்ற கொடூர நிகழ்வுகளுக்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைக்கத் தவறினால் உலகிற்கு மூளை ஏற்றுமதி செய்யும் நாட்டில் பெண்கள் சீரழிக்கப்படும் கொடுமையைக் கண்டு காறி உமிழும் மனிதம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

**இனி ஒவ்வொரு மாதமும் 1ஆம் தேதி உங்கள் கைகளில்**

ஒவ்வொரு மாதமும் 29 அல்லது 30 ஆம் தேதியில் 'காக்கைச் சிறகினிலே' அஞ்சல் செய்யப்படுகிறது. 5ஆம் தேதிக்குள் இதழ் கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய செல்பேசி எண்: 98414 57503.

**உறுப்பினர் கட்டணம்**

| | |
|---|---|
| தனி இதழ் விலை | ரூ. 25 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 275 |
| இரண்டு ஆண்டு | ரூ. 500 |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ. 1250 |
| மாணவர் சந்தா | ரூ. 200 |

(மாணவர்கள். கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றிதழோடு விண்ணப்பிக்க வேண்டும்)

**வெளிநாட்டு உறுப்பினர் கட்டணம்**

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 4000 |

காசோலைகள், வங்கி வரைவோலைகள். அனைத்தும் KAAKKAI, (A/c No. 60111010005660, SYNDICATE BANK, Triplicane, Chennai - 5. IFSC: Synb0006011) என்ற பெயருக்கு சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும். பணவிடை (மணியாடர்) மூலமும் சந்தா செலுத்தலாம்.



தொடர்பு முகவரி:
**காக்கை**
288, டாக்டர் நடேசன் சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600005.
செல்பேசி: 98414 57503
மின்னஞ்சல்: kaakkaicirakinile@gmail.com



இதழ் வடிவமைப்பு:
சா. ஐசக்


## சிறகுக்குள்ளே...




06




34



52



57



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளை குழந்தைகளாக...
## விஷ்ணுபுரம் சரவணனின் "வாத்து ராஜா"வை முன்வைத்து




நூலின் பெயர் : வாத்து ராஜா
ஆசிரியர் : விஷ்ணுபுரம் சரவணன்
பதிப்பகம் : பாரதி புத்தகாலயம்
விலை : 50 ரூபாய்

சீ, உட்றா சனியனே என்றவாறு முகத்தை சுளித்தபடியே தன்மேல் தொத்தனங்கால் போட்ட தோனியின் கால்களை தள்ளிவிட்டுக் கொண்டிருந்ததைப் பார்ப்பதற்கு ஆச்சரியமாக இருந்தது. சிறு வயதில் அவனது முகத்தோடு முகம் வைத்து கொஞ்சிக்கொண்டும் பேசிக் கொண்டும் இருந்தவள் எப்படி இப்படி ஆனாள்?

சின்ன வயதில் அவனுக்கு புரியாததை எல்லாம் அவனோடு அவள் பேசிக் கொண்டிருந்ததை அவளுக்கு நினைவுபடுத்தியபோது, தான் பேசியதெல்லாம் தோனிக்கு புரிந்ததாகவும் அவன் மறுமொழித்ததும் வினவியவை அனைத்தும் தனக்குப் புரிந்ததாகவும் அவள் சொன்னாள்.

ஆக, விலங்குகள் மற்றும் பறவைகளுடனான குழந்தைகளின் உரையாடல் அர்த்தம் செறிந்ததாக இருக்கிறது. குழந்தைகளின் மொழி அணிலுக்கும் நாய்க்கும் காக்கைகளுக்கும் கோழிகளுக்கும் புரிகிறது. அவைகளின் மொழியும் குழந்தைகளுக்கு பிடிபடுகிறது. குழந்தைகள் கொஞ்சம் வளர்ந்ததும் இது ஏன் மாறிப் போகிறது? பள்ளிக்கூடங்களும், வீட்டுப் பாடங்களும், தொடர்ந்த தேர்வுகளும், மதிப்பெண்கள் குறித்த மதிப்பீடுகளும் குழந்தைகளை பறவைகளிடமிருந்தும் விலங்குகளிட மிருந்தும் அன்னியப் படுத்தும் பெருங்காரணிகளாகும். குழந்தைகளுக்கான படைப்பிலக்கியங்கள் குறிப்பாக குழந்தைகளுக்கான கதைகள் மட்டுமே குழந்தைகளையும் விலங்குகளையும், குழந்தைகளையும் பறவைகளையும் மீண்டும் ஒரு புள்ளியில் கொண்டு போய் நிறுத்த முடியும். ஆனால் அதற்கான முயற்சி தேவையான அளவில் மேற்கொள்ளப்படவில்லை என்றே சொல்ல வேண்டும்.

குழந்தைகளுக்கென்று ஒரு மொழி இருக்கிறது, அவர்களுக்கென்று ஒரு சூழல் இருக்கிறது. அவர்களது தேடலும் பயணமும் அலாதியானது. இரண்டு மூன்று விளக்கமாற்றுக் குச்சிகளோ, உடைந்த ஓட்டாஞ்சில்லோ போதும் அவர்களை மகிழ்வுறச் செய்ய. ஒன்றுக்கும் உதவாது என்று நாம் ஒதுக்கித் தூரப் போடும் அந்த சிறு ஓட்டாஞ்சில் காணாமல் போவது ஒன்றே போதும் அவர்களது கண்களை உடையச் செய்ய.

அவர்களது தேடல் என்பது நம்மைப் பொறுத்தவரை ஒன்றுக்கும் உதவாத ஒன்றாக இருக்கலாம். உதாரணமாக விரல் நுழைத்து வாய்வைத்து உள்ளிழுத்து உடைந்த பலூன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டுகளிலிருந்து உருவாக்கப்படும் முட்டைகள் அவர்களை சொர்க்கத்திற்கே இட்டுச் செல்லும்.

மென்மையான அவர்கள் தங்களது இலக்கு நோக்கிய பயணத்தில் முரட்டுத் தனமாய் தோன்றும் நம் யாரைவிடவும் முரட்டுத்தன மானவர்கள். பாறைபோன்று மென்மை யானவர்கள். பூ போன்று முரடானவர்கள்.

குழந்தைகளிடம் போய் சேரவேண்டு மானால் ஒருவன் லூசாக வேண்டும் என்று குழந்தைகளுக்கான கலைஞர் வேலு சரவணன் ஒருமுறை சொன்னார். அது எவ்வளவு பெரிய உண்மை என்பது உணர்ந்தவர்களுக்கே தெரியும்.

குழந்தைகளோடு குழந்தைகளாய் பயணப் படுபவர்களால் மட்டுமே குழந்தைகளைக் கவரக்கூடிய இலக்கியங்களைத் தர முடியும். எனக்குத் தெரிய அத்தகைய ஒரு சிலரில் விஷ்ணுபுரம் சரவணனும் நிச்சயமாய் ஒருவர். பள்ளி பள்ளியாய் கைகாசை செலவளித்துப் போய் குழந்தைகளுக்கு கதை சொல்லும் கதை சொல்லிகளில் ஒருவர்.

ஒரு மாதம் விளையாட பத்துக் குழந்தைகள் கிடைக்கும். ஆனால் ஆயுளில் ஒரு வருடத்தை அதற்காக தாரை வார்க்க வேண்டும் என்றால், நூறு குழந்தைகளைக் கொடுத்துவிட்டு பத்து ஆண்டுகளை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறக் கூடியவர்.

அவர் எழுதி பாரதி புத்தகாலயம் வெளியிட்டிருக்கும் நூல் **வாத்து** ராஜா. எல்லோரும் இதை குழந்தைகளுக்கான நாவல் என்று சொல்கிறார்கள். ஆனால் இது குழந்தைகளுக்கான கதை. ஆனால் நாவலோ குறுநாவலோ அல்ல. இது ஒரு புது வடிவம். சோதித்துப் பார்த்திருக்கிறார் சரவணன்.

இந்தக் கதையை எழுதத் தூண்டிய

ஒரு பழத்தின் உருண்டை வடிவத்தை / எங்கிருந்து கடிக்கத் துவங்க வேண்டும் என்பதற்கு / கணிதங்கள் உண்டா, தெரிய வில்லை / ஒரு அணிலிடமும் பறவையிடமும் / கற்றுக் கொள்ள / இருக்கிற விஷயங்களில் / பழம் கடித்தலும் அடங்கும் / என்கிற கல்யாண்ஜியின் கவிதை வரிகளுக்கு இந்த நூலை அர்ப்பணித்திருக்கிறார்.

இதுவே வித்தியாசமானதாக இருக்கிறது. இதுவரை யாரேனும் குறிப்பிட்ட கவிதை வரிகளுக்கு தங்களது படைப்பினை அர்ப்பணித்திருக்கிறார்களா என்று தெரிய வில்லை. இல்லை எனும் பட்சத்தில் அந்த வகையில் இது முதலாவதாகக் கூட இருக்கலாம்.

ஒரு ராஜாவுக்கு மூன்று மகன்கள். மிக நல்ல ராஜாவான அவர் சாகும் தருவாயில் தனது ராஜாங்கத்தை மூன்றாகப் பிரித்து மூன்று மகன்களிடத்தும் கொடுக்கிறார். நல்லாட்சி நடத்த வேண்டும் தன் ஆளுகையின் கீழ் இருந்த பொழுது மக்கள் எப்படி எந்தக் குறையுமின்றி இருந்தார்களோ அப்படியே அவர்கள் காலத்திலும் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று சத்தியம் வாங்கிக் கொண்டு செத்துப் போகிறார்.

மூத்தவர்கள் தேசிங்கும் கலிங்கனும் தங்களது தந்தை சொன்னது போல நல்லாட்சியை நடத்துகிறார்கள். ஆனால் இளையவன் வானவன் மட்டும் தாந்தோன்றித் தனமாக ஆட்சியை நடத்துகிறான். அறிவார்ந்த அமைச்சர்கள் சான்றோர்கள் யார் சொல் வதையும் செவி மடுக்காமல் தன் இஷ்டத்திற்கு ஆட்சி செய்கிறான். அவனது கேலிக்குரிய நடத்தையை மனதில் கொண்டு அவனை அனைவரும் வாத்து ராஜா என்றழைக்கிறார்கள்.

ஒருநாள் ராஜா தர்பாருக்கு வந்து கொண்ருந்தபோது துதி பாடிக் கொண்டிருந்த சம்பு துதியை முடிக்கும் தருவாயில் வாய் தவறி மாமன்னர் வாத்து ராஜா வருகிறார் என்று சொல்லிவிட்டான். ராஜாவுக்கு கோவம் வரும் என்பதும் தன் தலை தப்பாது என்பதும் தெரியுமென்பதால் சம்பு குடும்பத்தோடு தலைமறைவாகிறான். நாட்டில் உள்ள வாத்துகளை எல்லாம் கொல்ல உத்தர விடுகிறான் ராஜா. வாத்துகள் அழிக்கப் படுகின்றன.

சுந்தரி என்ற குழந்தை தனது இரு வாத்துகளையும் தனது புத்திசாலித் தனத்தினால் காப்பாற்றுகிறாள். தனது இரு வாத்துகளின் சிறகுகள் மேலும் முட்டை முட்டையாக மையினால் வரைகிறாள். அடுத்தநாள் சேவகர்கள் சோதிக்க வந்த போது இவை வாத்தல்ல என்று நிறுவுகிறாள். நம்பவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் தவிக்கும் சேவகர்கள் இவை வாத்துகள் இல்லை எனில் இவற்றின் முட்டைகளைக் காட்ட வேண்டும் என்றும் இல்லாது போனால் சிறையில் அடைத்து விடுவோம் என்றும் சொல்லிவிட்டு செல்கிறார்கள். இத்தோடு கதையை நிறுத்திய அமுதாவின் பாட்டி ஊருக்குப் போய் விடுகிறார். சுந்தரிக்கும் அவளது வாத்து களுக்கும் என்ன நடந்திருக்கும் என்பதை அறிய கதை சொல்லிகளைத் தேடி அமுதாவும் அவளுடைய தோழி கீர்த்தனாவும் மேற்கொள்ளும் பயணம்தான் கதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை என்று பார்த்தால் அவ்வளவுதான். ஒரு நான்கு பக்கத்தில் சிறுகதையாக முடிந்துவிடும். ஆனால் அந்தக் குழந்தைகளின் பயணத்தை இவர் நீட்டிச் செல்கிற அழகு இருக்கிறது பாருங்கள் அதில்தான் சரவணன் வெளிப்படுகிறார்.

இந்தக் கதை அல்ல நம்மை அவரை நோக்கி உந்தித் தள்ளுவது. அதைக் கையாண்டிருக்கக் கூடிய விதம் நம்மை ஈர்க்கிறது. அதில் உள்ள சொற்கள் , விளை யாட்டுகள் எல்லாம் குழந்தைகளினுடையவை.

வேப்பம் பழத் தோலுக்குள்ள குச்சியை நுழைத்து எதிரில் வருகிற பையன்களை அடிக்கிற விளையாட்டுல அமுதாவை யாரும் ஜெயிக்க முடியாது இப்படித்தான் இந்த நூலின் ஆரம்பத்தில் அமுதா அறிமுகமாகிறாள்.

ஐம்பது வயதாகும் நான் சிறுவனாக இருந்தபோது விளையாடிய விளையாட்டு இது. இப்போது வீடியோ கேம்சும் இன்னபிற விளையாட்டுகளும் முற்றாய் களவாடப் பட்டு உலகமயத்தின் பெருங்குடலுக்குள் போன விளையாட்டு. இப்படி தொலைந்துபோன மண்சார்ந்த தொன்மமான விளையாட்டுகளை மீண்டும் குழந்தைகளுக்கு கொண்டு சேர்க்கிற கதை உத்தியை சரவணன் அழகாக செய்திருக்கிறார்.

குழந்தைகளுக்கான கதை என்றபோதிலும் ஆழமான அரசியலை, ஆள்பவர்களின் கோமாளித்தனத்தை, அம்பலப் படுத்தவும் அவர் தவறவில்லை.

அந்த ஊரில் அந்த ஆண்டு நிறைய மழை பெய்கிறது. ஆகவே நிறைய நெல் விளைகிறது. மகிழ்ந்து போன மக்கள் தெய்வத்துக்கு விழா எடுத்து தங்களது நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறார்கள். அரசனையும் அழைக்கிறார்கள். அதற்கு ராஜா சொல்கிறான்,

நிறைய நெல் விளைஞ்சது என்றால் அதை மீண்டும் வயலிலேயே போடவேண்டியதுதானே. அதை ஏன் அறுவடை செஞ்சீங்க

பொதுவாகவே ராஜாக்கள் என்றால் ஏதோ மக்கள் காவலர்கள், புத்திசாலிகள் என்பதுமாதிரி கல்வி அவர்களிடம் கல்வி கட்டமைத்து வைத்திருக்கும் பிம்பத்தை உடைத்து இப்படிப் பட்ட ராஜாக்களும் இருப்பார்கள் என்பதை ருசிக்க ருசிக்க படிக்கத் தருகிறார் சரவணன். இதை பள்ளிக்கூடத்து ஆசிரியர்களால் செய்ய இயலாது. இது மாதிரி நூலாசிரியர்கள்தான் செய்ய வேண்டும். அதை சரியாய் செய்திருக்கிறார் சரவணன்.

இந்தக் கதையில் மிகச் சுவராசியமான இடம் ஒன்றுண்டு. துதி பாடும் சம்பு அவையில் மாமன்னர் வாத்து ராஜா வருகிறார் / பராக்.. பராக் / என்று வாய்தவறி பாடியவுடன் வானவன் ராஜா திகைத்து நிற்கிறான். மக்கள் அதிர்ச்சியியில் அப்படியே உறைந்து போய் இருக்கிறார்கள். சம்புவோ பயத்தின் விளிம்பு தாண்டி நிற்கிறான். ஆனால் குழந்தைகளோ மகிழ்ச்சியின் உச்சியில் ஹே.. ஹே..வாத்து ராஜா வாத்து ராஜா என்று குதூகலிக்கின்றனர். பெற்றோர்கள் பயத்தில் குழந்தைகளின் வாய் பொத்துகின்றனர். அந்த நேரம் பார்த்து ராஜாவுக்கு பரிசளிப்பதற்காக கொண்டு வந்திருந்த வாத்துகள் க்வாக் க்வாக் என்று கத்த குழந்தைகள் மீண்டும் ஹே ஹே.. வாத்து ராஜா என்று குதூகலிக்க ஆரம்பித்து விட்டார்கள். இதுதான் நிஜக் குழந்தைகள். இதுதான் குழந்தைகளின் உலகம். குழந்தைகளை மேன்மைப் படுத்துகிறேன் , அறிவாளிகளாகக் காட்டுகிறேன் என்று அவர்களை பொம்மை களைப் போல் சித்தரிக்கும் இந்தக் கால கட்டத்தில் குழந்தைகளை குழந்தைகளாக காட்டியிருக்கிறார் சரவணன்.

டம் / டம் / டம் / டம் /

தண்டோரா இசையின் ஓசை நயத்தை மிக அழகாக பதிந்து தந்திருக்கிறார். தண்டோரா முரசு போன்றவற்றை எல்லாம் சிறுவர் கதைகளில்தான் இனி பார்க்க முடியும்.

அழிப்பதற்காக வாத்துகளைத் தேடி வரும் அரண்மனை ஊழியர்களிடம் சுந்தரி இவை வாத்துகள் இல்லை என்றவுடன்,

இது வாத்து இல்லை என்றால் என்ன. பார்ப்பதற்கு வாத்து மாதிரியே இருப்பதால் கொன்று போடுவோம் என்று அவர்கள் சொல்வது போலகளுக்கு இந்தக் கதை காலத்திலேயே இருந்த மரியாதையை சொல்கிறது. கதையின் முடிவைத் தெரிந்து கொள்வதற்காய் அமுதாவோடும் கீர்த்தனா வோடும் நம்மையும் ஓட விடுகிறார் பாருங்கள் மனிதர் விரட்டி ஜெயிக்கிறார்.

போல குழந்தைகள் கதைகள் பெருகி வரும் காலத்தில் வாத்து ராஜா ஒரு நிஜமான குழந்தைகள் கதை. முழுக்க முழுக்க ஒரு சோதனை முயற்சி. சரியாய் பரிசீலிக்கப் படும் போது சோதனை முயற்சியை செய்தவர்களின் பட்டியலில் சரவணனும் சத்தியமாய் இடம் பெறுவார்.

அடுத்த ஆண்டு எங்கள் பள்ளியில் ஆறாம் வகுப்பு சேறும் மாணவர்களுக்கு அந்த நேரத்தில் பசையோடிருப்பின் இந்த நூலை வாங்கித் தருவதாக உள்ளேன். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, 65வது குடியரசு தினத்தை முன்னிட்டு, நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ள ஒரு கருத்து, நிகழ் அரசியல் பின்னணியில் கூர்ந்த கவனத்திற்கு உரியது.

ஜனரஞ்சக ஆதரவைப் பெற்றிருந்தாலும், அராஜகவாதிகளாக இருப்பின், அவர்கள் ஆட்சி நிர்வாகத்துக்கு உகந்தவர்கள் அல்லர் என்பதே அது.

குடியரசுத் தலைவரின் உரையைக் கேட்டவர்கள், படித்தவர்கள், அவரது இக் கருத்து ஆம் ஆத்மி கட்சியையே கோடிட்டுக் காட்டுகிறது என்று புரிந்துகொண்டால் அது தவறு என்று தடாலடியாக யாரும் புறந்தள்ளி விட முடியாது. ஏனெனில், தற்போதைய தலைநகர் அரசியல் கொதிநிலை அவ்வாறு புரிந்துகொள்வதற்கான அத்தனை சாத்தியங்களையும் உருவாக்கியிருக்கிறது.

பா.ஜக தலைவர் ராஜ்நாத் சிங், குடியரசுத் தலைவரின் உரை ஆம் ஆத்மி கட்சியையும் புது தில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலையும் தான் குறிக்கிறது என்று வெளிப்படையாகவே சுட்டிக்காட்டி வரவேற்றிருக்கிறார்.


குடியரசுத் தினத்துக்கு சில தினங்களுக்கு முன்பு, கிட்டத்தட்ட 36 மணி நேரம் நிர்வாகத் தடத்திலிருந்து புரண்டு, தத்தளித்தது தில்லி. ஆட்சி நிர்வாகத்துக்குப் பொறுப்பான முதல்வரும் அவரது சகாக்களுமே வீதிப் போராட்டத்தில் இறங்கியது அதற்குக் காரணம்.

தங்களுக்குக் கீழ்ப்படியாத காவல் துறை அதிகாரிகளைத் தண்டிக்க வலியுறுத்தி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலும், இந்தப் பிரச்சினை கிளம்புவதற்கு மூல காரணமாக இருந்த சட்ட அமைச்சர் சோம்நாத் பாரதியும் இதர அமைச்சர்களும் மத்திய அரசுக்கு எதிராக (தர்ணா) போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

ஊடகத் தகவலின்படி, சில நூறு ஆம் ஆத்மி தொண்டர்களும் போராட்டக் களத்தில் திரண்டார்கள்.

கெஜ்ரிவால் வீதியில் அமர்ந்து அரசுக் கோப்புகளைப் பார்த்தார். அவர் வழியில் பிற

# அம்பல மேட்டில் ஆம் ஆத்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமைச்சர்களும் செயல்பட்டனர். இரவில், பனியில், சாலையோரம் காவல்துறை, தொண்டர்கள் சூழ கெஜ்ரிவால் படுத்துறங்கினார். மறுநாள், போராட்டக் களத்திலேயே, மனைவி கொண்டு வந்த சிற்றுண்டியை சாப்பிட்டார். அவ்வப்போது இருமியவாறு, வெவ்வேறு வேளைகளில், வெவ்வேறு தொனிகளில் தொலைக்காட்சி ஊடகங்களுக்கு கருத்துகள் சொன்னார். பொதுக் கருத்து, தனக்கும் கட்சிக்கும் எதிராக வேகமாக விரிகிறது என்பதைப் புரிந்துகொண்ட கெஜ்ரிவால், கோரிக்கைகள் ஏதும் மத்திய அரசால் முழுமையாக ஏற்கப்படாத நிலையிலேயே, வீதிப் போராட்டத்திலிருந்து விடை பெற்றார் ஆம் ஆத்மி போராட்டம் வெற்றி என்ற அறிவிப்புடன்.


புது தில்லி யூனியன் பிரதேசம் என்பதாலும் தேசத்தின் தலைநகர் என்பதாலும் அதன் காவல் துறை மத்திய உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. தில்லி அரசின் நிர்வாகத்தின் கீழ் அதைக் கொண்டுவர வேண்டுமென்று, கடந்த 15 ஆண்டுகள் ஆட்சி புரிந்த காங்கிரஸ் முதல்வர் ஷீலா தீட்சித் உள்பட முந்தைய முதல்வர்கள் கோரி வந்திருக்கிறார்கள். ஆனால் அது நிமித்தம் எந்த முதல்வரும் வீதியிறங்கவில்லை.

ஆனால், குறுகிய கால ஊழல் எதிர்ப்புப் போராட்டத்தின் விளைச்சலான ஆம் ஆம்மி கட்சியின் முதல்வர் கெஜ்ரிவால், அரசமைப்புச் சட்டரீதியாக, தான் ஏற்றுக்கொண்ட உறுதிமொழி, மற்றும் இதர சட்ட மரபுகளைத் தாவி, வீதிப் போராட்டத்தில் குதித்து, தலைநகரை உலுக்கிவிட்டார். பேருந்துகள் ஓடவில்லை. 4 முக்கிய மெட்ரோ ரயில் நிலையங்கள் இயங்கவில்லை. மக்கள் நெடுநடையில் அல்லலுற்றார்கள்.

ஆம் ஆத்மி ஆட்சியில் பொற்காலம் மலரப் போகிறது என்று உவகையுடன் எதிர்பார்த்தவர்கள், ஒருசில நாள்களிலேயே கலங்கிப் போனார்கள்.

“

**ஊழல் ஒழிப்புக்காக மக்களுக்குத் தொலைபேசி வழியாக ஆலோசனை வழங்கும் சேவையை அறிவித்தார். லஞ்சம் வாங்குபவர்கள் பொறி வைத்துப் பிடிக்கப்படுவார்கள் என்றார். முதல் நாளே ஏக வரவேற்பு. தொடர்ந்து இயங்குவதற்குள், கெஜ்ரிவால் அரசே போராட்டத்தில் இறங்கிவிட்டது. நிர்வாகமே நிலைகுலைந்திருந்த போது, லஞ்ச ஒழிப்பு சேவையை எப்படி வழங்க முடியும்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தான் கடுமையாக விமர்சித்த காங்கிரஸ் கட்சி ஆதரவுடன் (கருத்துக் கணிப்பில் மக்கள் ஆதரவு இருப்பதாகச் சொல்லி), வீட்டிலிருந்து மெட்ரோ ரயிலில் வந்து, முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டார் அரவிந்த் கெஜ்ரிவால். பதவியேற்ற உடனே, தில்லி குடிநீர் நிர்வாகத் தலைமை அதிகாரியை மாற்றிவிட்டு, மாதம் 20,000 லிட்டர் இலவசக் குடிநீர் என்று அறிவித்தார்.

இது மீட்டர் பொருத்திய வீடுகளில் வசிக்கும் குடும்பங்களுக்கே பொருந்தும். மற்றவர்களுக்கு எப்படி இலவசக் குடிநீர் கிடைக்கும்? நகரை ஒட்டியும், எல்லையிலும் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் வழங்கப் போதுமான நீரேற்று நிலையங்களே இல்லை என்பது போன்ற விமர்சனங்களுக்கு கெஜ்ரிவாலிடமிருந்து உரிய பதில் வந்ததாகத் தெரியவில்லை.

ஊழல் ஒழிப்புக்காக மக்களுக்குத் தொலைபேசி வழியாக ஆலோசனை வழங்கும் சேவையை அறிவித்தார். லஞ்சம் வாங்குபவர்கள் பொறி வைத்துப் பிடிக்கப்படுவார்கள் என்றார். முதல் நாளே ஏக வரவேற்பு. தொடர்ந்து இயங்குவதற்குள், கெஜ்ரிவால் அரசே போராட்டத்தில் இறங்கிவிட்டது. நிர்வாகமே நிலைகுலைந்திருந்த போது, லஞ்ச ஒழிப்பு சேவையை எப்படி வழங்க முடியும்?

தனியார் தொலைக்காட்சி செய்த ரகசியப் பொறி நடவடிக்கையின் அடிப்படையில், லஞ்சம் வாங்கியதாக மூன்று அதிகாரிகளை இடைநீக்கம் செய்தார் முதல்வர் கெஜ்ரிவால். பல்துறைகளில் பணியாற்றிய 800 அரசு ஊழியர்களை இடமாற்றம் செய்தார்.

சனிக்கிழமை தோறும் பொது இடத்தில் நேரில் மக்கள் குறை கேட்பேன் என்று அறிவித்து, ஒரு சனிக்கிழமை ஜனதா தர்பார் நடத்தினார். முறையாகத் திட்டமிடாததால், தள்ளுமுள்ளு. பாதியில் முடித்துக்கொண்டு கிளம்ப வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். இனி, பொதுமக்கள் ஆன்லைனில் (இணையம் வழியாக) குறைகளைப் பதிவு செய்ய வேண்டும், ஜனதா தர்பார் கிடையாது என்பது அடுத்த அறிவிப்பு.


முதல்வர் கெஜ்ரிவாலுடன் பதவியேற்ற சட்ட அமைச்சர் சோம்நாத் பாரதி, தமக்கு வந்த தகவலின் அடிப்படையில் நள்ளிரவில், ஆப்பிரிக்க நாடான உகாண்டாவைச் சேர்ந்த பெண்கள் வசித்த பகுதியில் நேரில் சென்று சோதனையிட்டிருக்கிறார். இரவு நேரம், பெண்கள் குடியிருப்புக்கு நேரில் சென்று சோதனையிட வாரண்ட் வேண்டும். அதனால் அவ்வாறு செய்ய முடியாது என்று காவல் துறை அதிகாரிகள் மறுத்ததன் காரணமாக இவரே தமது ஆதரவாளர்கள் புடைசூழ சென்றிருக்கிறார். பாலியல் தொழில் செய்கிறார்கள், போதை மருந்து விற்பனை செய்கிறார்கள் என்பது சோம்நாத் பாரதியின் குற்றச்சாட்டு. மறுநாள் தொலைக்காட்சியில் பார்த்துவிட்டு தங்களிடம் கடுமையாகவும் அத்துமீறியும் நடந்தது சோம்நாத் பாரதிதான் என்று உகாண்டா பெண்கள் அடையாளம் காட்டி விட்டார்கள். அதன் பேரில் புகாரும் பதிவாகியிருக்கிறது. ஆப்பிரிக்க பெண்களை நிறபேத அடிப்படையில் பேசியதாகவும் குற்றச்சாட்டு. அதற்காக அந்நாட்டுப் பெண்கள் தில்லியில் ஆர்ப்பாட்டமும் நடத்தினார்கள்.

இந்தப் பிரச்சினையில் சட்ட அமைச்சர் சொல்லியும் காவல் துறை அதிகாரிகள் கீழ்ப்படியவில்லை என்பதுதான் முதல்வர் கெஜ்ரிவால் தர்ணா செய்யக் காரணம். வரும்போதே பத்து நாள்களுக்கு வேண்டிய துணிகளை எடுத்து வந்துவிட்டேன் என்று பிரகடனம் செய்தவாறு தர்ணாவில் இறங்கிய கெஜ்ரிவால், 36 மணி நேரத்தில் இடத்தைக் காலி செய்துவிட்டார்.

நாடாளுமன்றத்துக்கு அருகிலுள்ள இடம் இது. அதனால் போராட்டத்தை வேறு இடத்துக்கு மாற்றுங்கள் என்று மத்திய உள்துறை அமைச்சர் சுசில்குமார் ஷிண்டே கேட்டுக்கொண்டார்.

தில்லியின் முதல்வர் நான். எங்கிருந்து போராடுவது என்று தீர்மானம் செய்யும் உரிமை எனக்கே உண்டு. எனக்குச் சொல்ல அவர் யார்? உண்மையில் சொன்னால், அவர் எங்கே இருக்க வேண்டும் என்பதை நான்தான் தீர்மானிக்க முடியும் என்றார் கெஜ்ரிவால்.

போராட்டத்தை விலக்கிக்கொள்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவீர்களா என்ற கேள்விக்கு, இது ஒன்றும் மளிகைக் கடை அல்ல, பேரம் பேசுவதற்கு என்று கொந்தளித்தார் கெஜ்ரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஆம் ஆத்மியின் போராட்டத்தை விமர்சித்த பா.ஜ.க தலைவர் அருண் ஜெட்லி முகத்தில் காறித் துப்ப நினைக்கிறேன் என்ற சோம்நாத் பாரதி, மக்கள் உங்களை அடித்து உதைப்பார்கள் என்று எச்சரிக்கையும் விடுத்தார்.**

போராட்டத்துக்கிடையே தனது வேகன் ஆர் காரில், அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தினார் முதல்வர் கெஜ்ரி. போராட்டத்தின் போது, அருகிலிருந்து ரயில் பவனில் ஆடவர் கழிவறை மூடப்பட்டதால், மகளிர் கழிவறையை சட்ட அமைச்சர் சோம்நாத் பாரதி பயன்படுத்தினார் என்பது போன்று ஊடகங்களில் பதிவான செய்திகள் பல.

ஆம் ஆத்மியின் போராட்டத்தை விமர்சித்த பா.ஜ.க தலைவர் அருண் ஜெட்லி முகத்தில் காறித் துப்ப நினைக்கிறேன் என்ற சோம்நாத் பாரதி, மக்கள் உங்களை அடித்து உதைப்பார்கள் என்று எச்சரிக்கையும் விடுத்தார்.

ஆம் ஆத்மியின் இளம் தலைவர்களில் முக்கியமானவர் குமார் விஸ்வாஸ். மக்களவைத் தேர்தலில் ராகுல் காந்தியை எதிர்த்து இவர் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர் செவிலியர்கள் பற்றி ஆபாசமாகப் பேசியதைக் கண்டித்து பல நகரங்களில், செவிலியர்கள் துடைப்பத்துடன் போராட்டம் நடத்தினர்.

வட இந்திய செவிலியர்கள் சிவப்பாக இருப்பார்கள். கேரள செவிலியர்கள் கறுப்பாக இருப்பதால் அவர்களை சிஸ்டர் என்றுதான் சொல்ல முடியும் என்று அவர் பேசியதாகக் குற்றச்சாட்டு. போராட்டம் வலுத்ததன் விளைவாக, குமார் விஸ்வாஸ் பகிரங்க மன்னிப்பு கேட்டார்.


தில்லியில் ஆம் ஆத்மி போராட்டம் தீவிரமாக இருந்த வேளையில், தமிழகத்தில் அக் கட்சியில் கோஷ்டிப் பூசல் உச்சத்தில் இருந்தது. நான்கு குழுக்கள் ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டு. ஆளாளுக்கு அலுவலகம் போட்டு உறுப்பினர் சேர்ப்பு. மேலிடத் தலைவர் பிரசாந்த் பூஷண் வந்தார். கீழ்ப்பாக்கத்தில் செயல்படுவது தான் அதிகாரப்பூர்வ அலுவலகம் என்று அறிவித்தார். அவர் முன்னிலையிலேயே, அதிகாரப்பூர்வ குழுவுக்கு எதிராகக் கணக்கு கேட்டு எதிர் அணியினர் சச்சரவைக் கிளப்ப, ஜனநாயகத்தையும் வெளிப்படைத்தன்மையையும் உரக்கப் பேசிய ஆம் ஆத்மியின் கொள்கைக்கு முரணாக, பூஷண் ரகசியமாக பின்வாசல் வழியாக அவசரமாக அழைத்துச் செல்லப் பட்டார்.

தமிழக ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் கிறிஸ்டினா 200 கோடி ரூபாய்க்கு சொத்துகளை வாங்கிக் குவித்துள்ளார் என்று ஆணையர் அலுவலகத்தில் எதிர் அணியினர் புகார் அளித்திருக்கிறார்கள். சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்றும் கோரியிருக்கிறார்கள்.

கெஜ்ரி வீதிப் போராட்டத்துக்கு ஓரிரு நாள் முன்பு, அவர் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் வினோத்குமார் பின்னி கெஜ்ரிவால் ஒரு பொய்யர். தில்லி மக்களை முட்டாளாக்கும் செயலை அவர் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். அளித்தபடி வாக்குறுதிகளை கெஜ்ரிவால் நிறைவேற்றாவிட்டால், ஜனவரி 27ஆம் தேதி முதல் பட்டினிப் போராட்டத்தில் இறங்குவேன் என்று வினோத்குமார் அறிவித்தார்.

அமைச்சர் பதவி தரவில்லை என்ற அதிருப்தியில் வினோத்குமார் பேசுகிறார் என்று பதிலடி கொடுத்த கெஜ்ரி, உடனே போராட்டத்தை அறிவித்துவிட்டார்.

ஜனவரி 26ஆம் தேதி குடியரசு தினம். எனவே அதற்கு இடையூறு ஏற்படுத்துவது போலத் தனது போராட்டம் அமைந்துவிடக் கூடாது என்று கருதி வினோத்குமார் 27ஆம் தேதி முதல் போராட்டம் என்று அறிவித்ததாகக் கருதலாம். ஆனால், சட்டப்படி இப்படியான



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போராட்டத்தில் ஈடுபடக்கூடாத முதல்வர் கெஜ்ரிக்கு அத்தகைய யோசனை வராமல் போனது தில்லியின் சோகம்.

அறிவித்தபடி 27ம் தேதி வினோத்குமார் போராட்டத்தைத் தொடங்கிவிட்டால்? கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறி 26ஆம் தேதியே அவரைக் கட்சியிலிருந்தே நீக்கிவிட்டார் கெஜ்ரி.

ஷிண்டே மற்றும் பா.ஜக தரப்பிலிருந்து கிளம்பிய விமர்சனங்களுக்குப் பதிலளித்த கெஜ்ரி, ஆம். அவர்கள் சொல்வது போல, நான் அராஜகவாதிதான். அதனால்தான் ஷிண்டே வீட்டுப் பகுதியில் அராஜகத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறேன்.. என்று குறிப்பிட்டார்.

ஒரு முதல்வரே தன்னை அராஜகவாதி என்று பகிரங்கமாக அறிவித்துக் கொள்வது இந்திய ஜனநாயகத்தின் எந்தப் பிரிவில் சேரும்? அரசியல் பார்வையாளர்கள் கிறுகிறுத்துப் போனார்கள்.

பதவிக்கு வந்த ஒரே மாதத்தில் இவ்வாறாகப் பல நிலைகளில் ஆம் ஆத்மி ஆட்சி செய்வதற்குரிய குறைந்தபட்ச பக்குவமும் அரசியல் போதாமையும் இல்லாததை மிக மோசமாகப் பதிவு செய்திருக்கிறது.

பதவியேற்ற பதினைந்து நாள்களுக்குள் ஜன லோக்பால் மசோதாவை நிறேவேற்றுவோம் என்று கெஜ்ரி அறிவித்ததை அவரது கட்சித் தொண்டர்களே எத்தனை பேர் இப்போது நினைவில் வைத்திருப்பார்கள் என்று தெரியவில்லை. இது சார்ந்து எவரும் கேள்விகள் எழுப்ப வாய்ப்பளிக்காத வகையில், சாதுரியமாக வேறு பிரச்சினைகளை முன்நகர்த்திச் சென்றார் கெஜ்ரி.

ஊழல் எதிர்ப்பை மட்டுமே மையப்படுத்தி அண்ணா ஹஸாரே மேற்கொண்ட களப் போராட்டங்களை பல்வேறு நிலைகளில் வடிவமைத்து மக்களிடையே உரிய தாக்கத்தை ஏற்படுத்துவதில் முன்னின்று செயல்பட்ட பிரமுகர்களில் ஒருவராகவே கெஜ்ரி அறிமுக மானார். பின்னர், அண்ணாவே எதிர்பாராத வகையில், அவரைக் கடந்து சென்று அரசியல் கட்சியைத் தொடங்கினார். அண்ணாவிட மிருந்து விலகி வந்தார். அவரும் இவரைத் தள்ளி வைத்தார். தில்லி சட்டப்பேரவைத் தேர்தல் வெற்றிக்குப் பிறகு, வாழ்த்துகளோடு முடித்துக் கொண்டார் அண்ணா. ஆனால், தனது கட்சிக்கு மூலவித்தாக இருந்த அண்ணாவின் முகத்தை, சாயலை மிக நுட்பமாக அழித்து ஆம் ஆத்மி தன்னெழுச்சியில் பிறந்த அரசியல் இயக்கம் என்பது போன்ற தோற்றத்தை வெற்றிகரமாக உருவாக்கியிருக்கிறார் கெஜ்ரி.

மறுபடியும் தேர்தல் வைத்தால் தனிப் பெரும்பான்மையுடன் வரலாம் என்று முதலில் கருதிய கெஜ்ரி, பின்னர் அதன் சாத்தியத்தின் ஐயம் அறிந்து, மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தி காங்கிரஸ் ஆதரவுடன் ஆட்சி அமைத்தார். ஆட்சி அமைக்காமல் எதிர்க்கட்சியாக அமர்ந்தால், தனது போராட்ட அரசியலைத் தொடர்வதற்கு எளிதாக இருக்கும் என்று நினைத்தார் கெஜ்ரி. ஆனால் காங்கிரஸ் தானே முன்வந்து ஆதரவளித்ததும் அது முடியாமல் போனது. உடனே இன்னொரு தேர்தலுக்கு கெஜ்ரிதான் காரணம் என்ற பழி வந்துவிடக்கூடாது. அதனால் காங்கிரஸ் ஆதரவுடன் ஆட்சி அமைத்தார். எனினும் காங்கிரஸ் கட்சியே தன்னால் ஆதரவை விலக்கிக் கொண்டால், தமது ஆட்சி கவிழும். அதனால் எழும் சூழ்நிலை, அரசியல்ரீதியாக லாபமாக இருக்கும் என்று கணக்குப்போட்டார். அது கருதியே காங்கிரஸ் தலைமையிலான மத்திய ஆட்சிக்கு எதிராகப் போராட்டத்தில் இறங்கி நெருக்கடிகளை உருவாக்கினார். இதனால் காங்கிரஸ் ஆதரவை விலக்கிக்கொண்டால், மக்களவைத் தேர்தலிலும் ஒரு சுற்று தனது பலத்தைச் சோதித்துக் கொள்ளலாம். கணிசமான இடங்களில் வெற்றி கிட்டினால், தேர்தலுக்குப் பிறகு இதர மாநிலக் கட்சிகளைப் போல ஆம் ஆத்மிக்கும் பேரம் பேசும் சக்தி அதிகம் கிடைக்கும். தில்லி முதல்வர் என்ற நிலையைக் காட்டிலும் உயரமான அரசியல் புள்ளிக்கு வேகமாக நகர முடியும் என்பது கெஜ்ரியின் கணக்காக இருக்கலாம்.

ஆனால், கெஜ்ரி பிறப்பதற்கு முன்பே தோன்றிய பழுத்த பேரியக்கமாயிற்றே காங்கிரஸ். அத்தனை எளிதில் கெஜ்ரி காய்களை நகர்த்த விட்டுவிடுமா, என்ன? எட்டு உறுப்பினர்களுடன் ஆம் ஆத்மிக்கு ஆதரவளித்து கெஜ்ரியை முதல்வராக்கியது காங்கிரஸுக்கு அரசியல்ரீதியாக கிடைத்த முதல் வெற்றி. அதன் மூலம் ஒரே மாதத்தில், ஆம் ஆத்மி தலைவர்கள் தங்களைத் தாங்களே உரித்து, உரித்து அம்பலமாக்கும் நிலையை உருவாக்கியது காங்கிரஸின் கூடுதல் வெற்றி.

**ஆம் ஆத்மி** என்கிற புதிய அரசியல் சக்தியின் உண்மையான பலம் என்ன, பலவீனம் என்ன என்பது இப்போது வெட்டவெளிச்சமாகி விட்டது. ஆட்சி அமைக்காமல், எதிர்க்கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையில் அமர்ந்திருந்தால், அது மிகப் பெரும் அரசியல் சக்தியாக வளர்ந்துவிடுமோ என்ற தோற்றம் ஊதிக் கொண்டேயிருக்கும். அதற்கு வாய்ப்பில்லாமல் செய்துவிட்டது காங்கிரஸ்.

முதலில் மக்களவைத் தேர்தல் பற்றி எதுவும் பேசாத ஆம் ஆத்மி, இப்போது 300 மக்களவைத் தொகுதிகளில் போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்திருக்கிறது. இதற்காக நாடெங்கும் 325 கட்சி அலுவலகங்கள் ஏற்கெனவே திறக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. குறைந்த பட்சம் 125 இடங்களைப் பெற்று மூன்றாவது சக்தியாக உருவெடுத்தால், மத்திய ஆட்சியைக் கைக்கொள்ளலாம் என்று ஆம் ஆத்மி கணக்குப் போடுவதாகக் கூறப்படுகிறது. மக்களவைத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று கூறிய கெஜ்ரி, பின்னர், கட்சி விரும்பினால் போட்டியிடுவேன் என்று அறிவித்தார். நமக்குப் பரிச்சயமான பொதுக்குழு கூடி முடிவெடுக்கும் என்கிற பாணியிலான அறிவிப்பு இது. மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் மிகக் குறைவான இடங்களையே கைப்பற்றும். அதைவிடக் கூடுதலாக இருந் தாலும், தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் அளவுக்கு பா.ஜ.க வெற்றி பெற முடியாது. நூறிலிருந்து நூற்றைம்பது இடங்கள் வரை மாநிலக் கட்சிகள் வெற்றிபெறும் சூழ்நிலை உருவாகும். அக்கட்சிகளே தீர்மானிக்கும் சக்திகளாக இருக்கும் என்பதுதான் ஊடகங்கள், கருத்துக் கணிப்புகள் மற்றும் அரசியல் பார்வையாளர்களின் இப்போதைய பதிவாக இருக்கிறது.

ஒருவேளை, ஆம் ஆத்மி மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டாலும் அது தில்லியில் வெற்றி பெறலாம். வட இந்திய மாநிலங்களில் சில தொகுதிகளில் வாக்குகளைப் பிரிக்கலாம். மற்றபடி தேசிய அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த சாத்தியமில்லை என்றே அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள். ஆம் ஆத்மிக்கும் இது புரியும். என்றாலும், உடனடி வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறது. தனது இயக்க வரம்பை தில்லியோடு நிறுத்திக்கொள்வதா அல்லது அது கடந்தும் செல்வதா என்பதை மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு ஆம் ஆத்மி முடிவு செய்யலாம்.

காங்கிரஸ் கட்சியைப் பொருத்தவரை அநேகமாக மக்களவைத் தேர்தலுக்கு முன்பு, ஆம் ஆத்மி ஆட்சியைக் கவிழ்க்காது என்று எதிர்பார்க்கலாம். ஆனால் ஆம் ஆத்மி தேர்தலுக்கு முன்பு ஆட்சியை இழப்பதற்கான சாத்தியங்களை வெவ்வேறு விதங்களில் நிச்சயமாக உருவாக்கும். வினோத் குமார் பின்னியை நீக்கியதுகூட அந்த வகையான முயற்சியே. ஆம் ஆத்மியின் 28 உறுப்பினர்கள், காங்கிரஸின் எட்டு உறுப்பினர்கள் ஆதரவுடன் சேர்த்து 36. ஆட்சி அமைப்பதற்கான குறைந்தபட்ச பெரும்பான்மை 36. (மொத்த இடங்கள் 70). இப்போது வினோத் குமார் பின்னியை கட்சியிலிருந்து நீக்கியிருப்பதன் மூலம், ஆட்சியின் பலம் 35 ஆகக் குறைந்திருக்கிறது. காங்கிரஸ், பா.ஜ.க அல்லாத யாராவது ஓர் உறுப்பினர் (இருக்கும் மூன்று பேரில்) ஆதரவளிக்க வேண்டும். இல்லையெனில், நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தால் ஆம் ஆத்மி கட்சி ஆட்சியை இழக்கும்.

என்ன நடக்கும்? யாருக்கும் தெரியாது!

ஆம் ஆத்மியின் நுழைவு, அரசியலில் அனுவம் தோய்ந்த காங்கிரஸ், பா.ஜ.க, இடதுசாரிகள் மற்றும் ஆட்சியிலிருக்கும், இருந்த மாநிலக் கட்சிகளுக்கும் புதிய சவாலை உருவாக்கியிருக்கிறது என்பது உண்மை.

ஊழலும் முறைகேடுகளும் மலிந்துபோன இன்றைய நிலையில், அரசியல் வட்டாரத்தில் ஓர் அதிர்வை ஏற்படுத்தி, கட்சிகள் தங்கள் செயல்பாட்டை மறு ஆய்வுக்கு உட்படுத்தும் நிலையை ஆம் ஆத்மி உருவாக்கியிருக்கிறது என்பதையும் மறுக்க முடியாது.

எனினும் ஆம் ஆத்மிக்கும் இன்னொரு ஆம் ஆத்மி தேவையோ என்கிற சிந்தனையை இத்தனை விரைவில் கெஜ்ரி ஏற்படுத்தி யிருப்பதுதான், புதிய அலை ஆதரவாளர் களிடமும் அதைக் கடந்தும் பெருத்த ஏமாற்றத்தை உருவாக்கியிருக்கிறது.

ஆம் ஆத்மியின் ஒரு மாத கால ஆட்சிப் பதிவு, புதிதாக அது போன்ற புத்தெழுச்சி இயக்கங்கள் தோன்றுவதை ஊக்குவிப்பதாக அமையவில்லை. மேலும், அவ்வாறு ஏதேனும் தோன்றினாலும் அதன் நம்பகத் தன்மையை கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது; கேலிக்குள்ளாக்கியிருக்கிறது. இந்திய அரசியல் வட்டாரத்தில் பெரும் வியப்பை ஏற்படுத்திய ஆம் ஆத்மி, அதே வேகத்தில் ஏமாற்றத்தையும் உருவாக்கியிருக்கிறது.

துடைப்பத்துடன் வந்தார் கெஜ்ரி. வாசலைக்கூடப் பெருக்கவில்லை. வேறெங்கோ விரைகிறார், வேகமாக.

துடைப்பமும் அப்படியே கிடக்கிறது, குப்பையைப் போல. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.சந்திரசேகரன் 

# இயற்கை வேளாண்மையின் அடையாளம் நம்மாழ்வார்



1990களின் முற்பகுதியில் திருச்சி-புனித வளனார் கல்லூரியில் தன்னார்வக் குழுக்களின் கூட்டு முயற்சியில் நடைபெற்ற இயற்கை வேளாண்மை சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கில் தான் அய்யா நம்மாழ்வார் அவர்கள் எனக்கு முதன் முதலாய் அறிமுகம்.

நான்,தோழர் முத்தையா,நண்பர்கள் நடேசன், கே.எம்.வேணுகோபால் ஆகியோர் அந்நிகழ்வுகளில் கலந்து கொண்டோம். நண்பர் நடேசன் தான் எனக்கு நம்மாழ்வார் அவர்களை அறிமுகம் செய்துவைத்தார்.

விவசாய விஞ்ஞானம் படித்தவர்; அரசுப் பதவியில் இருந்து பின்பு அதைத் துறந்தவர் என்கிற எந்த அடையாளமுமின்றி ஒழுங்கு படுத்தப்படாத தாடியும் மீசையும் தலைமுடியும் மண்டிக்கிடந்த அவரது தோற்றம் மிகச் சாதாரண எளிய ஒரு விவசாயி போலவே இருந்தது. அந்த அறிமுகத்தில் அவரோடு பகிர்ந்து கொள்ளவும் பழகவுமான வாய்ப்புக் கிடைக்கவில்லை.

அதன்பிறகு 1990களின் பிற்பகுதியில் வல்லம்-பெரியார் மணியம்மை பொறியியற் கல்லூரியில் நம்மாழ்வாரைச் சந்தித்தேன். பல்லுயிர் பெருக்க வேளாண் வித்தகர் டாக்டர் சதாசிவம் ஐயா அந்தக் கல்லூரியின் சுற்றுச் சூழலை பசுமையாக்கும் பணியில் அர்ப்பணித்துக் கொண்டிருந்த நேரம் அது.அப்போது சதாசிவம் அவர்கள் என்னை நம்மாழ்வார் அவர்களுக்கு அறிமுகம் செய்தார். இது இரண்டாவது அறிமுகம் எனக்கு.

அதே தாடி,மீசை,கலைந்த தலைமுடி, கழுத்துக் கயிறு கட்டிய கண்ணாடி, வெள்ளையாய் வேட்டி சட்டை, உட்கார்ந் திருக்கும்போது கூட தோளை விட்டு இறங்காத் தோல்பை, வாஞ்சையும் நெகிழ்வும் கலந்துவரும் வஞ்சம் சூது இல்லாத கிராமத்துத் தமிழ்; எல்லாம் அவரிடம் என்னை இழக்கச் செய்திருந்தது.

வல்லம்-பெரியார் மணியம்மை கல்லூரியில் பசுமையைப் பெருக்கிக்கொண்டே செங்கிப் பட்டிக்கருகில் உள்ள சோளகம்பட்டியில் டாக்டர் சதாசிவம் தற்போது உருவாக்கி யிருக்கும் விலைமதிப்பிட முடியாத வனவளத்துக்கு விதை ஊன்றிக் கொண்டிருந்த நேரமும் அது.

விதையாய்,நாற்றாய்,கன்றாய்,செடியாய் காட்சி அளித்துக் கொண்டிருந்த அந்தத் தரிசு நிலத்தை ஒரு காலைப் பொழுதில் எனக்கும் நம்மாழ்வார் அவர்களுக்கும் சுற்றிக் காட்டினார். அந்தத் தரிசில் முளைத்துக் கிடந்த அருகம் புல்லில் இருந்து கொழுஞ்சிச் செடிவரை ஒவ்வொன்றின் தாவர இயல்பையும் மூலிகைப் பயனையும் சொல்லிச் சொல்லி வியக்க வைத்தார்.

மறக்க முடியாத அந்த நாளின் தொடர்ச்சியாக 'நிலவளம்' இதழில் அவருடைய நேர்முகம் ஒன்றைப்பதிவு செய்தேன். அதன்பிறகு அவரை விழாக்களிலும் பொது நிகழ்வுகளிலும் சந்தித்து மகிழ்கிற வாய்ப்பே எனக்கு வாய்த்தது.

ஆனால், அவரது தொண்டும் பணியும் வளர்ச்சியும் விவசாய மக்களோடு மக்களாக கலந்த எளிய வாழ்வும் பாரம்பரிய வேளாண்மைக்கு ஆதரவான போர்க்குணமும் தமிழ்நாட்டு இயற்கை வேளாண்மையின் அடையாளமாகவும் குறியீடாகவும் அவரை உயர்த்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரைமணி நேரத்துக்கு ஓர் உழவன் தற்கொலை செய்து கொள்கிற அவலம் சூழ்ந்த நாட்டில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுவிட்டதாகச் சொல்வது வெட்கக்கேடு இல்லையா என்று உரத்துக்குரல் எழுப்பியவர்.

அதிலும் சட்டை அணியாத உடலும்; வெண்பஞ்சு போன்ற தாடியும் மீசையும் அதன் வனப்பும்; வெள்ளைத் தலைப்பாகையின் காவிநிற வேட்டியின் பச்சை மேலாடையும்; வாஞ்சை கொஞ்சும் பேச்சும் அவரது களப்பணி, எதிரிகளையே மண்டியிடச் செய்தது.

அதன்பிறகு அவரது பேச்சு ஒவ்வொன்றும் ஒவ்வொரு பதிவானது.

1960களில் நடந்தது பசுமைப் புரட்சி அல்ல; அது பச்சைப் புரட்சி என்று பட்டவர்த்தனமாகப் போட்டு உடைத்தவர்.

இந்திய வேளாண்மை கெட்டு அழிந்து போனதற்குக் காரணம்,பச்சைப் புரட்சிதான் என்று தம் வாழ்நாள் முழுவதும் பரப்புரை செய்தவர்.

அரைமணி நேரத்துக்கு ஓர் உழவன் தற்கொலை செய்து கொள்கிற அவலம் சூழ்ந்த நாட்டில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுவிட்டதாகச் சொல்வது வெட்கக்கேடு இல்லையா என்று உரத்துக்குரல் எழுப்பியவர்.

பட்டினிச் சாவுகளுக்கு பஞ்சமோ, பாரம்பரிய வேளாண்மையோ காரணம் இல்லை. அரசின் தவறான உணவுக் கொள்கைகளே காரணம் எனச் சுட்டு விரலை நீட்டியவர்.

அரசியலுக்குள் ஆட்பட்டுவிடாமல் உழைக்கும் மக்களை ஒருங்கிணைக்கும் காலம்தான் தொண்டு நிறுவனங்கள் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தவர்.

இயற்கை வேளாண்மை என்பது தொழில் அல்ல;அது ஒரு வாழ்வியல் நெறி என்பதை வாழ்நாள் முழுவதும் மக்களுக்குச் சொன்னவர்; அதற்கு உதாரணமாய் வாழ்ந்தும் காட்டியவர்.

வெறும் களப்பணியாளராக மட்டும் இல்லாமல் தேர்ந்த படிப்பாளியாய் வாசிப்பை நேசித்தவர்.

இரசாயன பூச்சிக்கொல்லிகள் பூச்சிக் கொல்லிகளே அல்ல;அது விளை நிலத்தை வீணாக்கும் நஞ்சு என்பதை ஊரைக் கூட்டிச் சொன்னவர்.

மரங்களை வெட்டலாமா? அது மனித குலத்துக்கு தீங்கில்லையா? எனக் கவித்துவமாய்த் தலைப்பு எழுதிக் கொண்டிருந்த என் போன்றோரின் பேனாக்களைப் பிடுங்கி 'மரம் மக்களுக்குக் கிடைத்த வரம்' என ஆத்திசூடித் தமிழை எழுத வைத்தவர்.

தந்தை பெரியாரையும் மகாத்மா காந்தியடிகளையும் வாழ்வியல் வழிகாட்டிகளாகக் கொண்டு வாழ்ந்த நெறியாளர்.

கால்போன போக்கில் எல்லாம் போய் களப்பணி ஆற்றியவர் என்றாலும் அதில் வாழ்வாங்கு வாழ்ந்து திளைத்தவர்.

தனது வாழ்வும் பணியும் தன்னோடு முடிந்துவிடக் கூடாது எனக் கருதி ஆயிரக்கணக்கான இயற்கை ஆர்வலர்களை தமிழ் மண்ணில் பதியம் போட்டு வைத்திருந்தவர்.

தமிழ்ச் சாதியினரால் காலம் முழுவதும் கொண்டாடப்படக் கூடியவர்.நமது அரசுகளாலும் அரசாங்கங்களாலும் அவர் வாழும் காலத்தில் கொண்டாடத் தவறியவர். அரை நூற்றாண்டுக்காலம் இயற்கையை நேசித்தவர்; அதனால் இயற்கையின் நேசிப்பையும் பெற்றவர்.

சாதனைகளால் சரித்திரமாகி 2013 டிசம்பர் 30 ஆம் நாளன்று இயற்கையோடு கலந்துவிட்ட நம்மாழ்வார், 2014 சனவரி 1ஆம் நாள் அன்று கடவூரில் அவர் உருவாக்கிய கானகத்தில் ஒரு வேப்பமரக் கன்றுக்குக் கீழே விதைக்கப் பட்டிருக்கிறார்;

அந்த வேம்புக்கு உரமாகி,உயிராகி வேப்பமரக் காற்றாய் தமிழகத்தில் வீசுவார்.

நம்மாழ்வார் பெயர் இருக்கும் வரை தமிழ்நாட்டில் இயற்கை வேளாண்மை நிலைத்திருக்கும்; தமிழ்நாட்டில் கடைசி உழவன் இருக்கும் வரை நம்மாழ்வார் பெயரும் நிலைத்திருக்கும்.

**– கட்டுரையாளர் 'நிலவளம்' இதழின் ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தங்களுக்கு காவல்துறை ஒத்துழைக்க முற்றிலும் மறுப்பதாகவும், எனவே காவல் துறையை தங்களது கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என்று தெருவில் அமர்ந்து ஒரு முதல்வர் போராடுகிறார். தில்லி யூனியன் பிரதேசத்தின் கட்டுப்பாட்டில் காவல்துறையை ஒருபோதும் கொண்டு வர முடியாது என்று இந்தியாவின் உள்துறை அமைச்சர் மறுக்கிறார். ஒத்துழைக்க மறுக்கும் காவல்துறையை வைத்துக் கொண்டு தில்லி மாதிரி இடங்களில் சட்டம் ஒழுங்கை பாதுகாத்துவிட முடியுமா? என்னதான் இதற்கு தீர்வாக முடியும்?**

**- கருப்பையா, சேலம்**

இதில் மூன்று அம்சங்கள் உள்ளன. முதல் அம்சம் ஒரு மாநில முதல்வர் தெரு மறியல் செய்து மத்திய அரசுக்கு எதிராகப் போராடலாமா என்ற கேள்வி. வன்முறை இல்லாமல் அறவழியில் போராடும்வரை இப்படிப்பட்ட போராட்டங்களை நான் எதிர்க்கமாட்டேன். இதுவரை முதலமைச்சர்கள் மாநில உரிமைகளுக்காகக் கடிதம் எழுதுவது, உண்ணாவிரதம் இருப்பது, மாநிலம் முழுவதும் அரசின் சார்பிலேயே முழு கடை அடைப்பு செய்வது என்று போராடியதையெல்லாம் விமர்சிக்காமல் தெருவுக்கு வந்து ஒரு முதல்வர் போராடும்போது மட்டும் விமர்சிப்பது உள்நோக்கம் உடையது. சாதாரண மக்களின் எதிர்பார்ப்புகளை தூண்டிவிட்டு அவர்கள் ஆதரவில் பதவிக்கு வந்திருக்கும் ஒரு கட்சியும் முதல்வரும், தங்களால் சிலவற்றைச் செய்யமுடியாமல் அதிகாரம் மத்திய அரசிடம் குவிந்து கிடக்கும்போது, அந்த இயலாமையைப் பற்றி மறுபடியும் சாதாரண மக்கள் முன்னால்தான் விவாதிக்க வேண்டும். அந்த விவாதத்தை மேட்டுக்குடியினர் அளவில் நிறுத்திக் கொண்டால் விமர்சனம் வராது. சாதாரண மக்களிடம் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் எடுத்துச் சொன்னால், அதை நம் அமைப்பை கட்டுப்படுத்தும் பெருந்தலைகளால் தாங்கமுடியாது. அணு உலைகள் ஆபத்தானவை என்று அறிவுஜீவிகள் மத்தியில் எவ்வளவு விவாதித்தாலும் கண்டுகொள்ளாமல் இருப்பவர்கள், அதே விஷயங்களை சாதாரண மனிதர்களிடம் தெரிவித்து அவர்களைத் திரட்டினால் போலீசையும் ராணுவத்தையும் கொண்டு ஒடுக்குவார்கள். பிரச்சினைகளுக்கான அசல் காரணங்கள் பெருவாரியான மக்களிடம் போய் சேர்ந்துவிடக்கூடாது என்றே எப்போதும் அரசியல், கலாசார அமைப்புகளின் தலையில் உட்கார்ந்திருப்பவர்கள் நினைப்பார்கள். அவர்களால் ஒரு முதல்வர் சரியான






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்துக்காக சாலை மறியல் செய்வதை சகிக்க முடியாதுதான்.

இரண்டாவது அம்சம் அந்தக் காரணம் என்ன என்பதாகும். டெல்லி இந்தியாவின் தலைநகரம் என்பதால் அதன் பாதுகாப்பை தன் வசமே மத்திய அரசு வைத்துக் கொள்ளும் என்ற தர்க்கத்தில் அடிப்படையில் டெல்லி மாநில அரசுக்கு அங்கிருக்கும் காவல் துறையின் மீது எந்த கட்டுப்பாடும் இல்லை. தலைநகரின் பாதுகாப்பு மட்டும் தன் பொறுப்பு என்று மத்திய அரசு நினைப்பது நியாயமே அல்ல. தலைநகரின் குடிநீர், மின்சாரம், சாலை, கல்வி, சுகாதாரம் எல்லாவற்றுக்கும் பொறுப் பேற்காமல் காவல் வேலையை மட்டும் எடுப்பதுஎப்படி நியாயம்? எல்லாவற்றையும் ஏன் எடுக்கவில்லை? எல்லாமே அதன் வசம்தான் ஒரு காலத்தில் இருந்தன. யூனியன் டெரிட்டரியாக ஆக்கி அந்த வேலையைப் பகிர்ந்தது. அடுத்து மாநிலமாக ஆக்கி பெரும்பாலான வேலையிலிருந்து தன்னைக் கழற்றிக் கொண்டது. அதுதான் சரி. அப்படிச் செய்தபோது காவல் பொறுப்பையும் மாநில அரசிடமே ஒப்படைத்திருக்க வேண்டும். வேண்டுமானால் பிரதமர் , குடியரசுத்தலைவர் வளாகங்கள், வெளி நாட்டு தூதரகங்கள், மத்திய அரசு அலுவலகங்கள் வரையில் மட்டும் தனியே தன் துணை ராணுவப் படையைக் காவலில் வைத்திருக்கலாம். மீதி எல்லா இடங்களையும் மாநில அரசின் பொறுப்பில் விட்டிருக்க வேண்டும். இதை செய்யும்படி இதற்கு முன்பு பல முதல்வர்கள் கடிதம் எழுதியும் கோரியும் நடவடிக்கையே இல்லை. எனவேதான் ஆம் ஆத்மி தெருவுக்கு வந்து போராட வேண்டியதாயிற்று.

மூன்றாவது அம்சம் ஒத்துழைக்காத காவல் துறையால் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து விடமுடியுமா என்பதாகும். காவல் துறை உண்மையில் சுயேச்சையாகவும் இல்லை. மத்திய , மாநில அரசுகளின் பிடியிலிருந்து விடுவித்து காவல் துறைக்கு சுயாட்சி அதிகாரமும் அதன் கூடவே மக்களுக்கு பதில் சொல்லியே ஆகவேண்டிய கட்டாயத்துடனான கண் காணிப்பு அமைப்பையும் ஏற்படுத்த வேண்டு மென்று பல பரிந்துரைகள் வந்துவிட்டன. உச்ச நீதிமன்றத் தீர்ப்பு கூட இருக்கிறது. அதை யெல்லாம் நிறைவேற்றாமல் காவல் துறை ஆட்சியிலிருக்கும் கட்சியின் ஏஜண்ட்டாக செயல்படுவது என்ற போக்கே நம் நாட்டில் பெரும்பலானன நிலைமை. அதுவும் மாறவேண்டும்.


**கால் நூற்றாண்டுக்கும் மேலாக சென்னை புத்தகக் கண்காட்சிக்கு போகிறீர்கள். இந்த ஆண்டு கண்காட்சி நமக்கு சொல்லும் செய்தி என்ன?**

**– பிரிட்டோ, மதுரை**

ஆரம்பித்து 37 வருடங்களாகத் தவறாமல் போகிறேன். பத்து வருடங்களுக்கும் மேலாக அங்கே நானே அரங்கு நடத்துகிறேன். சென்னைப் புத்தகக் காட்சியில அரங்கு வைத்த முதல் தமிழ்ப் பத்திரிகை என் இதழ்தான். 1986ல் சென்னை நகருக்கென்று ஏழு நாட்கள் என்ற வார இதழை நடத்தியபோது அதற்கென்று அரங்கு வைத்தேன். பின்னர் தீம்தரிகிட இதழுக்கு அரங்கு நடத்தினேன். பின்னர் தொடர்ந்து என் ஞானபாநு பதிப்பகம் சார்பாக அரங்கு நடத்திவருகிறேன். ஒவ்வொரு ஆண்டும் இந்த அரங்கில் மக்களிடம் தினசரி தேர்தல் நடத்தி ஏதேனும் ஒரு பொது விஷயம் குறித்த கருத்துக் கணிப்பைச் செய்து வருகிறேன். சென்னை புத்தகக் காட்சிதான் இன்று தமிழகத்திலேயே பெரியது. இதன் உந்துதலால் தான் பிற நகரங்களில் இத்தகைய காட்சிகள் தொடங்கப்பட்டன. மிக சிறிய எண்ணிக்கை யிலான கடைகளுடன் தொடங்கிய சென்னை நிகழ்வு இன்று பிரும்மாண்டமாகிவிட்டது.

புத்தகக்காட்சியில் சுற்றிவந்தால் நம் சமூகத்தின் ஒரு மினியேச்சர் அது என்பதை உணரலாம். எதிரெதிரான ரசனைகள், கருத்துகள், சித்தாந்தங்கள் எல்லாவற்றுக்கும் அங்கே இடம் இருப்பதை பார்க்கலாம். நம் சமூகமும் அப்படித்தானே இருக்கிறது. ஒரே இடத்தில் இத்தனையையும் பார்க்க ஒருவருக்குக் கிடைக்கும் வாய்ப்பு முக்கியமானது. ஆயுள் முழுக்க இன்னொரு பார்வை என்ன என்றே தெரியாமலே வாழ்ந்து முடித்துவிடக்கூடிய உலகில், இங்கே பிற பார்வைகளை ஒரு வாசகர் பரிச்சயமேனும் செய்ய வாய்ப்பிருக்கிறது. அது மாற்றத்தைக் கூட ஏற்படுத்தலாம். ஆரம்ப ஆண்டுகளை விட இப்போது நான் அதிகம் கவனிக்கும் மாற்றம், பலரும் குடும்பம் குடும்பமாகக் குழந்தைகளுடன் வந்து நூல் வாங்குவதாகும், இதை ஆரோக்கியமான







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியாகவே பார்க்கிறேன். சிறுவர் சிறுமியருக்கு நூலை வாங்கிக் கொடுத்துப் படிக்கச் சொல்லாமல், அவர்களுக்கான பட்ஜெட் தொகை இது என்று கொடுத்துவிட்டு அவர்களையே நூல்களைத் தேர்ந்தெடுக்கச் சொன்னால், நிச்சயம் அந்த நூல்களை தவறாமல் படிப்பார்கள் என்ற என் பிரசாரத்தைப் பல பெற்றோரும் பின்பற்றுவதைக் கண்டேன். புத்தகக்காட்சி இந்த ஆண்டு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் முன்னேறியிருந்தது. அதே சமயம் இந்த வளர்ச்சி, பெரும் வணிகர்களுக்கு மட்டுமே உதவுவதாக ஆகிவிடாமல், சிறு பதிப்பாளர்களுக்கும் உரிய இடம் இருப்பதாக நீடிப்பது அவசியம். சென்னைப் புத்தகக் காட்சி 37 வருடம் முன்னர் தொடங்கப்பட்டபோது அதை பெரிதும் வளர்த்தவர்கள் சிறு பதிப்பாளர்களே.

**மத்தியப் பிரதேச உள்துறை அமைச்சர் பாபுலால் கவுர் சென்னையில் பெண்கள் கவுரவமான உடை அணிவதாலும், ஆலயங்களுக்கு சென்று பக்தியோடு இருப்பதாலும்தான் இங்கு பாலியல் வன்முறைகள் குறைவாய் இருப்பதாகவும், அவரது மாநிலத்தில் பெண்கள் அப்படி இல்லாததால்தான் பாலியல் அசம்பாவிதங்கள் நடை பெறுவதாகவும் சொல்லி இருக்கிறார். இது பெண்களை இழிவு செய்யும் கூற்றாகாதா?**

**– அன்பு, சென்னை**

ஊழல் அரசியல்வாதிகளோடு சேர்ந்து உளறல் அரசியல்வாதிகளும் நாளுக்கு நாள் பெருகிவருகிறார்கள். இப்படிப்பட்ட அமைச்சர்களை எல்லாம் நாடு சகித்துக் கொள்ளத் தயாராய் இருந்தால்தான், பிஜேபி போன்ற கட்சிகளை ஆட்சியில் அமர்த்த முடிவு செய்யலாம். பாலியல் வன்முறையில் ஆண்களின் பங்கு என்ன என்பதைப் பற்றியே இந்த அமைச்சருக்கு துளியும் அறிவு இல்லை. அக்கறையும் இல்லை என்றே தோன்றுகிறது. பக்திக்கும் குற்றமின்மைக்கும் ஒரு தொடர்பும் கிடையாது. எல்லா சிறைச்சாலைகளிலும் நிரம்பியிருக்கும் குற்றவாளிகளில் மிகப் பெரும்பாலோர் கடவுள் நம்பிக்கையும் பக்தியும் உடையவர்கள்தான். நாத்திகர்கள் அல்ல. தன் மாநிலப் பெண்கள் கவுரவமில்லாத உடை அணிவதாகவும், பக்தியில் குறைவாக இருப்பதாகவும் கருதும் அமைச்சரால் எந்த நாளும் அந்த மாநிலப் பெண்களுக்கு எந்த நியாயமும் நன்மையும் செய்யமுடியாது. பாலியல் குற்றத்துக்கும் உடைக்கும் வயதுக்கும் தொடர்பே இல்லை என்று பல முறை நிரூபிக்கப்பட்டு விட்டது. ஆண் பெண் உறவு பற்றிய முழு அறியாமையும், தவறான கருத்தியல் வளர்ப்புமே பாலியல் குற்றத்துக்கான ஆணிவேர்கள்.



**கருணை மனு நிராகரிக்கப் பட்ட 14 நாட்களுக்குள் தூக்கு தண்டனையை நிறைவேற்றாவிட்டால் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து விடவேண்டும் என்று ஒரு தீர்ப்பு வந்திருக்கிறதே. நல்லது நடக்குமென்று தமிழர்கள் எதிர் பார்க்கலாமா? இப்படி ஒரு தீர்ப்பு இருக்கிற காரணத்தால் அவசர அவசரமாக தூக்கினை நிறைவேற்றும் நடைமுறை வருமா?**

**– அருள்மொழி, கீரனூர்**

கருணை மனு நிராகரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் மரண தண்டனை நிறைவேற்றப்படவேண்டுமென்பது ஆபத்தான விளைவுதான். பேரறிவாளன் சொல்லாததை நான் சேர்த்து எழுதினேன் என்று ஒரு அதிகாரி பத்தாண்டுகளுக்குப் பிறகு ஒப்புக் கொள்ளும் நிலையில், 14 ஆட்களையும் தூக்கில் போட்டிருந்தால் அது எத்தனை பெரிய கொடுமையாக அநீதியாக இருக்கும். உச்சமான தண்டனை ஆயுள் தண்டனை மட்டுமே என்று ஆக்கிவிட்டால், இந்த சிக்கல்கள் ஏதுமில்லை. பல வருடம் கழித்து தண்டனை விதித்தது தவறென்றே தெரியவந்தாலும், பாதிக்கப்பட்டவர் உயிரோடு வெளியே செல்லும் வாய்ப்பாவது இருக்கும். அந்த முடிவை நோக்கி உச்ச நீதிமன்றமும் இந்திய அரசும் அடுத்த கட்டத்தில் நகர்வார்கள் என்று நம்புகிறேன்.

இப்போதைக்கு இந்தத் தீர்ப்பு நிச்சயம் ஒரு அடி முன் நோக்கிய பாய்ச்சல்தான். தண்டனை நிறைவேற்ற ஆன காலதாமதத்தினால், தண்டனையே ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படவேண்டும் என்பது பல உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறது. அதில் தொடர்ந்து காப்பாற்றப்படும் உயிர்களில் ராஜீவ் கொலை வழக்கு தண்டனைக் கைதிகள் மட்டுமல்ல, தர்மபுரி பஸ் எரிப்பு தண்டனைக் கைதிகளும் கூட சேரும் வாய்ப்பு உள்ளது. குற்றம் என்னவாக இருந்தாலும், மரண தண்டனை என்பதே இல்லாமற் போக வேண்டுமென்பதே என் உறுதியான கருத்து. புத்தகக் காட்சியில் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாளின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியை தரிசித்த யாரும் இனி மரண தண்டனையே இல்லாத உலகே நமக்கு வேண்டுமென்றே நினைக்கமுடியும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் – அகிம்சையின் மறுபக்கம்



**1965** சனவரித் திங்களின் இறுதி நாட்களில் தமிழ்நாடெங்கும் மாணவர்கள் தங்கள் தங்கள் கல்லூரி வளாகங்களில் கூடி சனவரி 25 அன்று போராட்டத்தை நிகழ்த்தத் திட்டமிட்டனர். சென்னை, திருச்சி, கோவை, மதுரை போன்ற நகரங்களின் கல்லூரி விடுதிகள் போராட்டத் திட்டமிடலுக்கான களங்காக இருந்தன. மதுரை தியாகராசர் கல்லூரியில் ஏழுமலை செயராமனின் அறையில் மதுரைக் கல்லூரி மாணவர் பிரதிநிதிகள் சனவரி 24-இல் கூடினர். அந்தக் கூட்டத்தில் சனவரி 25 அன்று ஊர்வலமாகப் புறப்பட்டு சந்தைத் திடலுக்குச் செல்வதெனவும், அங்கிருந்து மற்றக் கல்லூரி மாணவர்களுடன் மதுரை - மாசி வீதிகளில் ஊர்வலம் செல்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

தோழர்கள் காளிமுத்தும் நா.காமராசனும் வேறொரு முடிவை இரகசியமாக எடுத்திருந்தனர். 25ஆம் நாள் இந்தியைத் திணிக்கும் இந்திய அரசமைப்புச் சட்டப்பிரிவைத் தீயிட்டுக் கொளுத்துவது என்பது அவர்களின் முடிவு. அவர்களால் இது மிகவும் ரகசியமாய் வைக்கப்பட்டிருந்தது. சனவரி 23ஆம் நாள் இரவு, கல்லூரிப் புல்வெளியில் தங்களது திட்டத்தை என்னிடம் தெரிவித்தனர். இதுபோலவே தோழர் பா.செயப்பிரகாசத்தைத் தனியாகச் சந்தித்துத் தங்கள் திட்டத்தைத் தெரிவித்துள்ளனர். என்னிடம் சொன்னபோது 'நானும் அச்சட்டப் பிரிவைக் கொளுத்துவேன்' என்று உறுதிபடத் தெரிவித்தேன். போராட்டத்தை முன்னின்று நடத்துவதற்கு என் போன்றோர் வெளியில் இருக்க வேண்டியது அவசியம் என்று என்னிடம் கூறினர். இதையேதான் பா.செயப்பிரகாசிடமும் கூறியுள்ளனர். இப்படிக் கூறியவர்கள் எங்களில் யாருக்கும் தெரிவிக்காமல் தலைமறைவாகி விட்டனர். அவர்கள் எங்கே சென்றனர்?

போராட்டத்தின் முன்னோடிகளாய் விளங்கியவர்கள் சிலரது பெயரை 'காக்கை'யின் சென்ற இதழிலேயே எழுதியுள்ளேன்.

தோழர் அசன்முகமது மானாமதுரைக்குப் பக்கத்து ஊரான இராஜகம்பீரத்தைச் சேர்ந்தவர். அவருடனும் தோழர் சொக்கனுடனும் 23 இரவே, காளிமுத்துவும் காமராசனும்

**என்னிடம் சொன்னபோது** நானும் அச்சட்டப் **பிரிவைக் கொளுத்துவேன்** என்று உறுதிபடத் **தெரிவித்தேன்.** போராட்டத்தை முன்னின்று **நடத்துவதற்கு என்** போன்றோர் வெளியில் **இருக்க வேண்டியது** அவசியம் என்று என்னிடம் **கூறினர். இதையேதான்** பா.செயப்பிரகாசிடமும் **கூறியுள்ளனர். இப்படிக்** கூறியவர்கள் எங்களில் **யாருக்கும் தெரிவிக்காமல்** தலைமறைவாகி விட்டனர். **அவர்கள் எங்கே** சென்றனர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜகம்பீரத்துக்குப் போய்விட்டார்கள். இராஜகம்பீரத்தில் ஜவகர் என்றொரு தோழர் இருந்தார். திமுகவின் தீவிர ஆதரவாளர். பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர். அவரது இல்லத்தில் காளிமுத்தையும், காமராசனையும் தங்க வைத்துவிட்டு உடனே மதுரைக்கு அசன்முகமதுவும் சொக்கனும் திரும்பி விட்டார்கள்.

24ஆம் நாளே தோழர்கள் சட்டப் பிரிவை எரிக்கவிருக்கும் துண்டறிக்கை தயாராகிவிட்டது. துண்டறிக்கையைக் கொடுத்தாலே கைது செய்யப்படலாம் என்ற நிலைமை இருந்தது. அதனால் அடையாளம் தெரியாதவர்களால் துண்டறிக்கையைக் கொடுக்கச் செய்வது என்று முடிவு செய்யப் பட்டது. துண்டறிக்கைகளைப் பரப்ப இரண்டு இளைஞர்கள் முன்வந்தனர். மதுரை பேருந்து நிலையத்துக்குத் துண்டறிக்கைகளை ஒரு பையில் கொண்டுவந்த சொக்கன் அவர்களைப் பின் தொடர்ந்தார். துண்டறிக்கையால் நகரம் பரப்பரப் படைந்தது.

25ஆம் நாள் மதுரை சந்தைத்திடலுக்குச் செல்லும் எங்கள் திட்டம் மாற்றி அமைக்கப் பட்டது. முதலில் இராஜாஜி பூங்காவிற்குச் சென்றோம். ஜவகரால் பாதுகாப்பாக அங்கு கொண்டு வரப்பட்ட காளிமுத்துவும் காமராசனும் இந்தியைத் திணிக்கும் 17ஆவது சட்டப்பிரிவைத் தீயிட்டுக் கொளுத்தினர். 17ஆவது சட்டப்பிரிவின் படியைப் பெறுவதற்கே, சொக்கனும் அசன்முகமதுவும் படாதபாடுபட்டிருக்கின்றனர். சட்ட எரிப்புப் போராட்டம் அமைதியாகவே நடைபெற்றது. தோழர்கள் கைது செய்யப்பட்டனர். நாங்கள் சந்தைத் திடலுக்கு ஊர்வலமாகச் சென்றோம். சந்தைத்திடலில் இந்தி அரக்கியின் கொடும் பாவி கொளுத்தப்பட்டது. அப்பொழுது ஏனைய கல்லூரி மாணவர்களும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் அங்கு ஊர்வலமாக வந்திருந்தனர். மதுரையின் மேலமாசி வீதி, கீழமாசி வீதி, வடக்கு மாசி வீதி, தெற்கு மாசிவீதி ஆகிய நான்கு மாசி வீதிகளிலும் ஊர்வலமாகச் செல்வது என்பது திட்டம்.

முதலில் வடக்கு மாசி வீதியில் நுழைந்த ஊர்வலம் காங்கிரஸ் அலுவலகத்தை நெருங்கும்போதே கலவரம் தொடங்கி விட்டது. அலுவலகத்திலிருந்து அரிவாள், தடி போன்ற ஆயுதங்களுடன் வீரையன் என்னும் ரவுடியின் தலைமையில் வந்த அடியாட்கள் மாணவர்களைத் தாக்கத் தொடங்கினர். அரிவாள் தடி போன்ற ஆயுதப் பண்பாட்டைத் தொடங்கி வைத்ததே காங்கிரஸ் கட்சிதான். காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் காந்தியார் படம் இருந்திருக்கலாம். பலசமயங்களில் காங்கிரஸ்காரர்களுக்குத்தான் முதலில் அகிம்சையைக் கற்பிக்க வேண்டும் என்று நான் நினைப்பதுண்டு. சென்னை வந்தபிறகு சத்தியமூர்த்தி பவனில் அகிம்சை வகுப்புகள் அடிக்கடி நடத்தப்பட வேண்டும் என்பது என் உறுதியான துணிவு.

இளைஞர்களாகிய மாணவர்கள் இத்தாக்குலால் அஞ்சி ஓடிவிடவில்லை. காங்கிரஸ் கட்சி அலுவலகத்திற்கு வெளியே மறுநாள் குடியரசு நாள் விழாவிற்கெனப் பெரிய பந்தல் போடப்பட்டிருந்தது. பந்தற் கால்கள் பிடுங்கி எறியப்பட்டன. சொக்கனும் நானும் சேர்ந்து ஒரு பந்தற்காலைப் பிடுங்கி வீசினோம். பிறகு பந்தல் தீக்கிரையாக்கப் பட்டது. தீயணைப்புப் படை வந்தது. ஆனால் தண்ணீரைப் பீச்சவிடாமல் நாங்கள் மறியல் செய்தோம்.

அன்றே மதுரையில் பல இடங்கள் பற்றி எரிந்தன.

பொதுவாகக் கலைக்கல்லூரி மாணவர்கள்தான் போராடுவார்கள் என்ற பேச்சுண்டு. அன்று நடந்த போராட்டத்தில் மருத்துவக் கல்லூரி மாணவர்களும், பொறியியல் கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர். பள்ளி மாணவர்களும் கலந்து கொண்டனர். ஆனால் மதுரைப் போராட்டத்தில் மாணவியர் கலந்து கொள்ளவில்லை. ஆனால் பின்னர் நடந்த போராட்டங்களில் பல்வேறு ஊர்களில் மாணவியர் பங்களிப்புச் செய்துள்ளனர்.

1965 சனவரி 26ஆம் நாள் சென்னை - கோடம்பாக்கத்தைச் சேர்ந்த சிவலிங்கம் இந்தியை எதிர்த்து முழங்கித் தீக்குளித்தார். அவரை அடுத்து அரங்கநாதன் தீக்குளித்தார். குடியரசு நாள் தமிழகத்தின் துயர நாளாகியது. பொதுமக்களே இதைத் தங்கள் போராட்டமாக வரித்துக் கொண்டனர். நகரங்கள் மட்டுமல்லாது, சிற்றூர்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திமுக கட்சித்தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். எங்கள் கல்லூரி மாணவர் தலைவர்கள் காளிமுத்தும் காமராசனும் திருச்சி சிறையில் அடைக்கப்பட்டனர். தேர்வு எழுதுவதற்காக அவர்கள் விடுவிக்கப்பட்டனர். எனினும் போராட்டம் முடிவுறவில்லை.**

புறங்களும் போராட்டத்தில் தகித்தன. அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் இராசேந்திரன் துப்பாக்கியல் சுடப்பட்டு இறந்தார்.

கல்லூரிகள் மூடப்பட்டன. ஆனால் மாணவர்கள் தத்தம் ஊர்களுக்குப் போராட்டச் செய்தியை எடுத்துச் சென்றார்கள். போராட்ட ஊர்வலங்களில் காவல்துறையை எப்படி எதிர்கொள்வது என்பதற்கு மாணவர்களும் இளைஞர்களும் ஏன் பொதுமக்களும் பழகிவிட்டனர். வீசப்படுகின்ற கண்ணீர்ப்புகைக் குண்டுகள் தரையில் விழுந்து வெடிப்பதற்கு முன்பே, அதை எடுத்துக் காவலர்கள் மீதே வீசினர். கண்ணீர்ப்புகை குண்டு வீசப்பட்டால் கண்களில் வெங்காயச் சாறுவிட்டு கண்ணீர் வராமல் தற்காத்துக் கொண்டனர்.

பல இடங்களில் காவல்துறையை எதிர்த்துக் கடுமையாகத் தாக்கியும் உள்ளனர். இந்தி எதிர்ப்புப் போராட்டம், ஒரு போராக உருவெடுக்கத் தொடங்கியது. மாணவர்கள், ஆதரவாகத் திரண்ட பொதுமக்கள் மீதெல்லாம், தடியடி மட்டுமல்லாமல் துப்பாக்கிச் சூடும் நடந்தது. காவல் துறையினரும் சில இடங்களில் கொல்லப் பட்டனர். போராட்டத்தை ஒடுக்க இராணுவம் வந்தது. கல்லூரிகள் மூடப் பட்டன. தேர்வு எழுத மட்டும் கல்லூரிகள் திறக்கப்பட்டன.

திமுக கட்சித்தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். எங்கள் கல்லூரி மாணவர் தலைவர்கள் காளிமுத்தும் காமராசனும் திருச்சி சிறையில் அடைக்கப்பட்டனர். தேர்வு எழுதுவதற்காக அவர்கள் விடுவிக்கப்பட்டனர். எனினும் போராட்டம் முடிவுறவில்லை.

மதுரை தியாகராசர் கல்லூரியில் பெரும்பான்மை மாணவர்கள் போராட்டத்தின் பக்கமே நின்றார்கள். எனினும் காங்கிரஸ் மாணவர்கள் எங்களை எதிர்ப்பதில் தீவிரமாக இருந்தனர். இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் காங்கிரஸ் ரவுடிகளை ஏவிவிட்டு வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது. காங்கிரஸ் மாணவர்களும் எங்கள் மீது வன்முறைத் தாக்குதல் நடத்த நேரம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

போராட்ட நாட்களின் சில நிகழ்வுகள் இன்னும் என் நினைவில் நிற்கின்றன. ஒருமுறை தமிழ் வகுப்பில் காங்கிரஸ் சார்புடைய ஒரு பேராசிரியர் திடீரென என்னிடம் ஒரு வெண்பாவைச் சொல்லச் சொன்னார். நான் ‘பாலும் தெளிதேனும் பாகும் பருப்பு மிவை’ என்று தொடங்கும் ஔவையாரின் வெண் பாவைச் சொன்னேன். இதை அசை சீர் தளை பிரித்து - கரும்பலகையில் எழுதச் சொன்னார். நான் கல்லூரியில் யாப்பருங்கலக் காரிகை படிப்பதற்கு முன்பே, பள்ளி நாட்களிலேயே யாப்பிலக்கணத்தை ஓரளவு அறிந்திருந்தேன். பள்ளி நாட்களில் ‘மஞ்சரி’ இதழை விடாமல் படிப்பேன். அதில் திரு.கி.வா.ஜகன்னாதன் ‘கவி பாடலாம்’ என்னும் தலைப்பில் யாப்பிலக் கணத்தைத் தொடராக எழுதி வந்தார். அந்தத் தொடரைப் படித்து வந்தது மட்டுமல்லாமல் இலக்கணத்தின்படி எழுதியும் வந்தேன். அத்துடன் பள்ளியில் சிறப்புத்தமிழை (Advanced Tamil) ஒரு பாடமாகவும் எடுத்துப் படித்தேன். அவ்வகுப்புகளிலும் யாப்பு ஓரளவு சொல்லித் தரப்பட்டது. அதனால் வெண்பா முதலிய பா வகைகள் எனக்கு எளிதாகவே இருந்தன. இந்தப் பின்னணி தெரியாத ஆசிரியர் என்னைச் சீண்டும் நினைவுடன் இப்படி ஒரு சோதனையை வைத்தார். தமிழ் இலக்கியம் பயிலும் எனக்கு இலக்கணம் சரியாக வராது என்று நினைத்திருக்கிறார். நான் மிகவும் சரியாக ஒருவிதத் தடங்கலுமின்றி அப்பாடலின் வெண்பா இலக்கணப்படி அசை, சீர், தளை வகைகளைப் பொருத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நான் தங்கி இருந்த விடுதியின் கீழ்ப்பகுதி உணவு விடுதியாக இருந்தது. மேலே உள்ள மொட்டைமாடியில் ஒரு சிற்றறையில் நான் என் தங்கை கணவருடன் தங்கி இருந்தேன். அவர் கடையில் பணிபுரிந்ததால் மாலையில் நான் மட்டுந்தான் இருப்பேன்.**

காட்டினேன். அவர் அதற்காக என்னைப் பாராட்டாமல் 'சரி போய் உட்கார்' என்று சொன்னார். அதன் பிறகு மற்றொரு நிகழ்வும் நடந்தது.

இந்தி எதிர்ப்பு முனை தீட்டிக் கொண்டிருந்த அந்நாட்களில் அவருடைய ஒரு வகுப்பில் இந்தியை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார். வகுப்பில் கடைசிப் பெஞ்சில் உட்கார்ந்திருந்த நான் கையை உயர்த்தினேன்.

"என்ன" என்றார் பேராசிரியர்.

" 'தமிழ்ச்சோலை' என்னும் புத்தகத்தில் 39, 40, 41 பக்கங்களில் இந்தித் திணிப்பை, இந்தி பொதுமொழியாவதை எதிர்த்து அந்நூலாசிரியர் விரிவாக எழுதியுள்ளார். நூலாசிரியரின் பெயர் உங்கள் பெயர்தான். அதற்கு நீங்கள் ஆசிரியரா அல்லது உங்கள் பெயருள்ள வேறு ஆசிரியர் இருக்கிறாரா?" என்று கேட்டேன்.

"அது நான்தான்... ஆனால் அப்படி எழுதவில்லை" என்றார்.

நான் விடவில்லை. "எனக்கு நீங்கள் அனுமதி தந்தால், நம்முடைய நூலகத்திலிருந்து அந்த நூலை இப்பொழுதே கொண்டு வருகிறேன்" என்றேன்.

ஒரு கணம் திகைத்து நின்றவர் "நீ உட்கார்" என்று சொல்லி மேற்கொண்டு பாடத்தைத் தொடர்ந்தார். அப்படி எழுதியது தொடர்பாக அவர் ஏதாவது விளக்கம் சொல்வார் என்று எதிர்பார்த்தேன். அவர் எதுவும் சொல்லவில்லை. நான் பட்டப் படிப்பு வகுப்பை முடித்தபின்பு அவரைச் சந்தித்து வணக்கம் சொன்னேன். என்னை வாழ்த்தியவர், "நீ மேற்கொண்டு சட்டப்படிப்புப் படி" என்றார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் முடிந்த மறு கல்வியாண்டில் (1965-66) வகுப்பில் ஒரு மோதல் நடைபெற்றது. காங்கிரஸ் மாணவர் ஒருவர் என்னைச் சண்டைக்கு இழுத்தார். எது தொடர்பில் அப்படிச் செய்தார் என்பது எனக்கு நினைவில் இல்லை. பேசிக் கொண்டிருக்கும்போதே வளைந்து கூர்மையான கதிர் அரிவாள் போன்ற கத்தி ஒன்றை பேன்டிலிருந்து எடுத்துக் காட்டினார். நான் என் பேன்டைச் சுற்றி இருந்த வாரை உருவிக் கொண்டு அவரை நோக்கி முன்னேறினேன். என்னுடைய தோழர்களும் அவரை நோக்கிப் பாய அவர் வகுப்பிலிருந்து ஓடிவிட்டார். கல்லூரி முடிந்து பேருந்தில், நான் தங்கி இருந்த உணவு விடுதிக்கு வர ஏறினேன். அந்த மாணவர் சிலருடன் என்னை நோக்கிச் சத்தமிட்டவாறு வந்தார். இதைக் கண்ட முருகையன் என்னுடன் பேருந்தில் தாவி ஏறியவர் அவர்களைச் சுட்டுவிரலைக் காட்டி எச்சரித்தார். முருகையன் அப்பொழுதே உடற்கட்டைப் பயிற்சிகள் மூலம் பேணி வந்தார். அவரைக் கண்ட அந்த மாணவர்கள் பின்வாங்கினர்.

நான் தங்கி இருந்த விடுதியின் கீழ்ப்பகுதி உணவு விடுதியாக இருந்தது. மேலே உள்ள மொட்டைமாடியில் ஒரு சிற்றறையில் நான் என் தங்கை கணவருடன் தங்கி இருந்தேன். அவர் கடையில் பணிபுரிந்ததால் மாலையில் நான் மட்டுந்தான் இருப்பேன்.

அன்று போராட்டம் தொடர்பாக மாணவத் தோழர்கள் அந்த மாலையில் என் அறைக்கு வந்திருந்தனர். நான் அவர்களை மாடியில் இருக்கச் சொல்லிவிட்டு கீழே கழிப்பறைக்குச் சிறுநீர் கழிக்க இறங்கி வந்தேன். மேலிருந்த நண்பர்களில் அதே காரணத்திற்காகக் கீழிறங்கி வந்தனர். வாசலுக்குள்ளே வலப்புறத்தில் கழிப்பறை. நான் வாசலைப் பார்க்கிறேன் - அந்தக் காங்கிரஸ் மாணவர் அடையாளம் தெரியாத சிலருடன் நின்றுக் கொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடியிலிருந்து இறங்கி வந்தத் தோழர்களுக்குப் புரிந்துவிட்டது. அவர்களை அந்த மாணவர் எதிர்பார்க்கவில்லை. அவர்களைக் கண்டவுடன் அந்தக் காங்கிரஸ் மாணவர் கூடவந்தவர்களுடன் ஓடத்தொடங்கினர்.

என் தோழர்கள் அவர்களைத் துரத்த, அவர்கள் எப்படியோ தப்பித்து விட்டனர்.

என்தோழர்கள் திரும்பிவர, மாடியில் எங்களுடைய கலந்துரையாடல் தொடர்ந்தது. காங்கிரஸ் மாணவர்களின் இந்த அச்சுறுத்தலுக்கு என்ன செய்யலாம் என்பது பற்றியும் பேசினோம். மறுநாள் கல்லூரியில் அந்தக் காங்கிரஸ் மாணவரை நேரில் சந்தித்துக் கேட்போம் என்றேன் நான். அதை நாங்கள் பார்த்துக் கொள்வோம் என்று தோழர்கள் கூறினர். அடுத்தக்கட்டப் போராட்டத்தைப் பற்றி எங்கள் உரையாடல் தொடர்ந்தது. ஆகஸ்டு 15இல் எப்படிப் போராடுவது என்பதுதான் எங்கள் பேச்சுப் பொருளாக இருந்தது. இருட்டி யதற்குப் பின்பு, வந்த தோழர்கள் விடை பெற்றுக் கொண்டனர்.

மறுநாள் கல்லூரிக்குச் சென்றால் கல்லூரி பரபரப்புடன் காணப்பட்டது. அன்றிரவு விடுதியில் விளக்கை அணைத்துவிட்டு காங்கிரஸ் மாணவர்கள் குறித்து அவர்களுடைய அறைகளில் தாக்கப் பட்டிருக்கிறார்கள்; விடுதியை விட்டுத் துரத்தியும் அடிக்கப் பட்டிருக்கிறார்கள்.

"ஏன் இதைச் செய்தீர்கள்" என்று தோழர்களிடம் கேட்டேன்.

"நாங்கள் இதைச் செய்ய வில்லை" என்று எல்லோரும் ஒருமித்த குரலில் சொன்னார்கள்.■

## 2013ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க பரிசுகள், விருதுகள்

### நூல்கள் / தகடுகள் வரவேற்பு

ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் சார்பாக வழங்கப்படும் கீழ்க்கண்ட பரிசுகளுக்கான நூல்கள் / தகடுகள் வரவேற்கப்படுகின்றன. 2013இல் அச்சாகி வெளியான நூல்கள் ஒவ்வொரு பரிசுக்கும் இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். குறும்பட ஆவணப்படங்களுக்கான பரிசுக்கும் 2013இல் வெளியான படங்களின் சிடி அல்லது டிவிடி இரு பிரதிகள் அனுப்ப வேண்டும். எழுத்தாளர் / இயக்குநர் மற்றும் பதிப்பாளர்/ படத்தயாரிப்பாளரின் முழு முகவரி தொலைபேசி எண்ணுடன் புத்தகங்களுடன் / தகடுகளுடன் எழுதி அனுப்பிட வேண்டுகிறோம்.

<u>அனுப்ப வேண்டிய முகவரி:</u>

பொதுச்செயலாளர்,
தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்.
57ஏ, மேலப்பெருமாள் மேஸ்திரி வீதி,
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கட்டடம்,
மதுரை - 625 001 செல்: 94424 62888.
வந்துசேர வேண்டிய கடைசி நாள். 31.03.2014.

புத்தகம் தகடுகளை திருப்பி அனுப்ப இயலாது. நடுவர் குழுக்களின் முடிவே இறுதியானது.

1. தோழர்.கே.பி.பாலசசந்தர் நினைவுப்பரிசு. சிறந்த நாவலுக்காக ரூ.10.000/-

2. புதுமைப்பித்தன் நினைவுப்பரிசு. சிறந்த சிறுகதை நூலுக்கு ரூ.5000/-

3. குன்றக்குடி அடிகளார் நினைவுப்பரிசு - தமிழ் வளர்ச்சிக்கு உதவும் நூல் - ரூ.5000/-

4. அமரர் சேதுராமன் அகிலா நினைவுப்பரிசு, சிறந்த குழந்தை இலக்கிய நூலுக்கு ரூ.5000/-

5. தமிழறிஞர் வ.சுப.மாணிக்கனார் நினைவுப்பரிசு, சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கு ரூ.5000/-

6. அமரர் செல்வன் கார்க்கி நினைவுப்பரிசு, சிறந்த கவிதை நூலுக்கு ரூ.5000/-

7. தோழர்.பா.இராமச்சந்திரன் நினைவு விருது. சிறந்த ஒரு குறும்படம் மற்றும் சிறந்த ஓர் ஆவணப்படத்துக்கு - தலா ரூ.5000/-

8. அமரர் சு.சமுத்திரம் நினைவுப்பரிசு - ஒடுக்கப்பட்ட மக்கள் பற்றிய படைப்பு ஒன்றுக்கு (கதை, கவிதை, நாவல், ஆய்வு, கட்டுரை எதுவாகவும் இருக்கலாம்) ரூ.10,000/-

9. தோழர்.மு.சி.கருப்பையா பாரதி - ஆனந்த சரஸ்வதி சார்பாக நாட்டுப்புறக் கலைச்சுடர் பட்டமும் ரூ.10000/- விருதும் - ஒரு மூத்த நாட்டுப்புறக் கலைஞருக்கு - பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன.

10. புதுச்சேரி தோழர் நாகசுந்தரம் நினைவுப்பரிசு - கலை இலக்கிய ஆய்வு நூலுக்கு ரூ.10,000/-

11. தோழர்.கே.முத்தையா நினைவுப்பரிசு - ரூ.20,000 - தொன்மைசார் ஆய்வுகளுக்கு தொல்லியல், கல்வெட்டியல், மானுடவியல், நாட்டுப்புறவியல்,


**சு.வெங்கடேசன்,** பொதுச்செயலாளர், **த.மு.எ.க.ச**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதாசிரியரும் கதாபாத்திரமும்

அவள் ஒரு பழைய "மாடல்" வீட்டில் இருக்கும் பெண்மணி.. இன்றைக்கும் காலையிலேயே எழுந்து சமையலறைக்குப் போய் டீ போட்டு, போர்வைக்குள் உடம்பைப் புதைத்து சுருட்டிக்கொண்டு தூங்கும் புருஷனை எழுப்பி அவனுக்குக் கையில் கொண்டுபோய்க் கொடுப்பாள். காலையில் டிபனுக்கு பாரம்பரியமாகச் செய்யும் இட்லி, பொட்டுக்கடலை, தேங்காய் போட்டு அரைத்த சட்னி, சாம்பார் எல்லாம் செய்துமுடித்து புருஷனும், குழந்தைகளும் குளித்துவிட்டு வந்து தயாராவதற்குள் சுடச்சுட சமைத்து, அவர்கள் சாப்பிட உட்காரும் போது, இதமான சூட்டில் பரிமாறுவாள். கை, கால்களை நீட்டி, முறுக்கி, சோம்பல் முறித்துக்கொண்டே பேப்பர் படிப்பதற்கு இடையில் புருஷன் கூப்பிட்ட குரலுக்கு வேலைக்கு இடையிலும், தவறாமல்போய் ஆஜராகி அவன் கேட்டதற்கு பதில் சொல்லத்தவறமாட்டாள் அவள்.



எழுபதுகளிலும், எண்பதுகளிலும் கல்யாணம் செய்துகொண்டவர்கள்தான் பழைய மாடல்கள் என்று இன்று அறியப் படுபவர்கள். நடை உடை பாவனைகளிலும், உணவுப் பழக்கங்களிலும் மாற்றங்கள் வந்தபோதிலும், அவர்கள் உள்ளுக்குள் பழைமையை அணையாமல் காப்பாற்ற வேண்டும் என்று நினைப்பவர்கள் இவர்கள்.. அதற்காக பாரம்பரியமான வேஷம் போட்டுக் கொண்டு வீட்டுக்குள் அடைந்து கிடப் பவர்கள் இவர்கள் என்று தப்பாக நினைத்துவிடக்கூடாது நீங்கள்.... ஆமாம்.. ஆமாம் ஆரம்பிச்சு நேரமாச்சு இல்ல? கதைஇன்னும் கொஞ்சம் வேகமா முன்னாடி போகட்டும் கதாசிரியரே.. இது யாரப்பா? பயத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தாள் அந்தப் பெண் எழுத்தாளர். தோழியே.. நான்தான் உங்களோட கதாபாத்திரம்.. காலம் மாறிப் போச்சு.. முன்ன மாதிரியெல்லாம் நீட்டி, முழக்கி எழுதறத படிக்கற பொறுமை ஒன்னும் இப்ப இருக்கற வாசகர்களுக்கு இல்ல.. என்னை பழைய மாடல் வீட்டுப்பொம் பளையா ஆக்கினது எனக்கு சுத்தமாப் பிடிக்கல.. போர் அடிக்காம விஷயத்த சொல்லலைன்னா நான் என் பாட்டுக்குப் போயிடுவேன்.. படிகம் போல தெளிவாக இருந்த கதா பாத்திரத்தின் முகம் எழுத்தாளரை பதற்றப்படுத்தியது கொஞ்சநஞ்சமல்ல.. நடப்பது நிஜமா கற்பனையா என்று அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.. இது என்ன ஒரு

**மலையாள மூலம் : டி.எம்.சுஹரா**

**தமிழில் : சிதம்பரம் ரவிச்சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❝

**ஒரு கதாபாத்திரத்த உருவாக்கறதுக்கு நான் படற வேதனைய உன்னால புரிஞ்சுக்க முடியாது.. சொன்னாத்தானே தெரியும் எனக்கு? டென்ஷனாக்காம வாய மூடிக்கிட்டு என் பக்கத்துல சும்மா நிக்கறது தான் உனக்கு நல்லது..**

புதுமை! மனுஷங்களப்போல கதா பாத்திரங்களும் மூஞ்சியத் தூக்கிவச்சுகிட்டா எழுதறவங்களோட நிலைமை என்ன ஆகும்?.. அவள் நினைத்துக்கொண்டாள்.

உங்கள பயமுறுத்தறதும், மிரட்டறதும் ஒன்னும் என்னோட ஐடியா இல்ல.. பயமுறுத்தறதுக்கு உன்ன நான் பத்திரிகைக் காரியா ஒன்னும் படைக்கலியே..? எலக்ட்ரானிக் மீடியாவில இங்கிலீஷ் பேசற மேடமாவும் இல்ல. நான் உன்ன சிருஷ்டிச்சது.. சாதாரண ஒரு வீட்டில இருக்கும் பெண்மணியாத் தானே? அதுவும் பழைய மாடல்.. அத மறக்கவேண்டாம்.. வீட்டில இருக்கற பொம்பளைகள அப்படி ஒன்னும் துச்சமாப் பேசாத..

நீங்களும் ஒருகாலத்துல வீட்டில இருக்கற பொம்பளயாத்தானே இருந்தீங்க? அத மறக்கறதுக்கு சமூகம் என்னை விடவே இல்லயே?

புருஷன் விட்டுட்டு ஓடினதுனாலதானே நான் வீட்டுக்காரங்க மத்தியிலும், ஊர்க்காரங்க மத்தியிலும் கண்ணுல தூசி விழுந்த மாதிரி நான் உறுத்திக்கிட்டே இருந்தேன்..? அவுங்களுக்கு எல்லாம் நான் தாந்தோணியாவும், கழுத்த சுத்தி நாக்கு உள்ளவளாவும் மாறினேன்..? இப்ப அதப் பத்தி ஒன்னும் கவல இல்ல..

ஆனா, வளர்ந்துக்கிட்டு வர்ற என்னோட மகனும் அதேபோலத்தானே என்னப் பாக்கறான்..?

இது கஷ்டமா இருக்குதான்.. ஆனாலும்..

இதல்லாம் நான் பெரிசா எடுத்துக்கல.. சரி.. சரி.. புருஷன் ஏன் விட்டுட்டு ஓடினாரு? கதாபாத்திரம் இப்படி கேள்வி கேட்டபோது எழுத்தாளருக்கு உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை வியர்த்துக் கொட்டியது.

பேட்டிக்கு வந்திருக்கற பத்திரிகைகாரங்க மாதிரி ஆகலாம்னு பாக்காத..

தனியா வாழறதுனால எல்லாருக்கும் என்னோட வரலாறு தெரிஞ்சிருக்கறது நல்லதுதான்.. ஆனா.. நீ என்னோட சிருஷ்டி.. என்னோட தனிப்பட்ட வாழ்க்கைய நீ ஒன்னும் தூண்டித்துருவிப் பாக்க வேண்டியதில்ல.. நீ நான் சொல்றபடி கேக்கறதுக்குன்னு படைக்கப்பட்டவள்.. நான் உன்ன எக்ஸ்போஸ் செய்வேன்.. நீ என்னை இல்ல.. புருஷன் சரியில்லாத ஆளா? பொம்பளைங்கன்னா அவ்வளவு என்ன மட்டமா? பெத்துக் கொடுக்கல..? பாத்துகிட்டே இரு.. நான் உன்ன ஒரு புது கதாபாத்திரமாக்கப்போறேன்.. அப்படீன்னா.. நல்ல வேளயா நானும், நீங்களும் பொழச்சோம்.. ஆம்பளகளோட அடக்குமுறய எதுத்துப் போராடற, சாயங்காலத்துல தோல்பையும், ஹேண்ட் பேக்குமாப்போய், பெண் விடுதலைக்காக மேடைப்பேச்சு பேசி, ஊர்வலம் போற பொண்ணா என்னை உருவாக்கு.. ரொம்ப சரிதான் போ.. நாட்டுல என்ன நடக்குதுன்னு உனக்கெங்க தெரியப்போகுது?

ஒரு கதாபாத்திரத்த உருவாக்கறதுக்கு நான் படற வேதனைய உன்னால புரிஞ்சுக்க முடியாது.. சொன்னாத்தானே தெரியும் எனக்கு? டென்ஷனாக்காம வாய மூடிக்கிட்டு என் பக்கத்துல சும்மா நிக்கறது தான் உனக்கு நல்லது..

உங்கள தொந்தரவு செய்யறது என்னோட லட்சியம் இல்ல.. இருந்தாலும் சில கேள்விகள் என்ன நிம்மதியா இருக்கவிடா மாட்டேங்குது.. கேட்டுத் தொலை.. கோபப் படாதீங்க.. புருஷனால கைவிடப் பட்டவங்கற லேபிளை நீங்களேதான் உங்க தலையில கட்டிக்கிட்டதா இதுவர நீங்க பேசினதுல இருந்து எனக்குப் புரிஞ்சுது.. அதுக்கு காரணம்? யுவர் ப்ராப்ளம்? உங்களோட கதைகள்ல இருக்கறமாதரி..?

என்னை சின்னாபின்னமாக்கிட்டே நீ அடங்குவ.. உன்னப்போல ஏராளமான கதா பாத்திரங்கள நான் படைச்சிருக்கேன்.. அவுங்க யாரும் இதுவரை என்னைக் கேள்வி கேட்டது இல்ல.. மகனுக்கு எத்தனை வயசாச்சுன்னு சொன்னீங்க? நான் சொல்லலியே.. என்சினியரிங்கில முத வருஷம் படிக்கறான்.. அவன் அஞ்சு வயசா இருக்கறப்ப அவனோட அப்பா எங்கள விட்டுட்டுப்போனது.. எழுத ஆரம்பிச்சிருந்தீங்களா அப்ப..? ம்.. வீட்டுக்கு தினம் வர்ற புருஷனோட பிரெண்டோட மனைவிக்கு மனசாலயும், உடம்பாலயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படற உறவப்பத்தி சொல்றதுதான் என்னோட முத நாவல். தப்ப உணர்ந்து திருந்த முயற்சி செஞ்ச அவள் புருஷனும், சமூகமும் அசிங்கமா முத்திரை குத்தறதுதான் நாவலோட முடிவு..

குடும்பத்தாலும், சமூகத்தாலும் புறக்கணிக்கப்பட்டு, ஒத்தையாளாப்போன பெண்களோட மன உணர்ச்சிகளையும், எதிர் பார்ப்புகளையும் சொல்றதுதான் என்னோட லட்சியம்.. மனசாலயும், உடம்பாலயும்ன்னு சொன்னா அப்ப.. காதலிக்கவும் சான்ஸ் உண்டு இல்லையா? கிடச்ச வாய்ப்ப நல்லாப் பயன் படுத்தியிருக்கலாமே? நீ இப்பவும் என்ன அசிங்கப்படுத்தாதே.. செக்ஸ் எழுதி பேர் வாங்கறது இல்ல என்னோட லட்சியம்.. ஆம்பளைக்கு மத்த பொம்பளைங்க மேல ஆசை ஏற்படறது போல, பொம்பளைக்கு ஆசை வந்தா சமூகம் அவளை எப்படி நடத்தும்ங்கறதுதான் என் முன்னால இருந்த கேள்வி.. அதுக்கு என்னோட பாணியில பதில் கண்டுபிடிக்கறதா இருந்ததுதான் என்னோட நாவல்.. பரிசு கிடைக்கும்னு எதிர்பாத்து நாவலைப் போட்டிக்கு அனுப்பல நான்.. ஒரு உற்சாகத்துல அனுப்பினேன்னாலும் அதுவே என் தலையில விழுந்த முத இடியா இருந்தது.. பெரியவங்களுக்குத் தெரிஞ்சா என்ன நினைப்பாங்க?. என் புருஷன் சதா என்ன குத்தம் சொல்லவும் ஆரம்பிச்சாரு.. விருது கிடச்சதுன்னு தெரிஞ்சப்ப பதறிப்போனாரு.. பொண்டாட்டியப் புரிஞ்சுகிட்டு அவள முழுசா நம்பற மனுஷனா என் புருஷன நினைச்சிட்டிருந்தேன்.. அது தப்புங்கறது புரிஞ்சுகிட்டேன்.. வானமே இடிஞ்சு போயிருக்குமே உங்களுக்கு..? அது உனக்கு எப்படித் தெரியும்? தேவைப்படற இடத்தில மட்டும் சாதாரண ஒரு கதாபாத்திரமாதானே நீங்க என்னை எப்பவும் படைச்சிருக்கீங்க? தொட்டுத் தாலி கட்டிய பொண்டாட்டியோட கள்ளக்காதலை எந்தப் புருஷனாவது சகிச்சு கிட்டு இருப்பானா? அநாவசியமாப் பேசாத நான் சொல்றது என்னோட கதையை இல்ல..

மனைவியோட காதலனுக்கு உங்க புருஷனோட ப்ரெண்டோட சாயல் எதாவது இருந்ததா? இப்படிக் கேட்டா.. அவள் யோசித்தாள். பின் தொடர்ந்தாள். அந்த கதாபாத்திரத்துக்கு இங்க தினமும் வர்ற எங்களோட குடும்ப நண்பரோட சாயல் இருந்ததோன்னு பின்னால நானும் சந்தேகப் பட்டேன்.. நடுத்தர குடும்பத்தில் பிறந்து, வளர்ந்த எனக்கு ஆம்பளைகளோட பழகற வாய்ப்பு எதுவும் ஏற்பட்டது இல்ல.. அப்பாவும், அண்ணனும் எல்லாரும் பழையகாலத்து ஆளுங்க.. அதனால விமன்ஸ் காலேஜ்லதான் படிச்சது.. பெண் குழந்தைகள் அடக்க ஒடுக்கமா இருக்கனும்னு, ஏதாவது தப்பு தவறா காதுல விழுந்தா கால கைய ஒடிச்சிடுவோம்னு தினமும் சொல்றதக் கேட்டிருக்கேன்.. கல்யாண மார்க்கெட்டில என்னோட குவாலிபிகேஷனும் அதுதான்.. என்னைப்போல அடக்கமும், ஒடுக்கமும் இருக்கற, வீடே சொர்க்கம்னு நினைக்கற பொண்ணை மனைவியா அடைஞ்சது வரப்பிரசாதம்னு கல்யாணம் ஆன புதுசுல புருஷன் சொல்வாரு..

புருஷன்கள் புதுசா இருக்கறப்ப ஆசையில பொண்டாட்டியப் பத்தி சொல்றத எல்லாம் தண்ணியிலதான் எழுதி வச்சுக்கனும்னு எந்தப் பொம்பளைக்குத்தான் தெரியாது? ஒன்னோ, ரெண்டோ பிரசவம் ஆனவுடன மனைவிய அடிக்கறதும், உதைக் கறதும், கண்ணே.. பொன்னே..ன்னு சொன்ன வாயால பேயே.. பிசாசே..னு கூப்பிடறத உங்களோட எதோ ஒரு நாவல்ல என்னைய வச்சு சொல்லவச்சிருக்கீங்க இல்லையா? அட...! என்னோட அருமையான கதாபாத்திரமே.. அதெல்லாம் எழுத்திலதான்.. சரி.. போதும் போதும் உங்க வாக்குவாதம் எல்லாம்.. என்னை முள்முனையில நிறுத்தாம நாவல் எழுதினதுக்கப்புறம் உங்களோட கதைய சொல்லுங்க.. யாரோடயாவது மனசு விட்டு பேசாமப்போனா நான் பைத்தியமா யிடுவேன்.. நாவலுக்கு பரிசு கிடச்சதுன்னு தெரிஞ்சப்ப, நான் முதல்ல கூப்பிட்டது அவரைத்தான்.. நாவல் எழுதினியா? நீயா? எப்ப அனுப்பின?.. இதுதான் முதல்ல வந்த பதிலா இருந்தது.. பத்திரிகைகள்ல செய்தி வந்ததும், பத்திரிகைகாரங்க பேட்டிக்காக வீட்டுக்கு வந்தப்பவும் சந்தோஷமா இருந்தாரு.. நான் கட்டாயப்படுத்தினதுனால நாவலை படிச்சு பாத்தாரு.. அவ்வளவுதான்.. முகமெல்லாம் இருண்டுபோச்சு.. நீ இத்தனை மோசமானவளா இருப்பேன்னு நினைக் கலன்னு பேசவும் ஆரம்பிச்சாரு.. இதெல்லாம் என்னோட கற்பனைதான்.. தப்பா நினைக் காதீங்க..ன்னு ஒருவிதமா கெஞ்சி சமாதானப் படுத்தினேன்.

பரிசு வழங்கற நிகழ்ச்சிக்கு அரைகுறை மனசோட, வேண்டாவெறுப்போடதான் கூட வந்தாரு.. பரிசைக் கொடுத்துட்டு, சிறப்பு விருந்தாளியா வந்திருந்த பிரபல எழுத்தாளர் பேச ஆரம்பிச்சதும், அவரோட முகம் சிவந்துபோய் துடிக்கறத மேடையில இருந்து நான் பாக்க நேர்ந்தது.. எழுத்தாளர்களை குற்றம் சொல்லமுடியாது.. திருமணத்திற்கு அப்பாற்பட்டு உண்டாகும் உறவுகளைப் பற்றி உண்மையுடன் எந்தத் தயக்கமும் இல்லாமல் எழுதும் எழுத்தாளர்கள்தான் இன்றைய பெண் எழுத்தாளர்கள்.. நாவலாசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய சொந்த அனுபவத்தை வைத்து எழுதிய இந்த நாவல் மிகச் சிறந்த படைப்பு... இப்படி பேசினதக்கேட்டவுடனே என் உடம் பெல்லாம் வேர்த்துக்கொட்டிச்சு.. பின்னால பேசினவங்களும் அவரு சொன்னத ஆமோதிச்சு பேசினதும், மகன தனியா விட்டுட்டு அவர் வெளியே புறப்பட்டுப்போறத பார்த்து எனக்கு கண் பிதுங்கிடுச்சு.. உயிரே நடுங்கிச்சு.

ஏற்புரையில அவங்க பேசினத எல்லாம் நான் மறுப்பு தெரிவிச்சு பேசினதக் கேக்க அவரு சபையில இல்ல.. இதோட வாழ்க்கை யோட தாளம் தப்பிப்போச்சு.. வாழ்க்கையும் தாறுமாறாப்போச்சு.. எத எடுத்தாலும், எதச் சொன்னாலும் குத்தம் சொல்றது.. எப்பவும் ஊசி வச்சு குத்தற வார்த்தைகள்.. யாராவது என்னைத் தேடிகிட்டு போன் பேசினாலோ, நேரில வந்தாலோ ஆணி வச்சு அணுஅணுவா அடிச்சு அடிச்சு பேச்சாலயே ரத்தம் வர்ற வைக்கற வார்த்தைகள் பாய்ஞ்சு வர்றா வெள்ளமா வரும்.. எழுதறத நிறுத்தலாம்னு முடிவு செஞ்சேன்.. ஆனா, ஒரு பிரபல வாரப்பத்திரிகையோட ஆசிரியர் ஒரு நாவல் எழுதித்தரச் சொன்னப்ப எழுதாம இருக்க முடியல.. புருஷனால கைவிடப்பட்ட மனைவி யோட பெருங்கதையா இருந்தது அந்த நாவல்.. அதோட எங்களோட சொந்தமும் முடிஞ்சு போனது.. அவரு என் கிட்ட ஒரு வார்த்தை கூட சொல்லாம இன்னொரு ஊருக்கு டிரான்ஸ்பர் வாங்கிட்டுப் போனப்ப இடி மேல இடியா விழுந்த மாதிரி ஆச்சு.. அவரோட வீட்டுக்குப்போய் விவரத்த சொன்னப்போ தான் குடும்பம் முழுசும் எனக்கு எதிரா இருக்கறது தெரிஞ்சது.

எழுதறத நிறுத்திட்டு, வீட்டுக்குள்ள அடங்கி ஒடுங்கி இருக்கறதுன்னா அவரோடப் பேசிப்பாக்கலாம் கறதுதான் அவங்களோட ஒட்டுமொத்த தீர்மானமா இருந்தது.. என்னோட வீட்டுக்காரங்களுக்கும் இதே அபிப்பிராயம்தான் இருந்தது.. கல்லு மாதிரி கட்டின புருஷன் கண்ணு முன்னாடி இருக் கறப்ப அவன ஏமாத்திட்டு, இன்னொரு பயலைக் காதலிக்கறது, இத எடுத்துச் சொன்னப்ப அவன பாறமேல தலய வச்சு நசுக்கறமாதரி, புருஷன் கைவிட்ட பொண்டாட்டியோட கண்ணீர்கதய எழுதி ஊர்க்காரங்களோட கைதட்டல் வாங்கறது.. இதெல்லாம் என்ன வேலை..? நல்ல குடும்பத்தில பொறந்த பொண்ணுங்க செய்யற வேலயா இது..?.. இப்படி அவரோட அக்கா கேட்டப்போ வாய யாரோ இழுத்து வச்சு தச்சமாதரி இருந்தது எனக்கு.. மறுபடி மறுபடி எழுதி எழுதித்தான் நான் இந்த ஷாக்கில் இருந்து முக்தி தேடினேன்.. இதோட அவர் வீட்டுப்பக்கமே வராமப்போனாரு.. வாடகைக் கொடுக்கறதும் நின்னுபோச்சு..

பணம் இல்லாம வாழமுடியாதுன்னு புரிஞ்சப்ப நான் வேலை தேட ஆரம்பிச்சேன். அப்ப எழுத்துலகத்தில் நான் பிரபலமா ஆயிருந்தேன்.. அதனோட விளைவா ஒரு பத்திரிகை ஆபீசில் ஒரு வேலையும் கிடச்சது இந்த சம்பவங்களால நான் இன்னும் சிறந்த எழுத்தாளரா ஆனேன்.. பெண் எழுத்தாளர் களுக்கு சுதந்திரமா எழுதனும்னா, இலக்கிய உலகத்தில் நிலைச்சு நிக்கனும்னா குடும்ப வாழ்க்கைய அடியோடு மறந்துடனும்ங்கறத உங்களோட எழுத்துகள் மூலமா நான் படிச்சு தெரிஞ்சுகிட்டு இருக்கேன்.. அதனால, இதெல்லாம் எழுதினாலே போதும்.. எனக்கு படிச்சுக்காட்ட வேண்டாம். நீ படிச்சாலும் நான் அத கணக்கில எடுத்துக்கறதும் இல்ல.. வெறும் ஒரு கதாப்பாத்திரம்தான்னாலும், எனக்கும் சில கோட்பாடுகள் இருக்குதுங்கறத நீங்க மறக்க வேண்டாம்.. நீ என்னோட வார்த்தைகளை கடன் வாங்கி ஒன்னும் பேசவேண்டாம்.. என்னோட சோகத்த நீ கேக்கறேங்கறத்துக்காக நீ அதிகப் பிரசங்கித்தனமா பேசவேண்டாம்.. உன் வாய மூட வைக்க எனக்குத் தெரியும்.. ஒத்துக்கறேன்.. இருந்தாலும், நான் ஒரு கருத்து மட்டும் சொல்லட்டுமா..?

கருத்து சுதந்திரம் உள்ளவர்கள்தான் என்னோட கதாபாத்திரங்கள்.. வீட்டில இருக்கற பெண்களோட கண்ணீர் கதைகளையும், வரதட்சணைக் கொடுமையால் பெண்கள் படும் அவலக்கதைகளையும், புருஷன் மார்கள் மனைவிகளை கொடுமைப்படுத்தும் கதைகளையும் பத்தி நீங்கள் பல தடவை சொல்லியிருக்கீங்க இல்லயா? இத எல்லாம் கொஞ்சம் மாத்தி எழுதுங்க.. புரியலயே.. பரிகாசம் செய்யற இல்லயா..? நிச்சயமா இல்ல.. உலகத்துல எல்லாம் மாறும்போது, நம்மளோட பெண்களும் மாறவேண்டாமா..? உன்னோட அபிப்பிராயத்த ஒன்னும் நான் கேக்கல இப்ப.. வெந்த புண்ணில வேலப் பாய்ச்சாதே.. உன்கிட்ட என் சோகக்கதய கொஞ்சநேரம் பேசினதுக்காக நீ ஒன்னும் என்னை கை தூக்கிவிட வர வேண்டாம்.. இதுதான் எழுத்தாளர்கிட்ட பிரச்சனை.. மிஞ்சினா கெஞ்சுவாங்க.. கெஞ்சினா மிஞ்சு வாங்க.. நாம் பேசிட்டு இருந்ததயே நீங்க ஒரு கதயா ஆக்கிடலாமே.. கதாபாத்திரமும் கதாசிரியையும் நேருக்குநேர் பேசறதுலயும் ஒரு புதுமை இருக்கு இல்ல? எத வேண்டும்னாலும் மனசு திறந்து சொல்ல ஒரு வாய்ப்பும் கிடைக்கும்.. என்னோட படைப்பு தான்னாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு புத்தி இருக்கு.. செய்யலாம்.. எனக்கு புதுசா ஒரு கதை எழுத ஒரு கரு உருவாக்கித் தந்ததுக்கு நன்றி.

சத்தம் போட்டு எதுவும் சொல்லாதீங்க.. ஆளுங்க அப்பறம் திருடிதான் கதை எழுதறீங்கன்னு சொல்லுவாங்க.. என்ன பயமுறுத்தாத உனக்கு நான் அனுமதி தரல.. சொந்தக் கதாபாத்திரத்தோட கூட பொறாமை.. சந்தேகம்.. ஈகோ.. இதோப்பாருங்க.. என்ன உங்களோட கதாபாத்திரமா மட்டும் ஆக்க முயற்சி செய்யாதீங்க.. கேரளத்தில சாதாரண மனுசங்களா வேலைக்குப் போகாம வீட்டுல இருக்கற பொம்பளைகளோட பிரதிநிதியா என்ன நீங்க மாத்திரம் இல்ல இன்னும் எத்தனையோ எழுத்தாளர்களும் படைச்சிருக்காங்க.. உங்களுக்கு நேரமும், மனசும் இல்லைன்னா என்ன விட்டுடுங்க.. நான் எம்.டியோடவோ, முகுந்தனுடைய்யவோ, சக்கரியாவுடையவோ கதாபாத்திரமா ஆகிக்கிறேன்.. மாதவிக்குட்டியோட வீட்டில இருக்கற பெண் கதாபாத்திரமா ஆகனும்னு தான் எனக்கு ரொம்ப ஆசை.. அவர் இல்லாமல்போனது பெரிய்ய கஷ்டமாப் போச்சு.. நீங்களும் என்னைப்போல ஒரு பொண்ணு.. எழுதறதும் பொண்ணுகளைப் பத்தி.. அதனால மட்டும்தான் நான் இப்ப உங்க முன்னாடி நிக்கறேன்.. நீ எனக்கு ரொம்பப் பிடிச்ச கதாபாத்திரம்.. நீ என்ன விட்டுட்டுப் போயிட்டா அப்பறம் நான் தனியாளாப் போயிடுவேன்.. அந்தப் பெண் எழுத்தாளருடைய வார்த்தைகள் கண்ணீரில் நனைந்து வெளியே வந்தன.


எழுத்தாளர்கள் வித்தியாசமான பிறவிகள் என்று சொல்றதிலும் அர்த்தம் இருக்கு.. என்னோட தோழியே.. காலத்துக்கேத்தாப்ல கோலத்த மாத்து.. வீட்டுக்குள்ளயே உக்காந்து கிட்டு கத எழுதினா மட்டும் போதாது.. வெளியுலகத்துக்குப் போ.. சமுதாயத்தில நடக்கற எல்லா காரியங்களயும் பத்தி ஆணி அடிச்சா மாதிரி எழுது.. பத்திரிகைக் காரங்களக் கூப்பிட்டு புரியாத பாஷையில பேசு.. அப்பப்ப பிரபலமா இருக்கற சேனல் காரங்களைக் கூப்பிட்டு பேட்டி கொடுத்தா ரொம்ப நல்லது.. புருஷன் உங்களயும், மகனையும் கைவிட்டுட்டுப் போனது பத்திரிகைகளில தலைப்புச்செய்தியா வந்திருந்தா நீங்க இப்ப, இப்படி நொந்து நூலாப் போயிருப்பீங்களா? நான் இப்ப யாரும் இல்லாத ஆளுன்னு நீ நினைச்சா அது தப்பு.. டி.வி சேனல்களில கூப்பிட்டு பேசலன்னாலும், மலையாள எழுத்துலகத்தில நான் என்ன அடையாளப்படுத்தி இருக்கேன்.. எனக்குன்னு ஒரு இடம் இங்க இலக்கிய உலகத்தில இருக்கு.. உன்னைப்போல இருக்கற கதாபாத்திரங்கள் கிட்ட என்னோட அபிப்பிராயங்களைச் சொல்றதுதான் என்னோட பாணி.. அது போதும்னு எனக்கும் தோண ஆரம்பிச்சிடுச்சு.. அடுத்தவங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில மூக்கை நுழைச்சு, வம்பு தும்பை துப்பு துலக்கி அதுல சந்தோஷம் அடையறவங்கதான் இன்னைக்கு இருக்கற ஜனங்க செய்யறது..

வாழ்க்கையில் ஒரு சமயத்திலகூட பாக்காததும், கேக்காததும், அனுபவிச்சிட்டு இல்லாததுமான காரியங்கள்.. பொடி வச்சு, வம்பு தும்புகளை எல்லாம் இட்டுக்கட்டி பக்கம் பக்கமா எழுதிசொந்தக் கதயாக்கும் போது, அத வச்சுதானே எழுத்தாளர்கள் எல்லாம் புகழோட உச்சாணிக்கொம்பை எட்டிப் பிடிக்கறது..? நினைவுக்குறிப்பு களுக்கும் இப்ப நல்ல டிமாண்ட் இருக்கு.. குறிப்பா புருஷன்களைப் பத்தி கண்ணீரோட டைரிக்குறிப்புகளுக்கு.. இளமையில மலையில ஏறினதையும், மழையில நனைஞ்சதையும், காதல் செஞ்சதையும் பொண்ணு சொல்றப்ப பத்திரிகைக்காரங்க அதயல்லாம் கொண்டாடறது உண்டு.. பாக்கறது உண்டு.. கேக்கறதும் உண்டு.. ஆனா.. மறுபடியும் ஆனா.. என்ன நீங்க ஒரு தீவிரவாதியா ஆக்குங்க.. புருஷன விட்டுட்டு காதலன்கூட ஓடிப்போன துணிச்சலான மனைவி.. கல்யாணம் செஞ்சுக்காம காதலன்கூட சேர்ந்து வாழவும், அவனோட குழந்தயப் பிரசவிக்கவும் தைரியமான வீரப்பெண்.. என்னைப் பைத்தியமாக்காம வாய கொஞ்சம் மூடறியா நீ? வெறும் ஒரு கதாபாத்திரமான உனக்கு இப்படி வாயில வந்தத எல்லாம் சொல்லலாம்.. நீ சொல்ற மாதரி எதாவது எழுதினா இடிஞ்சு விழறது நான் இதுவரை உருவாக்கி வச்சிருக்கற என்னோட இமேஜாயிருக்கும்.. அப்பறம் எனக்கு சமூகத்தில முகமே இல்லாமப் போயிடும்.. வேண்டாம்னா என்ன சும்மா விடு..

நல்ல பொண்டாட்டின்னு பேரு வாங்க அடுக்களையில எரிஞ்சு வேகற ஒரு கதாபாத்திரமா ஆக எனக்கு இனிமே மனசு இல்ல.. முஜே சேஞ்ச் ஹோனாச்சாஹியே.. எனக்கு மாறியே தீரணும்.. ** அம்மா.. அக்கம்பக்கதுல எல்லாம் மனுஷங்க இருக்காங்க.. ஏற்கெனவே உன்னைப் பத்தி ஆளுக்கு ஆள் ஒவ்வொன்னு சொல்லிகிட்டு இருக்காங்க.. இப்படி தனியா உக்காந்துகிட்டு உனக்கு நீயே பேசிகிட்டு இருந்தா.. அவள் பயந்த கண்களுடன் சுற்றுமுற்றும் பார்த்தாள். மின்விளக்கின் ஒளியில் அவள் முன்னால் நின்று கொண்டிருந்த கதாபாத்திரத்தின் சுவடுகூட எங்கேயும் காணவில்லை.. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**பாவேந்தர் பாரதிதாசன் திரைத்தமிழ்**

**-ச.சு.இளங்கோ**

'ஒருமுறை விமானப் பயணம் மேற்கொள்ள வேண்டும்.பாரதியார் பற்றி ஒரு திரைப்படம் எடுக்க வேண்டும்.மாபெரும் நூலகம் ஒன்றை உருவாக்க வேண்டும்.'

இந்த மூன்றையும் தாம் வாழ்காலத்தில் அடைந்துவிட விருப்பப்பட்டார்.அவை நிறைவேறாமலே உயிர் நீத்தார் பாரதிதாசன்.

திராவிட இயக்கப் படைபாளர்களுள் முதன் முதல் திரைப்படதுறைக்குள் (1937) நுழைந்தவர் பாரதிதாசன் என்னும் அறிமுகத் தோடு நூலில் விரிந்து காணப்படுகிறது.

வளைந்து நெளிந்து போகின்ற திரைத் துறையில் பாரதிதாசன் வளையாபதியாக இருந்துள்ளார் என்பதற்கு எடுத்துக் காட்டுகள் ஏராளம்.நல்லதொரு தொகுப்பாக்கி தமிழ்கூறு நல்லுலகுக்கு படைத்தளித்துள்ளார் முனைவர் ச.சு.இளங்கோ.

நூலாக்கம் பெறாத பாரதிதாசனைப் பற்றிய கட்டுரை என்று நைனாமலை எழுதிய கட்டுரையும் பாரதிதாசன் எழுதிய கட்டுரை களில் சில நூலாக்கம் பெறாமலே போனவற்றையும் இந்நூலில் இடம்பெறச் செய்தமை சிறப்பாக அமைந்துள்ளது.

பாரதிதாசன் திரைவாழ்வை அறிய பெரிதும் பயன்படும் வண்ணம் இந்நூல் படைக்கப்பட்டுள்ளது.

வெளியீடு : இசையமுது பதிப்பகம்
விற்பனை உரிமை : பாரி நிலையம்,
88/184, பிராட்வே, சென்னை - 600 108.
பக்கங்கள் : 488, விலை : ரூ.180.

**நீர் கொத்தி மனிதர்கள்**

**- அபிமானி**

உயிரளிக்கும் தண்ணீரில் கூட உயர்வு தாழ்வு பார்த்து வாழும் சமுகம்.விலங்குகளும் மனிதர்களும் தம் தாகத்தைத் தனித்துக் கொள்ளச் செல்லும் செயல் வெறும் கானல் நீர் காட்சிகளாகவே தோன்றி மறைகின்றன.

உலகளவில் நீர்ப்போர் மூன்றாம் உலகப்போராக உருவெடுக்கப் போகும் நிலையில் தாழ்த்தப்பெற்ற மக்களின் தண்ணீருக்கான போராட்டமாக, புதினமாய் அபிமானியின் மனத்தில் நீரும் நெருப்புமாக மாறியிருக்கிறது.

தாகத்தால் தவிக்கும் மக்களுக்கு அரசாள் வோரால் நிறைவு செய்யப்படாமலே இருந்து வருகின்ற இழிநிலை நெடுங்கதையாகி விட்டன.

தம் சொந்த சொகுசுக்காக பிறரை அவமதித்து வாழ்வோர் இடையே,தண்ணீர் என்பது சாதியத் தீயாக மாறியிருக்கிறது. தாழ்த்தப்பட்டோரின் அலைபாய்ந்து ஆர்ப்பரிக்கும் கேடுபாடுகளை நெல்லை மாவட்டத்தில் ஓர் ஊரில், நீரற்ற சமுகமாக வாழும் அவலங்களை வலியோடு காட்சிப் படுத்தி உள்ளார்.

வெளியீடு : காவ்யா,
16, இரண்டாவது குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம்,சென்னை -600 024.
பக்கங்கள் : 318, விலை : ரூ.250



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெயர் தெரியாப் புலவர்களின் பெயர் சொல்லும் பாடல்கள்

தமிழர் தம் பண்பாட்டு அடையாளங்களை உலகிற்கு எடுத்துணர்த்தும் உயரிய இலக்கியங்களே சங்க இலக்கியங்கள். உயர்ந்த ஒழுக்க நெறிகளையும் தமிழ் தமிழர் தமிழகம் பற்றியும் அறிய உதவும் வரலாற்றுப் பெட்டகம். ஒன்பது அடிச் சிறுமையும் 12 அடிப் பெருமையும் கொண்ட இந்நூல் எட்டுத்தொகை நூல்களுள் முதல் நூலாக வைத்துப் போற்றப்பெறும் பெருமைக்கு உரியது. இத்தகு அரிய நூலைத் தொகுப்பித்த அரசன் தமிழ் வளர்த்த பாண்டியர் மரபில் வந்த பன்னாடு தந்த மாறன்வழுதி. 400 பாடல்கள் கொண்ட இந்நூலில் 5 பாடல்களைப் பாடிய புலவர்களின் பெயரை அறிய முடியவில்லை. பெயர்பெற வேண்டும் எனும் விருப்பமற்ற பெருமைக்கு உரியவர்கள் போலும் அவர்கள். தொகுத்தவர் யார் என்பதும் தெரியவில்லை. ஆயினும் பெயரற்ற பாடல்கள் ஐந்தனுக்குப் பெயர்சூட்டிய சிறப்பிற்கு உரியவர் அவர்.

அந்த வகையில் நற்றிணையின் 95ஆம் பாடலைப் பாடிய புலவர் அப்பாடலில் இடம் பெற்றுள்ள "குறக்குறு மாக்கள் தாளம் கொட்டும்" என்னும் தொடரால் கொட்டம் பலவனார் என அழைக்கப் பெறுகிறார். அழகான குறிஞ்சிநிலக் காட்சியைக் காட்டும் குறிஞ்சித்திணைப் பாடல் இது. சில பதிப்புகளில் கோட்டம்பலவனார் எனக் குறிக்கப்பட்டு அது இன்றுள்ள கேரள மாநிலத்தின் கொச்சிக்கருகிலுள்ள அம்பலக் கோடு என வழங்கப் பெறுவதாகவும் இப்பாடலைப் பாடிய புலவர் அவ்வூரைச் சார்ந்தவர் எனவும் குறிக்கப் பெற்றுள்ளார். அச்சுப்படியில் கொட்டம்பலவனா எனச்சுட்டப் பெறுவது கொண்டு இதனாசிரியர் இப்பாடல் தொடரால் பெயர் பெற்றவர் என்பதே ஏற்புடைத்து.

இனி பாடலுக்குள் செல்வோம். மலைச்சாரலின் மரங்கள் அடர்ந்த எழிற்சூழலை நுகர்ந்து கொண்டே சென்ற கலைவல்லுநனாகிய கட்டிளம் காளையின் மனத்தை அவனுக்கு முன்னே நடந்து சென்ற மணம் வீசும் கூந்தலையுடைய எழிற்குமாரி யொருத்தி இலாவகமாகக் கவர்ந்து கொண்டு அவள்பாட்டுக்குச் சென்றுவிடுகிறாள். வெற்றுக் கூடாக மீளும் இளைஞனின் பொலிவற்ற முகம் கண்ட தோழன், சென்ற இடத்தில் நேர்ந்தது என்ன என வினவுகிறான். அதற்குப் பதில்கூறும் இளைஞன் குன்றகத்திலுள்ள சிற்றூர் எழிற்காட்சிகளைக் காண விரைந்து சென்ற நான் மணம் வீசும் கூந்தலையுடையாளின் அழகில் வீழ்ந்து விட்டேன். என் நெஞ்சைப் பிணித்துச் சென்ற அவளே இரக்கப்பட்டு அதனை விடுத்தாலன்றி பிறரால் விடுவிக்கவியலாது எனப் புலம்புகிறான். இதனை "குன்றகத்ததுவே கொடுமிளைச் சீறூரோளே நாறுமயிர்க் கொடிச்சி கையகத்து அதுவே விடுத்தற் காகாது பிணித்தஎன் நெஞ்சே" என்கிறான். காட்சி விவரணையில் வித்தகரான இப்பாடல் ஆசிரியர் கொட்டம்பலவனார் எனப் பெயர் பெறக் காரணம் யாதெனக் காண்போம். அவர் காட்டும் மலைச்சாரலின் சிற்றூரில் உயர்ந்து அடர்ந்த மரங்கள் பல நின்றிருந்தன. அவற்றுள் வலிய இருமரங்களுக்கிடையே நன்கு முறுக்கப்பட்ட உறுதியான கயிற்றைக்கட்டி கழைக்கூத்தாடும் பெண்ணொருத்தி தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கழைக்கூத்தாடிகளில் கீழேயிருந்து மேளம் கொட்டுபவர்கள் ஆண்களாகவும் கயிற்றின் மீது நடப்பவர்கள் பெண்களாகவும் இருப்பதை இன்றைக்கும் காணலாம். இதிலிருந்து மனவொருமையோடு ஒரு செயலைச் செய்வதில் பெண்களே வல்லவர்கள் என்னும் உண்மையும் புலனாகிறது.**

பயிற்சியை முடித்துவிட்டு அக்கயிற்றை அவிழ்க்காமல் சென்றுவிடுகிறாள். இத்தகு கழைக்கூத்தாடிகளில் கீழேயிருந்து மேளம் கொட்டுபவர்கள் ஆண்களாகவும் கயிற்றின் மீது நடப்பவர்கள் பெண்களாகவும் இருப்பதை இன்றைக்கும் காணலாம். இதிலிருந்து மனவொருமையோடு ஒரு செயலைச் செய்வதில் பெண்களே வல்லவர்கள் என்னும் உண்மையும் புலனாகிறது. பெண் அவ்வாறு நடக்கின்ற நேரத்தில் அவர்களின் சிறுவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்வதும் குட்டிகரணம் அடிப்பதும் ஒலியெழுப்பி விசில் அடிப்பதும் கவனமாக உற்றுநோக்கி அவர்கள் ஆயத்தம் ஆவதும் இன்றைக்கும் நிகழ்கின்றது. இவர்கள் ஊர்ஊராகச் சென்று இருபுறமும் மூங்கில் கழியை நட்டு முறுக்கேறிய கயிற்றால் பிணித்து பல்வேறு வித்தைகளை மக்கள் கூடும் இடங்களில் நிகழ்த்தி நிறைவாகப் பணம் பெறுவார்கள். அப்படி நிகழ்த்தப்பெறும் கழைக்கூத்தாட்டத்தின்போது குழலும் யாழும் பறையும் பல்வேறு வாத்தியங்களும் இசைக்கப்பெறும். இசைக்கேற்ப நின்றும் நடந்தும் மூங்கில் கழியைக் கையில் தாங்கிச் சிதறாத கவனத்தோடும் மனஒருமையோடும் நிகழ்த்தப்பெறும் இக்கலை நிகழ்ச்சி கரணம் தப்பினால் மரணம் எனும் பழமொழிக் கேற்றவாறு இக்கலை நிகழ்ச்சியில் ஆபத்துகளும் மிகுதி.

என்றோ ஒருநாள் இக்காட்சியைக் கண்ணுற்ற நன்கு கனிந்த அத்திப்பழம் போன்று சிவந்த முகத்தையும் பஞ்சு போன்ற மெல்லிய பறக்கும் தலைமுடியையும் உடைய பெண் குரங்கொன்று தானும் அக்கழைக் கூத்தாடி போன்றே செய்ய முயற்சிக்கிறது. வலியஅக்கயிற்றின் மீது ஏறி அந்தப் பக்கத்திலிருந்து இந்தப் பக்கமும் இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கமும் நடைபயில்கிறது. அப்படி பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் அதனை விட்டு நீங்காத அதனுடைய குட்டி அதனைப் பற்றிக்கொண்டு தொங்குகிறது. வேடிக்கையான இக்காட்சியைக் கண்ட குறவர்களின் சிறுவர்கள் மலையில் அமைந்துள்ள உயர்ந்த பாறையின்மீது ஏறிநின்று மிகுந்த ஆரவாரத் தோடு கைகளைக் கொட்டித் தாளம் போடுகின்றனர் என்பதை "கழைபாடு இரங்கப் பல்லியம் கறங்க ஆடுமகள் நடந்த கொடும்பு நோன்கயிற்று அத்வத் தங்குனி யன்ன செம்முகத் துயத்தலை மந்தி வன்பறழ் தூங்க வரைக்கண் இரும்பொறை ஏறி இரைந்தெழுந்து குறக்குறு மக்கள் தாளம் கொட்டும்அக் குன்றகத்ததுவே கொடுமிளைச் சீறூர்" எனச் சிறப்பு பொருந்திய அவ்வூரைச் சுட்டுகிறான் தலைவன். அத்தகு மலைநிலத்தலைவனின் செல்வச்செழிப்பு மிக்க குடியில் பிறந்தவள் அத்தலைவி என்பதை அவளின் நீண்டு வளர்ந்த கூந்தலையும் எழிலையும் சுட்டுவதால் பெறவைக்கிறார் பாடலாசிரியர். ஆள் அரவமற்ற தோப்பும் சோலையும் சூழ்ந்த இயற்கை எழில்கொஞ்சும் அவனிடத்தில் நடந்து சென்ற அவளைப் பின்புறமிருந்து காணும் வாய்ப்பு தலைவனுக்கு வாய்க்கிறது. அவளின் நீண்ட கூந்தலிலிருந்து பெருகி வரும்காற்றுக்கே வாசமூட்டும் நறுமணத்தால் பிணிக்கப்பெறுகிறான் தலைவன். அவளும் அவளின் அஞ்சனக்கண் வாளாலே அவன் இதயத்தை அறுத்தெடுத்துச் சென்று விடுகிறாள். தோழன் போன்றோர் ஏதேனும் முயற்சி செய்து அந்நெஞ்சத்தை விடுவிக்கலாம் என்றாலும் அது இயலாது என்கிறான் தலைவன். அவளே அருள்கூர்ந்து அளி செய்தாலன்றி அடுத்தவர் தலையீட்டால் ஒருபயனும் விளையாது என்பதையும் தெள்ளத்தெளிவாகக் குறிப்பிடுகிறான். அவளை அடைந்தாலன்றி வாழ்க்கை அமையாது என்பது புலப்பட பிணித்த என் நெஞ்சு விடுத்தற்கு ஆகாது எனச்சுட்டுவது கொண்டு உணரலாம். கொடிச்சி கையகத்தது என் நெஞ்சு என்பது கொண்டு இருவர் கருத்தும் ஒத்தமையையும் உணர்த்துகிறான் தலைவன். இத்தகு அழகிய காதல் காட்சியைக் காட்டிய இப்பெரும் புலவர்க்கு கொட்டம்பலவனார் எனப் பெயர் சூட்டிய தொகுப்பாசிரியரின் மதிநுட்பம் போற்றத்தக்கது அன்றோ.■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரமாதித்யனின் கவிதையனுபவம்
# வயதென்ற ஒன்று

மரணத்தின் தகவலைக் கைபேசிய பொழுதிலேயே
அவன் திரவமயமாக இருந்திருக்கலாம்.
குவளையைக் கீழே வைத்த அடையாளம்
அப்புறம் எந்த அசைவிலும் இல்லை.

நுரைத்துப் பொங்கிய துக்கம் நாலா திசைகளிலும்
குழறிய மிக நெருக்கமான வார்த்தைகளில் வழிந்தது.
தேய்ந்த வெள்ளி மிஞ்சி மினுக்கும் விரல்களின் மீது
குப்புறக் கவிழ்ந்து அழுது முத்தினான்.

"பாவி கையால் எவ்வளவு சாப்பிட்டிருப்பேன்"
வயிறு கிழிய அடித்துக்கொண்டு
உறவு சொல்லிப் புலம்பினான் ஒவ்வொருவரிடமும்.
கருப்பந்துறைக் காடு வரை தூவிய
ஒவ்வொரு வழிப்பூவிடமும் உரக்கப் பேசினான்.

சிதையேற்ற விடாமல் குறுக்கே குறுக்கே
கைகளை நீட்டி மறிக்கும் அவனை
வசவு சொல்லி யாரோ ஒருவர்
அறைந்ததும் விழுந்தான் எருக்கலஞ் செடிமேல்.

சாம்பல் நிறக் காளான் குடும்பமாய்
விழுந்த மண்ணில் முளைத்தது அவன் முகம்.
மல்லாந்து கிடந்தவனைத் தடவிக் கொடுத்தது
கால அகால தூங்குமூஞ்சி மரநிழல்.


இறந்த முகத்தை விட்டு அவனுடைய கவனம்
கவியும் கிளைகளுக்கு நகர்ந்துவிட்டது.
"இந்த மரத்துக்கு என்ன வயது இருக்கும்?"
யாரையும் பாக்கி வைக்காமல்
ஒவ்வொருவரிடமும் துவங்கியது கேள்வி.
சிதை மண் குழைத்தவர், மழித்த நாவிதர்
இவனைப் போலவே குடித்திருந்த இன்னொருவர்
எல்லோரிடமும் இடைவெளி விடாமல்
"மரத்திற்கு என்ன வயதிருக்கும்" என
அவ்வப்போது ஏறிட்டுப் பார்த்து
அடிமரத்தில் வெடித்த பட்டைகள் தடவி
ஊரும் ஒற்றை எறும்போடு ஊர்ந்து
மறுபடி மறுபடி கேட்டு வந்தான்.

"தூரைப் பார்த்தால் நூறு வயது"
பாடுவது போலத் திருப்பிச் சொன்னவன்
எத்தனை வயதிருக்கும் என்று
என்னையும் கேட்டான்.

'உன்னுடைய வயதுதான் அதனுடைய வயது'
சொல்லத் தோன்றி, சொல்லாமல் சிரித்தேன்.
மரத்தின் வயதைக் கேட்கும் ஒருவனுக்கு
வயதென்ற ஒன்றெல்லாம் உண்டா என்ன?

**- கல்யாண்ஜி**

('மணல் உள்ள ஆறு' தொகுப்பு, பக்கம்: 21-22)



எதை முக்கியமாகக் கருதவேண்டும் என்பதை அந்தந்தப் படைப்பாளிகள் மட்டுமே தீர்மானிக்க முடியும். படைப்பாளிகள் தீர்மானம் என்பது, அவர்களது வாழ்வின், அவர்களது பின்புலத்தின் தீர்மானமாகவே இருக்கிறது. நமக்குக் கைநுனியில் ஆரம்பிக்கிற விரல்கள், ஒரு படைப்பாளிக்கு மனதின் அடியிலிருந்து முளைக்கின்றன. மனதின் கருதுகோள்கள் வினோதமானவை. சிலசமயம், அது ஓங்கிக் குரலெடுத்துப் பாடுகிற வெளிப்படையான தெருக்கூத்து; சில சமயம், பாவைக்கூத்து பொம்மலாட்டம்...எதிரில் இரை திரியும்போது, பசித்த புலி, மர நிழல்கள் தரையில் அசைவதையே இமைக்காமல் பார்த்திருக்கிறது போன்ற படைப்பு மனநிலைகூட உண்டு. சாத்தியம் - சாத்தியமற்றது என்ற அடைப்புக் குறிகளுக்கு அப்பாற்பட்ட இந்த இயக்கத்தின் உந்துதலிடத்தைப் பெறுவது அவனவன் வாழ்விலிருந்து படைப்பாளி பெறுகிற சரியான அல்லது மோசமான கலவையே அவன் எழுத்தையும் தீர்மானிக்கக்கூடும்.

"படைப்பாளி, அவனவன் வாழ்வை, அவனவன் கதையைச் சொன்னால் போதும்; கவிதையை எழுதினால் போதும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவித்துவம் என்பதை, படைப்பு, ஒரு பிரதி ஆவதற்கு முந்திய நேரத்துக்குவரை கவிஞனிடம் இருந்த மனஉணர்வுகளாகவே பார்க்கத் தோன்றுகிறது. வில்வண்டி ஓட்டுகிறவன் மனநிலையும் வில்வண்டிக்குள் உட்கார்ந்திருப்பவனுடைய மனநிலையும் வேறு. ஆலம் விழுதுகள் அசைகிற, இருப்புப் பாதைகள் குறுக்கிடுகிற, பனம்பழம் விழுந்து கிடக்கிற, காட்டு ஓடைகளுக்கான தாம்போதிகள் இறங்கியேறுகிற, தலையில் நார்ப்பெட்டியோடு நின்றுகொண்டே சிறுநீர் கழிக்கிற பெண் ஒதுங்கி நிற்கிற, சோற்றுக் கற்றாழைப் பச்சைக்கத்திகள் வெயிலில் மினுமினுக்கிற பாதைகள் இரண்டு பேருக்கும் உண்டாக்குகிற அனுபவங்கள் வேறு. உள்ளே இருப்பவன், வண்டி ஓட்டுகிறவனின் அனுபவத்தைக் கற்பனை செய்யும்போது இந்தக் கவித்துவம் செயல்படத் துவங்குகிறது.

"மனதிற்கும் விரல்களுக்கும் காகிதத்திற்குமான இடைவெளியில், படைப்பாளியின் மொழி ஆளுமையும், மொழியைப் பற்றிய புரிதலும், மொழியைப் பற்றிய வரலாற்று அக்கறையும் அவனுடைய சொற்களை வழிநடத்துகின்றன. திருத்தம் செய்வதற்கு முந்தைய கைப்பிரதி வரை, குடிமகள் கையில் எடுத்திருக்கிற குளிப்பாட்டாத பச்சைப் பிள்ளை மாதிரி, கவிதை, கருவறை வாசனையோடு, கண்களை இறுக்க மூடி, கைகளைச் சிவக்க மூடி அழுதுகொண்டிருக்கும். கைப்பிரதியில் திருத்தம் செய்யும்போது, சமூகம், அதிகாரம், அரசியல் எல்லாம் சுற்றி நின்று உத்தரவிடவும் வாய்ப்புண்டு. நல்ல கவித்துவம் உத்தரவுக்குக் கீழ்ப்படியாது."

**- வண்ணதாசன்**

**(சந்தியா பதிப்பக வெளியீடான 'கலாப்ரியா கவிதைகள்' நூலிலிருந்து)**

நேர்கவிதை; சிறுகதை மாதிரி; கல்யாண்ஜி கவிதைகள் எல்லாமே எளிமையானவைதாம்; இதுவும் அவன், ஜீவனுள்ள ஓவியமாக.

வெள்ளைக் கவிதைக்கு விளக்கம் வேண்டியிராது.

நேர்கவிதையை விவரிப்பது தேவையில்லாதது.

கவிதையில், வாழ்க்கை உயிர்ப்போடு.
மனிதர்கள், யதார்த்தமாக.
உலகம், உள்ளது உள்ளபடி.
அத்தனையும் அவதானிப்புகளாக.
வேறென்ன வேண்டும்.

"பொங்கிய துக்கம்" என்பதே போதுமானது.

"நுரைத்து," தொந்தரவுபடுத்துகிறது.

"இந்த மரத்துக்கு என்ன வயது இருக்கும்?" எனக்கேட்டுக்கொண்டிருக்கும் அவன் யார்.

"தேய்ந்த வெள்ளி மிஞ்சி மினுங்கும் விரல்களின் மீது
குப்புறக் கவிழ்ந்து அழுது முத்தினான்.
'பாவி கையால் எவ்வளவு சாப்பிட்டிருப்பேன்'
வயிறு கிழிய அடித்துக்கொண்டு
உறவு சொல்லிப் புலம்பினான் ஒவ்வொருவரிடமும்."

இறந்து கிடக்கும் பெண்மணி யார்.

வெளிப்படையாக எதுவும் கூறப்படவில்லை.

இழப்பும் அதனால் ஏற்படும் துக்கமும் தாமே விஷயம்.

அதனால் இங்கே வேண்டியதுமில்லை.
(வாசகன் யூகித்துக் கொள்ளலாம்.)

குடித்திருப்பவன், இதுமாதிரி நேரத்தில், நெகிழ்ந்து போயிருப்பது இயல்புதான்.

குடி, துக்கத்தையும் அதிகரிக்கவே செய்யும்.

இதேபோல, போதைக்காரன் சிந்தை சட்டென்று
மாறக்கூடியதும்கூட.
அதுதான்
"இறந்த முகத்தைவிட்டு அவனுடைய கவனம்
கவியும் கிளைகளுக்கு நகர்ந்து விட்டது."

மனிதார்த்தமான விஷயங்கள் எப்பொழுதும்
தன்னியல்பிலேயே சீரிய கவிதைகளாகி விடும்.
அப்படித்தான் இதுவும்.

(கருப்பந்துறைக் காடு : திருநெல்வேலி டவுன் பகுதிக்கான சுடுகாடு.
வெள்ளி மிஞ்சி : மெட்டி.)

"பொங்கிய துக்கம்" என்பதே போதுமானது.

"நுரைத்து", தொந்தரவுபடுத்துகிறது.

"வழிப்பூ" என்ற வார்த்தையும்.

எதார்த்தக் கவிதைக்குப் பொருந்தாத சொற்கள் இவை.

அவதானிப்புகள், விவரிப்புகளை இரண்டொரு வார்த்தைகள்கூடக்
கெடுத்துவிடும் அபாயம் இருக்கிறது.
(இது இளங்கவிஞர்களுக்கு)
மற்றபடி, குறையொன்றுமில்லை. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவகண்டம்



கடல் என்பது மீன்தான் என்று
நான் சொல்லிக்கொண்டிருக்கும்போதே
வலையோடு வந்த ஒருவன் சொன்னான்
இல்லை அது தண்ணீர் என்று

தண்ணீர்தானென்றால்
கேனில் அடைத்து விற்றுவிடலாமேயென
துள்ளிய மற்றொருவனிடம் உப்புத்தண்ணீரை
யாரடா வாங்குவார்கள் என்றேன்
அதனாலென்ன
தண்ணீரையும் உப்பையும் தனித்தனியாகப் பிரித்து
தண்ணீரை தண்ணீரைவிட சுவையானது எனவும்
உப்பை உப்பைவிட கரிப்பானதெனவும்
இரட்டை வியாபாரம் நடத்தலாமென்றான்

வியாபாரம் என்று வந்துவிட்டால்
எதையாவது விற்றுக்கொண்டேயிருக்க வேண்டுமென
எல்லாவற்றையும் விற்கத் தொடங்கியவர்கள்
இறுதியில்
தத்தமது தலையை வெட்டி தராசில் நிறுத்தினர்

இத்தனைப் பிணங்களையும் எப்படித்தான் தின்பதென
பொய்யாய் சலித்தபடி
இரையெடுக்கத் தாழும் கழுகினை வீழ்த்த
கவணில் பொருத்துகிறேன்
என் தலையை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்வினை

அச்சு முறிந்துவிடுமோவென அஞ்சுமளவுக்கு
பாரவண்டியில் சொற்பொதியேற்றி
சந்தைக்குப் போனவேளையில்
அனேகரும் அவ்விதமே வந்திருக்கக் கண்டேன்

மூட்டையிலிருந்து அவிழ்த்து
மண்டியில் கொட்டிய மாத்திரத்தில்
பண்டத்திற்குரிய தோற்றம் பெற்றுவிட்ட சொற்களை
கிளைத்தும் கலைத்தும் நசுக்கியும் பிதுக்கியும்
நயம் பார்த்து தரம் தீர்த்து
பலபட பேசிய சொல்வணிகனொருவன்
பண்டத்தின் பெறுமதி விற்பனையில்தான் என்றான்

சந்தை
அதற்கேயுரிய பரிவர்த்தனை விதிகளோடு
இயங்கத்தொடங்கிய சற்றைக்கெல்லாம்
கொள்முதலுக்குரிய பண்டமென
பரத்திவைக்கப்பட்டிருந்தேன் நான்
பழிதீர்த்துக்கொண்ட நமட்டுச்சிரிப்போடு
டெல்லி அப்பளம் தின்று கொண்டிருக்கின்றன
என் சொற்கள். ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சாவூர் வி.அ.இளவழகன்



தொ(ல்)லைக்காட்சி நிகழ்ச்சி ஒன்று! தமிழில் இவ்வளவு இனிமையாக இயல்பாகப் பேச இயலுமா? அரை நிர்வாண ஆடைகள் அணிந்தவர் உடைகள் இப்போதோ எப்போதோ நழுவிவிடுமோ? என்ற திகிலுடன் பார்த்துக் கொண்டிருந்தேன். அசத்திப் புட்டீங்க, பட்டைய கிளப்பிட்டீங்க, பெரிசு, சூபர்ப் பெர்பார்மர், எபிசோட், ஈவன்ட், எனர்ஜி, கெமிஸ்ட்ரி - போன்ற தமிழ்ச் சொற்கள் எல்லோர் வாய்களிலிருந்தும் உதிர்க்கப்பட்டன. கெமிஸ்ட்ரி என்றதும், ஏதோ அல்கெமிஸ்ட்ரி, பயோ கெமிஸ்ட்ரி, நியுக்கிளியர் கெமிஸ்ட்ரி, நானோ கெமிஸ்ட்ரி, ஜியோ கெமிஸ்ட்ரி, கிளினிக்கல் கெமிஸ்ட்ரி, இன்ஆர்கானிக், ஆர்கானிக், பிசிக்கல், குவாண்ட்டம் கெமிஸ்ட்ரி - என்பவை பற்றிப் பேசப் போகிறார்களோ? என, ஆயத்தமானேன். அப்படியல்ல! எனப் போகப் போகத் தெரிந்து கொண்டேன். ஆண் நிகழ்த்துநரும், எந்த அளவுக்கு உடல் உறுப்புகளைப் பிதுக்கிக் காட்டுகிறாரோ அந்த அளவுக்கு பெண் நிகழ்த்துநர் செய்து காட்டினால், கெமிஸ்ட்ரி உச்சகட்டமாம். ஆட..... ஆட.... ஆடு... ஆடு... போன்ற நடன! நிகழ்ச்சிகள், டி.ஆர்.பி. ரேட்டிங்கில் உயர்ந்த இடமாம். கெமிஸ்ட்ரி என்பதன் விரிவான விளக்கத்தையும் தெரிந்து

# நாளைய உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் வேதியியல் போர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நாடுகளை எல்லாம் வென்று தன் ஆட்சியில் கொண்டுவர போர் வெறி கொண்டான் ஒருவன். தன்னுடைய 20ஆம் அகவையிலிருந்து 30ஆம் அகவைக்குள், கி.மு. 383-323களில், பாரசீகம் தொடங்கி பஞ்சாப் வரை உலகத்தின் சரிபாதியை வென்றான். அவன்தான் கிரேக்க மாவீரன், அலெக்சாண்டர்.

கொண்டேன். உங்களுக்குப் புரிந்ததா? கெமிஸ்ட்ரி என்றால் என்னவென்று?

வேதிப் பொருட்கள் எனும் மாபெரும் கடலில் மிதக்கும் ஒரு தூசு அல்லது துகள்-தான் மனிதன். தொடர்ந்து அப்படியே மிதக்கப்போகிறானா? அல்லது மூழ்கப் போகிறானா? என்பதுதான் இப்போதைய கேள்வி. விந்தையும் நுண்மையும் உள்ள மாபெரும் வேதியியல் தொழில்நுட்பக் கூடமே மனித உடல். அண்டத்தில் உள்ளதே பிண்டம் பிண்டத்தில் உள்ள அண்டம் - எனும் தத்துவ அடிப்படையில் மனித உடலில் எல்லா வேதியியல் மூலக்கூறுகளும் புரதமாக (Proteins), மாவுப்பொருளாக (Carbohydrates), கொழுப்புகளாக (Lipidstats), கனிமங்களாக (Minerals and vitamins) செறிந்து விளங்குகின்றன.

பத்து விரல்களை மூலதனமாகக் கொண்ட மனிதன் கைகளில் கூரிய கற்களும், மரக்கழிகளும், கம்புகளும், கவைகளும் கழிகளும் ஆயுதங்களாகக் கற்காலத்தில் புகுந்தன என்பதுதான் எல்லோரும் வழங்கும் ஆயுத விளக்கம். அதற்குப் பின்னர் வேல், வாள், ஈட்டி, வில், அம்பு என வந்த ஆயுதங்கள் எல்லாம் மறைந்து, இப்போது வேதியியல் ஆயுதங்கள் (Chemistry weapons) என்ற நிலைக்கு உலக சமுதாயம் தள்ளப்பட்டு விட்டது.

'இந்தியா வல்லரசாக மாற வேண்டும்', என அரசியல்வாதிகளிலிருந்து ஆன்மிக வாதிகள் வரை, நீர் வருங்கால் கத்துகின்ற நெடுந்தவளைக் கூட்டமாகக் கத்தி வருகின்றனர். வல்லரசு - நல்லரசு, என்பவற்றை யார் தீர்மானிப்பது? நல்லரசாக மட்டும் இருந்தால் போதாதா? வல்லரசின் அளவுகோல் என்ன? எந்த அளவிற்கு வேதியியல் ஆயுதங்களைத் தயார் செய்து உள்நாட்டுக் கலவரங்களில், வெளிநாட்டுப் போர்களில், விண்கணைகளில் ஏவுகலன்களில் பயன்படுத்து கிறோமோ அந்த அளவை வைத்துதான் வல்லரசு என மதிக்கப்படுகிறதா? The army marches towards the stomach என்கிறார்கள். நாட்டு மக்களில் 100க்கு 20பேர்கள், மூன்றாவது வேளை உணவில்லாமல் பட்டினியோடு போராடிக் கொண்டுள்ளனர். இயற்கை வளங்களைச் சுரண்டிச் சுருட்டுகின்றனர் சிலர். வல்லரசாகி வையகத்தையே சுருட்ட வேண்டுமா? நல்லரசாக மாறி நாட்டு மக்கள் வயிற்றை நிரப்பினால் போதாதா?....

போர்க்காலங்களில், போர்முறை உத்தியாக வேதியியல் நச்சு வாயுக்களைப் பரப்பி எதிரி நாடுகளை முடக்கியும், சாகடித்தும் கொடூரங்கள் செய்யப்பட்டன. 1899இல் ஹேக் மாநாட்டில் வேதியியல் போர்முறை தடைசெய்யப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் ஏப்ரல் 1915இல் ஜெர்மனி, பிரிட்டிஷ் துருப்புக்கள் மீது, வேதிப்பொருள் ஆயுதங்களை அள்ளி வீசியது. இதில் கொடுமை என்னவென்றால் வேதியியல் போர்முறை தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளில் ஜெர்மனியும் ஒன்று.

**வேதிப்பொருட்கள் இல்லாமல் போர் நடத்த முடியாதா?**

உலக நாடுகளை எல்லாம் வென்று தன் ஆட்சியில் கொண்டுவர போர் வெறி கொண்டான் ஒருவன். தன்னுடைய 20ஆம் அகவையிலிருந்து 30ஆம் அகவைக்குள், கி.மு. 383-323களில், பாரசீகம் தொடங்கி பஞ்சாப் வரை உலகத்தின் சரிபாதியை வென்றான். அவன்தான் கிரேக்க மாவீரன், அலெக்சாண்டர்.

புனிதப் போர் என்கிற போர்வையில் கிறித்தவ மதவெறியால் தன் வாழ்நாளின் பெரும்பகுதியை சிலுவைப் போர்களில் இழந்தான் புனிதபால் (Saint Paul).

புத்த மதத்தைப் பரப்புகிறேன் என்ற ஆசையில் மாமன்னன் அசோகனும் சக்கர வர்த்தியாக வெறிகொண்டு இறுதியில் பிட்சுவாக மாறினான்.

ஆனை, தேர், புரவி, ஆட்பெரும் படையுடன் தஞ்சை சோழ மண்டலத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பட்டு கலிங்கம், வங்கம் தாண்டி, யானைப்பாலம் அமைத்து கங்கையாற்று வெள்ளம் கடந்து, வடபுலம் வென்று கடாரம், சாவகம், ஈழம் எல்லாவற்றையும் இராசேந்திர சோழன் வென்றதை "வடநாட்டுப் போர்", என்றே வரலாற்று ஏடுகள் சிறப்பிக்கின்றன. மரம், இரும்பு, செம்பு இவற்றால் ஆன ஆயுதங்களைக் கொண்டே போர்ப்பரணி பாடினர், அவர்கள் எல்லோரும்.

ஆனால் அண்மைக்காலப் போர் முறைகளைப் பார்த்தால்...........வளைகுடாப் போர்களாக, கார்கில், வியத்நாம், இலங்கை, ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான் போர்களாக விருந்தாலும் அவை எல்லாம் வேதியியல் தாக்குதல்களாகவே அமைந்துவிட்டன.

சுற்றுச்சூழல் மாசு, உயிரியல் நடுநிலைச் சிதைவு, தரைமட்டமாகும் நிலக் கட்டமைப் புக்கள், மனித, தாவர, விலங்குகள் அழிப்பு - இவை எல்லாவற்றையும் நொடிப்பொழுதில் வேதிப்போர் முறைகள் ஏற்படுத்தி விடுகின்றன. நெம்புகோல், இயங்கு இயக்கு கப்பிகள், கவண்கல், குவி குழி ஆடி வெப்பமேற்றம், சகடைகள், கயிறு, எரியீட்டி போன்று வெறும் இயற்பியல் சாதனங்களையும், எந்திரப் புனைவுகளையும் கொண்ட போர் முறைகளை கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் உருவாக்கிய ஆர்க்கிமிடீஸ், "அறிவியல் தந்திர மந்திரவாதி" என அறியப்பட்டான். ஆனால் இன்றைய போர்முறை?........

கணப்பொழுதில் கண்டவற்றை யெல்லாம் சுட்டுப் பொசுக்கி தரைமட்டமாக்கி இனப்படுகொலை நடத்தி மனித இனத்தை மண்ணுக்குள் தள்ளிப் புதைக்கும் வேதிப் போர்களை, உலகம் முழுதும் மனிதர்களே நடத்துகின்றனர்.

போர் சமாதானம் எனப் பிரகடனம் செய்துவிட்டு, பதுங்கு குழிகளிலிருந்து வெளியே வந்த அப்பாவிப் பொதுமக்களை 50,000 தமிழர்களை, வேதி நச்சுக் கொத்துக் குண்டுகளை (Cluster Bombs) வீசி, இலங்கையில் இனப்படுகொலை நடத்திய சர்வதேசப் போர்க் குற்றவாளியை, உலக நாடுகள் கண்டும் காணாமல் இருந்து விட்டன.

வேதிப் போர் முறைகளின் மறக்க-வியலாப் பாடங்களை (1914-1918) உலகப்போர், வரலாற்று ஏடுகளை கறைபடிய வைத்தது.

"அதிகமாப் படிச்சுப் படிச்சு மூளை குழம்பிப் போச்சு; அணுகுண்டைத்தான் போட்டுகிட்டு அழிஞ்சு போகலாச்சு; உலகம் போற போக்கைப்பாரு தங்கமே தில்லாலே!"

- எனும் வயிற்றெரிச்சல் வரலாற்றுப் புலம்பலாக இன்னமும் எதிரொலித்துக் கொண்டுதான் உள்ளது!

புலிவாலைப் பிடித்த கதையாக உலக நாடுகள் எல்லாம் வேதிப்போர் முறைகளை விட முடியாமல் சுழன்று வருகின்றன. 1. நரம்பு முடக்கிகள் (Nerve Agent), 2.வாயு முடக்கிகள் (டைகுளோரோ எதில் சல்பைடு) (Mustard Agent), 3.சயனைடு நச்சுகள் (Cyaides), 4. தொகுப்பு வாயு நச்சு (Team Gases), 5. ஆர்சைன்கள் (Arsines), 6. சிந்தனை முடக்கிகள் (Psychotomimetic Agents), 7. பொது நச்சுகள் (toxias), 8. வெடிமருந்துகள் (Explosives) என எட்டுவகையான வேதி ஆயுதங்கள் காணப்படுகின்றன.

1979-88களில் நடந்தேறிய ஈரான்-ஈராக் போர்களில் ஈராக் எண்ணிறந்த, அளவு கடந்த வேதிப் பொருட்களை ஆயுதங்களாகக் கொட்டியது. 5000 ஈரானிய வீரர்கள் கொல்லப்பட்டனர். 1980களில் ஈரானுக்கு எதிராகவும், வடஈராக் 'குர்த்' இனத்தவர்க்கு எதிராகவும் ஹைட்ரஜன் சயனைடு / (HCN) எனும் அதிபயங்கர நச்சு வேதி வீசப்பட்டது.

எல்லா உயிரிகளிலும் இரத்த சிவப்பு அணுக்களில் உள்ள இரும்பு மூலக்கூறு கொண்ட ஹீமோகுளோபின் தொகுப்பின் உச்சியில் ஆக்சிஜன் மூலக்கூறு உள்ளது. உடல் முழுதும் உள்ள செல்களுக்கு ஆக்சிஜனைச் சுமந்து செல்வதால், "ஆக்சிஜன் சுமை கடத்தி"(Oxygen carsiers) என "ஹிம் (Heme)" தொகுப்பு அறியப்படுகிறது. சயனைட் (NacN) எனும் நச்சு உட்கொண்டவுடனே அடுத்த அரை நொடியில் ஹீமோகுளோபின் தொகுப்பை ஊடுருவி, ஆக்சிஜன் சுமந்து செல்லும் இரத்த சிவப்பு அணுக்களின் செயலை நிலை குலையச் செய்கிறது. 'ஹீமோகுளோபின்', உடனடியாக 'ஹீமாக்சி குளோபின்' ஆக மாற்றப்படுகிறது. அடுத்த நொடியில் இதயத்துடிப்பு நின்றுவிடுகிறது. உடல் முழுதும் நீலநிறமாகி விடுகிறது. சயனடைடின் நச்சு விளைவுகளை விவரிக்க இவ்வளவு நேரம் ஆனாலும் அதன் உயிர் பறிக்கும் தன்மை உடனடியானது. சயனைடின் ருசி இன்னதென்று உலகில் எவரும் சொல்லவில்லை; சொல்லவும் முடியாது. மூச்சு இருந்தால்தானே, உடல் இயக்கம் இருந்தால் தானே ருசியைப் பற்றி சொல்லமுடியும்? சயனைடு அருந்தியவர்களை உயிர்ப்பிக்க உடனடியாக பெர்ரஸ் சல்பேட், சோடியம் தயோ சல்பேட் - கரைசல்களைக் கொடுத்துப் பார்க்கலாம் என வேதியியல் மேதாவிகள் சொல்லித் திரிகின்றனர். வேதிப்போர் முறைகளில் சயனைட் தாக்குதல் என்பது மேலதிக உச்சக்கட்ட பயங்கரம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேதியியல் போர்முறைகளில் மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியவர்கள் யூத இனத்தைச் சார்ந்தவர்களே! பெல்ஜியத்தில் பிரஞ்சுப் படையினர் மீது குளோரின் வாயுவை ஜெர்மானியர் செலுத்தினர். திடீரெனப் பீச்சப்பட்ட குளோரின் வாயுவை எதிர் கொள்ள முடியாமல் பிரஞ்சுப் படையினர் பின்வாங்கி விட்டனர்.**

நம் குருதி (RBC) எனும் புரதத்தில் ஹீமோகுளோபின் (Haemoglobin Prosthetic Group) உள்ளது. ஹீமோகுளோபின் கட்டமைப்பு மையத்தில் இரும்பு (Fe) மூலக்கூறு பொதிந்துள்ளது. உச்சியில் ஆக்சிஜன் மூலக்கூறைச் ($O_2$) சுமந்தபடி செல்களுக்கும் இதயத்திற்கும் இடைவிடாது குருதியோட்டம் நடைபெறுவதால்தான் நாம் மூச்சு விட்டு உயிர் வாழ்கிறோம். ஹீமோகுளோபினின் இரும்பு (Fe) -ஐ நகர்த்திவிட்டு சயனைடு (CN) அமர்ந்து விடுவதால் ஆக்சிஜன் ஓட்டம் நின்று உடனடியாக மூச்சடைப்பு ஏற்படுகிறது.

**முதல் உலகப்போர் - 1914-18**

முதல் உலகப்போரின் இன்னொரு பெயர், **வேதியியல் போர்** (World War of Chemistry) நிலத்தின் பரந்தவெளி முக்கால் பகுதி நைட்ரஜன் வாயுவால் சூழப்பட்டுள்ளது. அதாவது 78% நைட்ரஜன், 21% ஆக்சிஜன், 1% கார்பன்-டை-ஆக்சைடு, ஆர்கான், மீத்தேன், ஓசோன், ஹைட்ரஜன், ஹீலியம் வாயுக் கலவையாக, சுற்று மண்டலம் விளங்குகிறது என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஆனால், சுற்றுமண்டல நைட்ரஜனைக் கண்டுபிடித்து அதனை நிலைப்படுத்தும் (Fixation of atmospheric Nitrogen) வழிமுறைகளைக் கண்டுபிடித்தவர் யார் தெரியுமா? 1909ல் ஜெர்மானிய, யூதவேதியியலார், ஹேபர் (Haber). நைட்ரஜனை நிலைப்படுத்தும் முறையைக் கண்ட பின்னர்தான், வேதியியல் ஆய்வுத் துறையில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டது மட்டுமன்று. இப்போது நிலவுகின்ற வேதியியல் ஆயுதப்போர் முறைகளுக்கும், கொடூர, பயங்கர, அழிவுப் பாதைகளுக்கும் வழிவகுத்து விட்டது. ஏனென்றால், எல்லாவகை வெடி குண்டுகளிலும் நைட்ரஜன் கூட்டுச் சேர்மங்களே முதன்மை வேதிப் பொருட்களாக உள்ளன. வேதிப்பொருளான நைட்ரஜன் இயற்கையில் மந்தமான வாயு. வேளாண்துறையில் பயிர் விளைச்சலில் நைட்ரஜன் என்பது முதல்தர தழைச்சத்து. ஆனால் மற்ற வகை வேதிப்பொருட்களுடன் இணையும்போது உண்டாகும் நைட்ரஜன் கூட்டுப்பொருட்கள் பயங்கர வெடி மருந்துகளாக மாற்றிவிடுகின்றன.

சிசிலித்தீவு மண்ணில், சோடியம் நைட்ரேட் எனும் கூட்டுப்பொருள் இயற்கையிலேயே அதிகமாகயிருப்பது கண்டறியப் பட்டது. பின்னர் அம்மோனியா தயாரிக்கப் பட்டதும் எண்ணிறந்த நைட்ரோ, நைட்ரைட்டோ, நைட்ரோசோ, நைட்ரைட் கூட்டுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டன. **அம்மோனியா கூட்டுப்பொருட்களைத் தயாரித்ததற்காகவும் வளிமண்டல நைட்ரஜனை நிலைப்படுத்தும் முறையைக் கண்டதற்காகவும் 1918இல் ஹேபர்-க்கு, நொபெல் பரிசு வழங்கப்பட்டது. ஹேபர் நைட்ரஜனைக் கண்டுபிடிக்காமல் போயிருந்தால் ஜெர்மானியர்கள் உலகப் போரில் ஈடுபடாமல் இருந்திருப்பார்கள்! காலத்தின் கோலம் அது!**

நிலக்கரித் தாரிலிருந்து வடிகட்டப் பட்ட டொலுயீன், நைட்ரிக் அமிலக் கலவை (TNT) ட்ரை நைட்ரோ டாலுயீன், முதல் உலகப்போரை அதிர வைத்தது. ஜெர்மானியர்களால், 1860இல் நிலக்கரித்தார் பெறுதிக் கூட்டுப்பொருட்கள் (Coal Tar Derivatives) ஏராளமாகத் தயாரிக்கப்பட்டன.

ஆல்பிரட் நொபெல் எனும் சுவீடன் நாட்டு வேதியியலறிஞரால் கண்டுபிடிக்கப் பட்ட "கார்டைட்" எனும் வேதி வெடி பொருளை பிரிட்டீஷார் பெரிதும் நம்பியிருந்தனர். காலனி ஆதிக்க வெறியால், கடல்கடந்து நாடுகளை துப்பாக்கியால், பீரங்கியால், வெடிகுண்டுகளால் பயமுறுத்தி கையகப்படுத்த கார்டைட் வெடிமருந்து பிரிட்டிஷாருக்கு மிகவும் தேவைப்பட்டது. ஆனால் கார்டைட்-ஐ பாதுகாப்பாக வெடிக்க 'அசிட்டோன்' எனும் வேதிக் கரைசலில் கரைத்தேயாக வேண்டும்! அதனால் அசிட்டோன்-ஐப் (Acetone) பெருமளவில் தயாரிக்க வேண்டிய கட்டாயம். 1874-1952களில் சோளக் கூழைப்புளிக்க வைத்து அசிடோன்-ஐ யூத வேதியியலார் கிளைம் வெயிஸ்மென், தயாரித்தார். 1915இல் முதல் உலகப்போரில் நச்சு வேதிவாயுக்கள் போர் ஆயுதங்களாக பரப்பிவிடப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியியல் போர்முறைகளில் மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியவர்கள் யூத இனத்தைச் சார்ந்தவர்களே! பெல்ஜியத்தில் பிரஞ்சுப் படையினர் மீது குளோரின் வாயுவை ஜெர்மானியர் செலுத்தினர். திடீரெனப் பீச்சப்பட்ட குளோரின் வாயுவை எதிர் கொள்ள முடியாமல் பிரஞ்சுப் படையினர் பின்வாங்கி விட்டனர். இரசாயன வாயுக்களின் தாக்குதலை சமாளிக்க உடல் கவசங்களையும் முகமூடிகளையும் பிரஞ்சுப் படையினர் பின்னர் கண்டுபிடித்தனர்.

மஸ்ட்டர்ட் கேஸ் (Mustard Gas) எனச் செல்லமாக அழைக்கப்பட்ட டைகுளோரோ எதில் சல்பைடு (Dichloro Ethyl Sulphide) எனும் நச்சு வாயுவை முதன்முதலாக போர்க்கால ஆட்கொல்லி ஆயுதமாகக் கண்டவர்களும் ஜெர்மானியர்களே. நீண்ட நாட்களுக்கு நிலப்பரப்பின் மீது பரவி, உடல் எரிச்சலையும் கொப்பளங்களையும் ஏற்படுத்தும் திறன் கொண்டது மஸ்ட்டர்ட்கேஸ் எனப்படும் டைகளோரோ எதில்சல்பைடு. போர்வீரர்களின் நுரையீரல், கண்கள், இவற்றை நலிவுறச் செய்யும் மஸ்ட்டர்ட் ஏஜண்ட், முதல் உலகப்போரின் இறுதிக் கட்டங்களிலும் இரண்டாவது உலகப்போரிலும் மிகத் தாராளமாக வீசப்பட்டது. கப்பலில் ஏற்றி வரப்பட்ட மஸ்ட்டர்ட் ஏஜண்ட், கப்பல் மோதலால் உடைந்து சிதறி கடற்பரப்பே களங்கமானது.

ஏரோசால் வடிவத்தில் குளோரினும், (PHOSGENE) பாஸ்ஜீன் எனும் அதிபயங்கர வேதி வாயு நச்சும் முதல் உலகப்போரில் வீசப்பட்டதால் மனிதர்கள், தாவரங்கள், விலங்குகள் எல்லாமே பெரிய வேதித் தாக்குதலுக்கு உட்பட்டன.

வீசி எரியும் நெருப்புப் பந்தாக, வியுசைட் (Lewsite) எனும் இன்னொரு வேதி நச்சு வாயுவை, கேப்டன் லீலூயிஸ் கண்டுபிடித்தார். போர்க்களத்தில் கண்ணில் தட்டுப்படும் எதிரி வீரர்கள் எல்லோரையும் தானே கொல்வதாகக் கொலை வெறியில், தன்னுடைய பெயரையே அந்த நச்சு வாயுவுக்குப் பெயரிட்டார். வேதியியல் பெயர் கொண்டு அழைக்க வேண்டுமென்றால் அலிஃபாட்டிக் ஆர்செனிக் கூட்டுப் பொருளான 'ஆர்சைன்' என்றே அறியப்பட வேண்டும். இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் 2.குளோரோ வினைல் டைகுளோரோ ஆர்சைன் என எழுதலாம். வியுசைட்-ஆப் போலவே ஆடம்சைட் (10 குளோரோ 5,10 டைஹைட்ரோ ஃபின் ஆர்சைன்) என்பதும் மூக்கு, தொண்டை, மூச்சுக்குழல், உணவுக்குழல் எல்லாவற்றையும் மிகவும் பாதிக்கக்கூடிய கொடிய நச்சுவாயு.

கைகளால் அல்லது தூக்கி எறிவிசையால் (Launcher) எறியக்கூடிய, இளக்கியைப் (Fuse) பிடுங்கிவிட்டு கையெறி தொலைவில் உள்ளவர்களைக் கொல்ல கையெறி குண்டுகள் (Grenades) காணப்பட்டன.

சால்ட்பீட்டர் எனப்படும் நைட்டர், பொட்டாசியம் நைட்ரேட் கலவையும் கந்தகப் பொடியும் கரித்தூளும் கொண்ட வெடி மருந்துக் கலவையே துப்பாக்கி வெடி மருந்து (Gun powder) எனப்பட்டது. அதுதான் முதல்தர இராணுவ வெடிமருந்தாகும். 19 ஆம் நூற்றாண்டிலும், இன்னும் வெடிமருந்து வேதியியலில் (Chemistry of Explosives) முதலிடம் பெறுகிறது துப்பாக்கி வெடி மருந்து.

10மில்லிகிராம் அளவுக்கும் குறைவாகப் பயன்படுத்தப்படும் "சைக்கோமிமெட்டிக்" வேதிப் பொருட்கள் மத்திய நரம்பு மண்டலத்தைத் தாக்கி நினைவு உணர்ச்சி இழப்பு, கை கால் வலிப்பு போன்றவற்றை உடனடியாக உண்டாக்கிவிடும். இவை போன்ற எண்ணற்ற கொடிய நச்சு வேதிப் பொருடகள் பயன்படுத்தப்பட்ட முதல் உலகப்போரை வேதியியல் போர் (Chemical Warfare) என அழைப்பதும் சரிதானே?

இத்தகைய வேதியியல் போர் முறைகள் நடந்து முடிந்த பின்னர், அதில் உயிர் பிழைத்த போர் வீரர்கள் நடைப்பிணங்களாக (Coma stage) அல்லது செயலற்ற சிந்தனையற்ற படுக்கைப் பிணங்களாக எஞ்சியக் காலத்தைத் தள்ள வேண்டும். அவ்வளவு கொடூரமானவை அவ்வகை சைக்கோமிமெட்டிக் (Psychomimitic chemicals) வேதிப் பொருட்கள்.

**இரண்டாம் உலகப்போர் (1939-45)**

வேதியியல் குண்டுகள் வீசப்பட்ட போரே, இரண்டாம் உலகப்போர். வேதியியலார், இயற்பியலார் (Chemists and physicists ) நடத்திய போர் என்றுகூடச் சொல்லலாம். கனிம உலோகங்கள் போர் என்றும் அறியப்படுகிறது. இளக்கிகள் (Fuses), கையெறி குண்டுகள், இராணுவத் தளவாடங்கள், சாதனங்கள், போர் நூதனங்கள், தீ அணைப்பான்கள், தீக்கோள எறிகுண்டுகள், மின்னியல் கருவிகள், ராடார், ஏவுகணைகள், நீர்மூழ்கிக் கப்பல்கள், ஆகாய ஊர்திகள் - இவை எல்லாவற்றையும் தயாரிக்க அமெரிக்கர்களுக்கு குறைந்த அளவு, ஐந்து டன் உலோகம் தேவைப்பட்டது. அதனால் கனிம உலோகப்போர் என்பதும் சரிதானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியியல் போர் முறை என்பது அண்மையில் தீவிரமாகக் காணப்பட்டாலும் காட்டுமிராண்டிக் காலத்திலும் கையாளப் பட்டுள்ளது. கிரேக்கர்கள், சீனர்கள் கந்தக வாயுவை போர்களில் பயன்படுத்தியுள்ளனர். இறந்த கெட்டுப்போன விலங்குகளை எதிரிகள் கூடாரத்தில் வீசி அதன்மூலம் நச்சு வாயுக்களை பரப்பிய போர் முறையும் நடந்துள்ளது.

இரண்டாவது உலகப்போரின் வேதிப் போர் கொடுமைகள், நாஜிக்களின் நச்சு வாயு அறைகளைக் குறிப்பிடாமல் முழுமை ஆகாது. சிறிய அறைகளில், நிறைய கைதிகளை அடுக்கி, அடைத்து ஹைட்ரஜன் சயனைடு வாயுவைச் (HCN) செலுத்தியப் போர் வெறியாட்டம் Nazi Gas Chambers GENOCIDE என நடத்தப்பட்டது.

கண்ணீர்ப்புகை குண்டுகள் இல்லாத வேதிப்போர் முறையா? கண்களை, செவிகளை, மூச்சுக்குழாய் மண்டலத்தை உடனடியாகப் பாதிக்கச் செய்து, எரிச்சலை ஏற்படுத்தி நிலைதடுமாற வைக்கும் வேதி உருண்டைகளே கண்ணீர்ப்புகைக் குண்டுகள். கண்களில் அந்த வாயு பட்டதும் பொல பொலவென கண்ணீர்ப் பெருக்கு உண்டாகும். அதன் வேதியியல் பெயர் என்ன? குளோரோ அசெட்டோ பீனோன் என்பதுதான் கண்ணீரை உண்டாக்கும் வாயு. உள்நாட்டுக் கலவரங்களை அடக்க, ஆர்ப்பாட்டங்களை ஒடுக்க, கூட்டங்களைக் கலைக்க இப்போது வீசப்படும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளில் ஆர்த்தோ குளோரோ பென்சிலிடின் (meta nitrile) மெட்டா நைட்ரைல் எனும் வேதிப் பொருளே உள்ளது. 1934இல் ஜெர்ஹார்டு ஷ்ரேடர் எனும் வேதியியல் ஆய்வாளரால் நரம்பு முடக்கி வாயுக்கள் காணப்பட்டன. அவை கரிம பாஸ்பரஸ் (Organo phosphorous) கூட்டுப் பொருட்கள். அவை இப்போது தாவர பூச்சிக் கொல்லியாகவும் கையாளப்படுகின்றன.

ஆகஸ்ட் 6ஆம் நாள், 1945ஆம் ஆண்டு - வேதியியல் போர் முறைகளில் யாரும் மறக்க முடியாத நாள். ஒன்றல்ல; இரண்டு அணுக்குண்டுகள் அமெரிக்க இராணுவத்தால் வீசப்பட்டன. ஜப்பான் நாட்டு ஹிரோஷிமா நகர் மீது, அமெரிக்காவால் வீசப்பட்ட அணுக்குண்டின் பெயர் "சின்னப்பயல் (Little boy)" முதல் குண்டு வீசப்பட்டு மூன்று நாட்களில், இரண்டாவது அணுக்குண்டு நாகசாகி நகர் மீது பொழியப்பட்டது. இரண்டாவதாக வீசப்பட்ட அணுக்குண்டின் பெயர், "கொழுப்பு மனிதன் - Fatman"

சின்னப்பயல் எனப்பட்ட முதல் அணுகுண்டு யுரேனியம்-235 எனும் அணுக்கதிர் வீச்சு வேதி அணுகுண்டு. அணுக்கதிர் வீச்சுக்களைக் கொண்ட பொலோனியம் எனும் அணுக்குண்டே இரண்டாவதாக வீசப்பட்ட, கொழுப்பு மனிதன்.

ரேடியம், பொலோனியம் - என்கின்ற இரண்டு அணுக்கதிரியக்க தனிமங்களைக் கண்டுபிடித்த பெண் வேதியல் ஆய்வாளர் மேரிகியூரி. அணுக்கரு வேதியியல் ஆய்வில் தொடர்ந்து மேரிகியூரி ஈடுபட்டதால் அணுக்கதிர் வீச்சுக்கு அவர் பலியானார். அணுக்கரு வேதியியலின் தொடக்கமும் கண்டுபிடிப்புகளும் ஆராய்ச்சியாளர்களையே, கண்டுபிடிப்பார்களையே "காவு" வாங்கிய வேதியியல் கண்டுபிடிப்புகள்தாம். ஒரு அணுக்கதிர் வீச்சு தனிமத்திற்கு ரேடியம் என்றும், இன்னொன்றிற்குத் தன் தாய்நாட்டுப் பெயரால் பொலோனியம் (போலந்து) என்றும் மேரிகியூரி பெயரிட்டார். அவருக்கு இரண்டு தடவைகள் நோபல் பரிசு வழங்கப்பட்டது எனக் கூறுகிறது அணுக்கரு வேதியியல் வரலாறு.

முதல் இரண்டு உலகப்போர்கள் முடிந்துவிட்டன. அவற்றால் ஏற்பட்ட விளைவுகள் உலக வரலாற்றில் இருண்ட அத்தியாயங்கள். "மூன்றாவது உலகப்போர் என ஏதாவது ஏற்பட்டால் என்ன மாதிரியான ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நான்காம் உலகப்போரில் என்ன மிஞ்சும் என்பது தெரியும்...அவை...கற்கள்" என நொபெல் விருதாளர் ஆல்பர்ட் எயின்ஸ்டீன் புலம்பித் தீர்த்துவிட்டார். இருப்பினும் அணுக்கரு கதிர்வீச்சு வேதிப்போர் ஆயுதங்களை உலக நாடுகள் எல்லாம் உற்பத்தி செய்து கொண்டேயிருக்கின்றன.

அன்றாட வாழ்க்கையில் தெரிந்தோ, தெரியாமலோ, முறைகேடாக எண்ணிறந்த வேதிப்பொருட்களை உணவாக, அருந்தும் பானங்களாக, உட்கொள்ளும் மூச்சுக் காற்றாக, உடைகளாக, அணிகலன்களாக, நானாவித ஆடம்பரப் பொருட்களாகப் பயன்படுத்தி, மனிதன் என்பவன் தன்னையும் இந்த இயற்கை வளங்கொழிக்கும உயிரிமண்டலத்தையும் வேதிப்பொருள் ஆழ்கடலில் மூழ்கி, மூழ்க வைத்துக் கொண்டுள்ளானா? நீங்களே, தீர்ப்பை அறிவியுங்கள்! ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தன் ஸ்ரீதரன் உண்மைக் கதை

# செல்லக்கிளியின் தம்பி

எறும்புகளின் வாழ்விடங்கள் யானைகளின் கண்களுக்குத் தெரிவதில்லை. யானைக்கு கால்தடம் என்று அறியப்படுவது எறும்புகளுக்கு பேரழிவாக இருக்கக் கூடும்.. தாம் நடந்தது எறும்புகளின் குடியிருப்பு என்பதைக் கூட அறியாமல் யானைகள் பாட்டுக்கு நடந்தபடி தான் இருக்கின்றன.

பஸ்ஸிலிருந்து இறங்கியதும் அந்த சாலையின் விசாலம்தான் என் கண்ணில் பட்டது. நான்கு வழிச் சாலை ஊருக்குள் வரப் போகிறது.. வருகிறது.. வந்து விட்டது.. என்பன மாதிரியான தகவல்கள் சென்னையில் இருந்த எனக்கு அவ்வப்போது வந்தபடிதான் இருந்தன. அச்சாலையினால் வீடுகளை இழந்து, போராடியும் ஒரு பலனும் இல்லாமல் கிடைத்த இடத்தில் ஒண்டி வாழ்ந்து தொலையும் மனிதர்களைப் பற்றிய செய்திகளும் எனக்கு வந்தபடிதான் இருந்தன. தான் பிறந்து வளர்ந்த கிராமத்திலேயே, செல்வாக்கு என்று எதுவும் இல்லாவிடினும் மானத்துக்கு பங்கமில்லாமல் வாழ்ந்த மனிதர்கள் தற்போது வாழ்விடம் அற்று அலைவதை நான் துயரோடு கேட்டபடிதான் இருந்தேன்.

யானையின் வழித்தடத்தைப் போல அச்சாலை கம்பீரமாக ஊரை அறுத்துக் கடந்து கொண்டு இருந்தது. எறும்பு மனிதர்கள் கூடு சிதைந்து அலைந்து கொண்டு இருந்தார்கள். இந்த கிராமம் எனது சொந்த ஊர் அல்ல. எனது சொந்த ஊர் ஒரு மிடில் டவுன். எனது ஊருக்கு ஒரு ஏழெட்டு கிலோ மீட்டர் தள்ளி இருக்கும் இந்த தாசப்பட்டி எனது சொந்த ஊரைவிட மனதுக்கு நெருக்கம். சின்னஞ்சிறு கிராமம். வாழ்வில் ஒரு தோல்விகாலம் இருந்தது. அந்த தோல்வியின் வடு வலிக்காமல் இருக்க நான் குடியில் தஞ்சம் புகுந்தபோது இந்த தாசப்பட்டி நண்பர்கள்தான் என்னை தத்தெடுத்துக் கொண்டார்கள். என்ன பிரியம், ஏன் பிரியம் என்று தெரியாது. பிரியம். அவ்வளவுதான். என்ன செய்தாலும் மன்னித்து, என்ன இம்சையைக் கொடுத்தாலும் தாங்கிக் கொண்டு, என் அம்மாவைப் போலதான் இந்த ஊர் என்னை ஒரு ஏழு வருடங்களுக்கு தாங்கிக் கொண்டது. அநேகமாக இந்த தாசப்பட்டியின் அனைத்து மனிதர்களையும் எனக்குத் தெரியும். சாதியற்ற ஒரு உறவு முறை பெரும்பாலும் இந்தப் பக்க கிராமங்களில் உருவாகிவிடும். எனது சாதியைச் சேர்ந்த ஒருவர் கூட இல்லாத இந்த ஊரில் இன்றளவும் நான் பலருக்கு மைத்துனன், பலருக்கு மகன், பலருக்கு மாமன், பலருக்கு தம்பி, சின்னச் சின்ன பயல்கள் இப்போதெல்லாம் என்னை அப்பா என்றும் அழைக்கத் துவங்கி இருக்கிறார்கள். என் வேதனையை எனது வழியிலேயே தாங்கிக் கொண்டு என்னை மீட்டு என்னிடம் கொடுத்தது இந்த தாசப்பட்டிதான்.. இன்றும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சென்னையில் வசிக்கும் இந்த நாட்களிலும் நான் வரவே மாட்டேனென்று தெரிந்தாலும் என் பெயரை வரவேற்பாளர் பட்டியலில் தாங்கிய திருமண, காது குத்து, சடங்கு பத்திரிகைகள் எனக்கு வந்தபடிதான் இருக்கின்றன. எல்லா மரணங்களும், ஒரு உறவினன் என்ற முறையில், எனக்கும் அறிவிக்கப்பட்டபடியே உள்ளன. என் நினைவில் நான் இந்த ஊரைத் தாங்கியும், இந்த ஊர் என்னைத் தாங்கியும்தான் பரஸ்பரம் வாழ்ந்து வருகிறோம். இடையில் நேரம் வாய்த்தபோது ஓரிரு திருமணங்களுக்கு வந்ததோடு சரி. வேறெந்த நிகழ்வுக்கும் வரவேயில்லை. வரும் போது எல்லாம் பல பல மாற்றங்கள். சிறுவனாக பார்த்தவன் எல்லாம் பெண்டாட்டியோடும் தோளில் அழும் குழந்தையோடும் வந்து நின்று என்னா மாமா.. என்கிறான்.. மூக்கொழுக நின்ற சிறுமி இப்போது நடு வயது பெண்மணியாகி என்னாப்பா.. எங்க வீட்டுக்கு வந்துட்டுப் போனா என்ன.. என்கிறாள். (எங்கள் பக்கத்தில் சித்தப்பா, பெரியப்பா முறை உள்ளவர்களை அப்பா என்றே அழைப்போம்) ஒரு சிறுவனையோ சிறுமியையோ அழைத்து இதுதேண்டா உங்க தாத்தா என்று அறிமுகம் செய்தும் வைக்கிறாள். அந்த தருணங்களில்தான் உருண்டோடும் காலம் எனக்கு அதிர்ச்சியைத் தருகிறது.

பல வருடங்களுக்குப் பிறகு இப்போதுதான் இங்கே வருகிறேன்.. இந்த முறை என்ன மாதிரியான அதிர்ச்சி கிடைக்கும் என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாது. ரோட்டு பஸ் ஸ்டாப்பில் நான் வந்து இறங்கியதை கைபேசி மூலம் கண்ணனுக்கு சொல்லிவிட்டேன். வண்ட்டீங்களா ரீ..? அஞ்சே நிமிசம் நில்லுங்க. இங்க ஒரு பஞ்சாயத்து.. பேசி விட்டுட்டு வந்துர்றேன். நம்ம ஒச்சு கடையில ஒரு டீயப்போட்டுக்கிட்டு நில்லுங்க.. என்றான். அவனது ஐந்து நிமிடங்கள் பெரும்பாலும் முப்பது அல்லது நாற்பது நிமிடங்களைக் கொண்டவை என்பது எனக்குத் தெரியும். ஊரின் மேற்கு கோடியில் இருக்கும் அவனது வீட்டுக்கான தூரமான ஒரு கிலோமீட்டரை எட்டி நடையைப் போட்டு கடந்து விடலாம்தான். ஆனால் போகிற வழியெல்லாம் கண்ணில் படும் மனிதர்கள் ஒவ்வொருவராக நலம் விசாரித்து, நின்று பேசி என்று ஆரம்பித்து விட்டால் கண்ணனின் வீடு சேர அது ஆகிவிடும் ஒன்றரை மணி நேரம்.. பேச்சு தவிர ஒவ்வொருவராக வாங்கித் தரும் டீயையும் குடித்தாக வேண்டும்.. எதற்கு வம்பு. கண்ணன் வண்டியை எடுத்து வந்தால் அதிலேயே சர்ரென்று போய்விடலாம் என்று தாற்காலிக இளைப்பாறுதலுக்காக ஒச்சு கடையை நோக்கிப் போனேன்.

என்னைப் பார்த்ததும் ஒச்சுவுக்கு வாயெல்லாம் பல். சிரீ.. வாங்க வாங்க.. எங்க கடைய எல்லாம் நாவுகம் வச்ருக்கீங்க போல.. வழக்கம் போல இனுப்பு கூடுதலா போட்டு டீ போட்றத்தானே..? என்றவன் கொஞ்சம் தயங்கி சீனி போடலாமா..? என்று சந்தேகமாக கேட்டான்.

நான் அசட்டு சிரிப்புடன், சீனி இல்லாம ஒரு டீ.. என்றதும் வெடித்துச் சிரித்து விட்டான். அதான.. கொஞ்ச நஞ்சமா ஆட்டம் போட்டீக.. சக்கரச் சத்து வரத்தாஞ்செய்யும்.. என்று குதூகலமாக டீயை போடத் துவங்கினான். வியாதியை சத்து என்று புதுப் பெயரிட்டு அழைக்கும் அவர்களது சொல்லாளுமை என்னை எப்போதும் போலவே இப்போதும் புன்னகைக்கச் செய்தது.

புன்னகைத்தபடி கடைக்கு வெளியே சாலையோரம் வந்து நின்று நால்வழிச் சாலையை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தவனை, இந்தாப்பா இனுப்பு இல்லாம டீ.. என்ற குரல் திரும்ப வைத்தது. மீசையுடன் பதினெட்டு பத்தொன்பதில் ஒரு இளைஞன் டீயை நீட்டியபடி நின்றான். இவன் எதுக்குடா நம்மை அப்பா என்று அழைக்கிறான் என்ற குழப்பத்துடன் நான் டீயை வாங்க, டீப்பட்டரையில் நின்றபடி சிரித்துக கொண்டிருந்த ஒச்சு, என்னா சிரீ.. அடையாளம் தெரியலையா..? என் மூத்த மவென் ஊமையந்தான்.. என்றதும் எனக்கு ஆச்சரியமான ஆச்சரியம். ஏழெட்டு வயதில்

**புன்னகைத்தபடி கடைக்கு வெளியே சாலையோரம் வந்து நின்று நால்வழிச் சாலையை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தவனை, இந்தாப்பா இனுப்பு இல்லாம டீ.. என்ற குரல் திரும்ப வைத்தது. மீசையுடன் பதினெட்டு பத்தொன்பதில் ஒரு இளைஞன் டீயை நீட்டியபடி நின்றான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் இருந்த ஆயிரம் ரூபாயை (பத்து ரூபாய் கட்டு) திருடிக்கொண்டு மெட்ராஸ் ஓடிப் போய் அம்புட்டையும் செலவழித்து விட்டு எப்படியோ வீடு திரும்பி வந்துவிட்ட திருட்டு ரௌடியா இவன்..? என்று என்னால் நம்பவே முடியவில்லை..

எலே.. கருவாப்பயலே.. என்னடா படிக்கிற..? படிக்கிறதானே..? என்றேன்..“

ரௌடிப்பயல் புன்னகையோடு, படிக்காம..? பி.ஏ., எக்கனாமிக்ஸ் படிக்கிறேம்ப்பா.. செகண்டு இயர்.. என்றான்.

ஒச்சு, சித்தப்பன் வந்தா என்னாமோ கேக்கணும்ண்டு சொல்லிக்கிருந்தியே.. இப்பவே கேட்டுர்றா மவனே.. இன்னைக்கி விட்டா நீ மெட்றாஸ் போய்தேன் அப்பனைப் பாக்க வேண்டி இருக்கும்.. என்றான்.

நான் கருவாயனை கேள்வியாகப் பார்த்து, என்னடா..? என்றேன்.

ஒச்சு, அவென் சினிமாவுல சேரணுமாம்.. அடுத்த வருசம் படிப்பை முடிச்சிட்டு மெட்றாஸ் வந்துறணும்ண்டு சொல்லிக்கிருக் யான்.. உங்ககிட்ட அஜிஸ்டண்டா வச்சுக்கிருவீங் களாம்..: என்றான் பட்டறையில் நின்றபடி..

நான் கருவாயனைப் பார்த்தேன். படபடப்போடு லேசான வெட்கத்தை மறைத்தபடி நான் என்ன சொல்லப் போகிறேனோ என்ற பதட்டத்துடன் காத்திருந்தான். எனக்குத் தெரிந்து தேனி மாவட்டத்தில் கல்லூரியில் படிக்கும் 95 சதவீதம் இளைஞர்கள் சினிமாவில் சேரவேண்டும் என்றுதான் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். சினிமாவில் சேரவேண்டும் என்பதில் இவர்கள் காட்டும் ஆர்வத்தில் பத்திலொரு பகுதி காட்டி தியேட்டரில் போய் படத்தைப் பார்த்தால் கூட சினிமா வாழ்ந்திருக்குமே என்ற எண்ணம் மனதில் தோன்றியது. கொஞ்சம் கடுமையை குரலில் வைத்து, முதல்ல படிப்பை முடி.. அதுக்குள்ள நான் படம் பண்ணிக்கிறேன். அப்புறம் பாப்போம்.. அதுக்கு முன்னால சினிமா அது இதுன்னு படிப்பை கோட்டை விட்ட.. உன்னை கொண்டே புடுவேன்.. போ.. என்றேன். இவன் பதட்டத்தோடு அப்பனைப் பார்க்க, அவன் நான் அப்புறம் பேசிக்கிறேன் என்பது போல சைகை செய்ய அரைகுறை மனதுடன் அந்த இடத்தைவிட்டு அகன்றான் கருவாயன். நல்லதுதான். இன்னும் இந்த ஊர் நண்பர்கள் நம் கோபத்துக்கு பயப்படுவது எல்லா வகையிலும் நல்லதுதான் என்று எனக்கு தோன்றிது..

கடைக்கு வெளியில் வந்து நின்று கசப்பும் துவர்ப்புமான அந்த டீயை மெல்ல உறிஞ்சிக் குடிக்கத் துவங்கினேன்.

இரைச்சலுடன் வண்டிகள் வேகம் குறையாமல் கடந்தபடி இருந்தன. பள்ளத்தாக்கின் மென்குளிர் காற்று என்னடா சௌக்கியமா என்பது போல என் முடி கலைத்தபடி இருந்தது. யாரோ என்னைப் பார்ப்பது போல இருக்கவே திரும்பினேன். அங்கே பஸ் நிறுத்தத்தின் வாவரக்காச்சி மர நிழலில் தாடி மீசை கடுமையாக வளர்ந்திருக்க, நரைத்த தலையுடனும், அழுக்கு உடையுடனும் மத்திம வயது மனிதன் ஒருவன் என்னைப் பார்த்து சிரித்தபடி நின்றிருந்தான் அந்த தாடிக்குள் அவன் சிரித்திருக்கத்தான் வேண்டும் என நினைக்கிறேன். சட்டென அவனை எனக்குப் பிடிபடவில்லை. அந்த கண்கள் மட்டும் மின்மினிப் பூச்சியின் ஒளியைப் போல எனக்குப் பரிச்சயமான ஒரு செய்தியை எனக்கு அனுப்பியபடி இருந்தன. எனக்கு சட்டென நினைவுக்கு வந்தது.

ஆற்றங்கரையோர கோவில் ஆலமர நிழலும், கஞ்சாப் புகையும், கொஞ்சம் கண்ணீரும் அப்புறம் செல்லக் கிளியும், ஒரு பெருந்துயரமும்.. பளிச்சென அவன் என் நினைவில் விடிந்தான். அவன்தான் சென்றாயன். அநேகமாக அந்த ஊரில் அவனை பெயரிட்டு அழைப்பவன் நான் மட்டுமாகத்தான் இருப்பேன். கிராமங்களில் பட்டப் பெயர்கள் சகஜம். அதை மனிதர்கள் ஏற்றுக் கொள்வதும் ரொம்ப சகஜம். இன்றளவும் கோழிவிரட்டியின் கடை கோழிவிரட்டி கடை என்றே அழைக்கப் படுகிறது. ஈத்தலு என்றழைக்கப்பட்டவருக்கு கடிதம் வந்தபோது ராமசாமி என்பது தனது பெயரென்பதை அவரே மறந்துபோயிருந்தார். சொங்யாம்பொட்டி, தமுக்கு, செவலை, எம்பது பாயிண்டு என்று வைக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்டப் பெயர்கள் அநேகம். சென்றாயன் அவ்வூர் மக்களுக்கு மெண்டலு என்றே அறியப் பட்டவன். எந்நேரமும் கஞ்சா போதை அவனை நிறைத்திருக்கும். பொதுவாக யாரிடமும் பேசுவதில்லை. கேள்வியென்றாலும், வசை என்றாலும் பதிலுக்கு புன்னகைதான். சொல்லும் காரியங்களை தட்டாமல் செய்வான். கொடுக்கும் பணத்தை வாங்கிக் கொள்வான்.

பண கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை தான். ஒரு முறை நான் சென்னையில் இருந்து ஒரு திருமணத்தின் பொருட்டு தாசப்பட்டி வந்தேன். திருமணத்துக்காக சென்னையிலிருந்து சில பொருட்களை வாங்கிவரச் சொல்லி இருந்தார்கள். கனமான பையுடன் மெயின் ரோட்டில் இறங்கியவன் அந்தப் பையை மேற்கு கடைசி வரை எப்படி தூக்கிச் செல்வது என்று யோசித்து சென்றாயனை அழைத்து, பைய தூக்கி வர்றியாப்பா..? என்று கேட்டேன். சரிண்ணே..

செல்லக்கிளியின் தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றபடி தூக்கி வந்தான். வழக்கம் போல போகும் வழியெங்கும் வரவேற்புகள், விசாரணைகள் என்று தாமதம். நான் அந்த கனத்த பையைப் பற்றி மறந்தே போய்விட்டேன். போகும்போதே எதிரில் கண்ணனும், குபேந்திரனும் வந்துவிட அவர்களுடன் மறுபடி திரும்பி மெயின் ரோட்டுக்கே வந்து விட்டேன். ஒரு மணி நேரம் கிட்ட பேசியிருப்போம். திடீரென்று கண்ணன் கோபமாக, நீ என்னத்துக்கடா பைய செமந்துக்கிட்டு இங்கணக்குள்ளயே நிக்கிற..? என்று கேட்டதும்தான் கவனித்தேன், அத்தனை நேரமும் சென்றாயன் அந்த கனத்த பையை தன் தலையில் சுமந்தபடியே என்னை தொடர்ந்து வந்திருக்கிறான்.

ஏறத்தாழ இரண்டு மணி நேரம். கனத்த சுமை. என்னைப் பின் தொடர்ந்தபடி, நான் நிற்கிற இடத்திலெல்லாம் நின்று, நான் நடக்கிற போதெல்லாம் தொடர்ந்து என்று சிறு முனகலும் இன்றி என் பின்னாலேயே வந்திருக்கிறான்.. என்னாலேயே தொடர்ந்து இரண்டு நிமிடங்கள் சுமக்க முடியாத சுமை அது.. நான் திடுக்கிட்டுப் போனேன். குற்றவுணர்வில் பதறிப் போனேன். அவனை பையை இறக்க வைத்து பதறி சமாதானப்படுத்த முயன்றதில் நண்பர்கள் திகைதது‌ப் போனார்கள்.. விடுங்க சிரீ.. அவனுக்கு இதெல்லாம் சாதாரணம்.. என்று அவர்கள் சொன்னதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. என் மனசாட்சியின் குற்றவுணர்வை மறைப்பதற்காக சென்றாயனை தனியே அழைத்துச் சென்று ஐம்பது ரூபாய் கொடுத்து வச்சுக்க என்றேன்.. (நண்பர்களுக்குத் தெரிந்தால் அவனுக்கு ஐந்து ரூபாய்க்கு மேல் கொடுக்க விடமாட்டார்கள். இன்னும் ஒரு படி மேலே சென்று நீங்க வைங்க ரீ அவனுக்கு நானே அப்புறமா குடுத்துக்குறேன். என்று சொல்லி பின்னால் கொடுக்காமலே விட்டுவிடுவார்கள்.)

ஐம்பது ரூபாயை புன்னகையோடு பார்த்த சென்றாயன், இம்புட்டு காசு வேணாம்ண்ணே. பத்து ரூவா குடுங்க போதும். என்றான். நான் எவ்வளவோ வற்புறுத்தியும் பத்து ரூபாய் மட்டும் வாங்கிக் கொண்டான். அதுவே அநியாயமாக வாங்குகிறோம் என்ற குற்றவுணர்வோடுதான் வாங்கிக் கொண்டான்.. அதில் அவனது பிழையேதும் இல்லை. காலகாலமாக அவனது வேலைக்கான தகுதி இவ்வளவுதான் என்று அவனுக்குள் விதைக்கப்பட்டிருந்தது. ஐந்து ரூபாய்க்கு மேற்பட்ட பணத்தை திருட்டுப் பணம் போலதான் அவனே பார்த்தான். (இங்கு ஒரு ஸ்மைலி போடவேண்டும் போல இருக்கிறது.. ஃபேஸ் புக் என்னை ரொம்பத்தான் குட்டிச்சுவராக்கி வைத்திருக்கிறது.)

இவ்வளவு தூரம் அவனைப் பற்றி சொன்னதற்கு காரணம் அவனது இயல்பை உங்களுக்கு படம்பிடித்துக்காட்ட மட்டும்தான். யாரிடமும் பேசாத அவன் என்னிடம் மட்டும் பேசி இறக்கி வைத்த பெரும் சுமைப் பொழுதுதான் இங்கு முக்கியம். தண்ணென்ற காற்று தானும் மனம் கனத்துப் போய் எங்கள் அருகிருக்க, அந்த ஆலமரத்தடி அணிலும், தும்பைப் பூச் செடிகளும் பேதலித்துப் போய் உறைந்திருக்க, செல்லக்கிளியைச் சுமந்து சென்ற முல்லை நதி மட்டும் செவிடுபோல் கடந்தோடிக் கொண்டிருக்க அவன் புன்னகையுடனே சொன்ன அந்த சம்பவம் ஒரு தீச்சட்டியைப் போல என் மனதில் இன்றும் தழல் குறையாமல் இருக்கிறது.

ஒரு ஐந்தாறு வருடம் முன்பு எனக்கு விநோதமான ஒரு ஆசை வந்தது. ஒரே ஒரு தரம் கஞ்சா புகைத்துப் பார்த்தால் என்ன.. எங்கள் ஊரில் அதை யாரிடமும் சொல்ல முடியாது. வழக்கம் போல தாசப்பட்டி வந்து கண்ணனிடமும், குபேந்திரனிடமும் சொன்னதும் இருவரும் ஒரே குரலில் உங்களுக்கு எதுக்கு ரீ இந்த வேண்டாத வேலை..? என்றுதான் சொன்னார்கள். நான் பிடிவாதமாக வேண்டுமே வேண்டும் என்றுவிட்டேன். இருவருமே அப்போதுதான் ஊரின் பெரிய தலைகளாக உருவாகிக் கொண்டு இருந்த நேரம் அது.. (இப்போது அவர்கள் இருவரும் நிஜமாகவே ஊரின் அசைக்க முடியாத பெருந்தலைகள்). எனது கோரிக்கை அவர்களை தர்ம சங்கடப் படுத்துவதாகவும் இருந்தது. அவர்களையும் கஞ்சாவையும் சேர்த்து வைத்து யாராவது பேசினாலே அவர்களது கௌரவம்

“

**ஒரு ஐந்தாறு வருடம் முன்பு எனக்கு விநோதமான ஒரு ஆசை வந்தது. ஒரே ஒரு தரம் கஞ்சா புகைத்துப் பார்த்தால் என்ன.. எங்கள் ஊரில் அதை யாரிடமும் சொல்ல முடியாது. வழக்கம் போல தாசப்பட்டி வந்து கண்ணனிடமும், குபேந்திரனிடமும் சொன்னதும் இருவரும் ஒரே குரலில் உங்களுக்கு எதுக்கு ரீ இந்த வேண்டாத வேலை..? என்றுதான் சொன்னார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைந்து போகக் கூடிய அபாயமும் அவர்களுக்கு இருந்தது. இருந்தாலும் கேட்பது நானாயிற்றே.. வேறு வழியின்றி மெண்டலு சென்றாயனை அழைத்தார்கள். அரவமில்லாம கூட்டிட்டுப் போயி பாளையம் ஆத்துப்பக்கம் எங்கிட்டாவது உக்கார வச்சு செவனைப் போட வச்சு கூட்டிட்டு வந்துரு. ஓவரா லோடைப் போட்டு அவரை கெறங்க வச்சிறாத.. முன்னபின்ன பழக்கமில்லாத மனுஷன்.

சும்மா ஆசைக்கு கேக்குறாரேண்டுதான் வாங்கித்தரச் சொல்றோம். கவனம்.. என்று பல முறை சென்றாயனை எச்சரித்து என்னை அவனோடு அனுப்பி வைத்தார்கள். அப்போதெல்லாம் சென்றாயன் இவ்வளவு அழுக்காக இல்லை. ஓரளவு துவைத்த துணிகளைப் போடுபவனாக இருந்தான். நெல்லடிப்பு, வெள்ளையடிப்பது போன்ற வேலைகளுக்கும் செல்பவனாக இருந்தான். அவனது கஞ்சாப் பழக்கம் மட்டுமே அப்போது அவனை மற்றவர்களிடமிருந்து தனிமைப் படுத்தும் காரணியாக இருந்தது.

சொன்னபடி என்னை பாளையம் ஆத்தங்கரை ஆலமரத்தடிக்கு அழைத்துச் சென்றான் சென்றாயன். ஆள் நடமாட்டம் இல்லாத இடம்.. சற்று தொலைவில் ஞானம்மன் கோவிலின் கல் சுவரும், பாதை தவிர்த்த இடங்களில் வளர்ந்திருந்த காட்டுச் செடிகளும் பறவைச் சத்தங்களும், அவ்வப்போது தொலைச் சாலையில் கடக்கும் மோட்டார் சத்தங்களும் நாங்களும், முதிர்ந்த அந்த ஆலமரமும், சில்லிட்ட படித்துறையும், மேகம் தீற்றிய நீலவானமும் தவிர வேறாரும் இல்லாத ஏகாந்தம்.. சிகரெட்டில் கஞ்சாவை ஏற்றத் துவங்கினான். நான் ஆர்வமாகி நானும் கொஞ்சம் ஏற்றுகிறேன் என்று வாங்கி ஏற்ற முயன்றபோதுதான் அது நான் நினைத்த மாதிரி எளிமையான விஷயம் இல்லை.. அதற்கும் ஒரு பயிற்சியும், அனுபவமும் தேவை என்று புரிந்தது.. ஏற்றுகிறேன் பேர்வழி என்று சிகரெட்டை நான் நாசமாக்கிவிடுவேன் என்று பயந்து, சென்றாயன், சாமி.. எண்ட்டயே குடுங்க. ஒங்களுக்கு என்னாத்துக்கு செரமம்.. என்று வலுக்கட்டாயமாக வாங்கி தானே ஏற்றி கொடுத்தான். நான் பற்ற வைத்துக் கொண்டேன். ஏறுவதே தெரியாமல் அந்த போதை ஏறிற்று. ஆனால் நான் நினைப்பது மாதிரி அது எனக்கு உவப்பானதாக இல்லை. எனக்கு பல்வேறு சிக்கல்கள் உருவாகின. திடுமென்று தலையைத் திருப்புவது கூட பிரயத்தனம் எடுக்கும் செயலாக மாறிவிட்டது. மரத்தில் சாய்ந்து கால்நீட்டி உட்கார்ந்திருக்கும் நான் எழ வேண்டும் என்ற எளிய செயல் கூட பெரும் சிரமமான செயலாக மாறி விட்டது. ஒன்றும் முடியவில்லை. சென்றாயன் கரிசனத்துடன், என்ன சாமி.. என்று கேட்கவும், நான் என்னால் முடியவில்லை என்பதை ஒப்புக்கொள்ளும் துணிச்சலின்றி, காத்து சூப்பரா அடிக்குது. ரொம்ப அமைதியான இடமா இருக்குது. கொஞ்சம் ஒரு அரைமணிநேரம், முக்கா மணி நேரம் உக்காந்துட்டுப் போவமா..? என்றேன்.

சரி என்று அவனும் உட்கார்ந்தான். பசிக்குது சென்றாயா. என்றேன். அவன் திகைத்துப் போய் பார்த்தான்.

என்ன சாமி..?

பசிக்குது.. காசு தர்றேன் திங்கிறதுக்கு என்னமாவது ஊருக்குள்ள போயி வாங்கிட்டு வர்றியா..? என்றேன்.

அவன் ஏன் அப்படி நெகிழ்ந்து பார்த்தான் என்று தெரியவில்லை. சரி சாமி.. என்று நான் நீட்டிய பணத்தை பவ்யமாக இருகைகளில் ஏந்தி வாங்க எத்தனித்ததான். எனக்கு கோபம் வந்தது. என்ன செய்யுற..? என்று கோபமாகக் கேட்டேன்.

அவன் புரியாமல், ஏஞ்சாமி..? என்றான்.

உன்னை கொல்லப் போறேன். முதல்ல என்னை சாமின்னு கூப்புடுறதை நிறுத்து. அண்ணேன்னு கூப்புடு. அப்புறம் இந்த மாதிரி ரெண்டு கையால ஏந்தி காசை வாங்கி என்னை கேவலப்படுத்தாத. சரியா..? என்று கடிந்து கூறினேன். கொஞ்சம் திகைத்து என்னைப் பார்த்தவன், சரிண்ணே. என்று காசை வாங்கிக் கொண்டு நம்பமுடியாத நேரத்துக்குள் சென்று திரும்பி வந்தான். மிக்சர், பொரி உருண்டை, கடலை மிட்டாய், முறுக்கு, மாங்காய் என்று ஒரு சிறுதீனி சாம்ராஜ்யத்தையே கொண்டு வந்து கடை விரித்தான்.மாங்காயை மட்டும் வந்ததும் ஆற்றுக்குள் எறிந்து விட்டான். எனக்கு பெருமகிழ்ச்சி. தேங்க்ஸ் சென்றாயா.. நீயும் சாப்புடு.. என்றபடி தின்ன ஆரம்பித்தேன். அவன் புன்னகையோடு எதையும் எடுத்துக் கொள்ளாமல் அப்படியே உட்கார்ந்திருந்தான்.

ம்.. எடுத்துக்கடா.. ரெண்டு பேருக்கும் தானே இது..? என்ற என்னை தயக்கத்தோடு பார்த்து, நீங்க சாப்புடுறது.. நா எப்புடி என் கையால எடுக்குறது..? நீங்களே எடுத்து என் கையில குடுங்க.. என்றான். எனக்கு கோபமான கோபம். இவனை விட நான் உயர்வென்று இவன் ஏன் நினைத்தான். ஒரு வேளை மறைமுகமாக எனது செயல்கள் ஏதேனும் இவனை விட நான் உயர்வு என உணர்த்துமாறு இருந்தனவோ என்று நான் சிதையத் துவங்கினேன். எனக்கு வேறு வழி தெரிய வில்லை. தட்டுத் தடுமாறி எழுந்து நின்று, இங்க



செல்லக்கிளியின் கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா என்றால் உடன் பிறந்தவள் இல்லை. பெரியப்பா மகள். பெரியப்பா யாரென்று உங்களுக்குத் தெரியுமில்லையா..? நாட்டாமை குடும்பம் என்று சொல்கிறார்கள் இல்லையா..? அந்த குடும்பத்தின் பெரிய தலைக்கட்டு. ரொம்ப அமைதியானவர் என்று பெயர். இருக்கும் வரை ஊர் மெச்ச வாழ்ந்தவர்.

வா.. என்றேன். அவன் குழப்பமாக எழுந்து அருகில் வந்தான். நான் அப்படியே அவனை தழுவிக் கொண்டு முதுகைத் தட்டிக் கொடுத்தேன். அவன் திகைத்துப் போனான்.

அவனை விடுவித்து விட்டு, தெரியுதா.. பெரியவங்க சின்னவங்கன்னு யாரும் இல்ல.. நானும் நீயும் சமம்தான். இதுக்கு மேலயும் என்னமாவது செஞ்சு என்னை அழவச்சுறாதடா தம்பி சென்றாயா.. என்றபடி நிமிர்ந்து பார்க்க, அப்போதுதான் அவன் அழுதபடி இருந்ததை கவனித்தேன். பதறிப் போய், என்னடா தம்பி..? என்னாச்சு..? ஏன் அழுகுற..? என்று தோள் பற்றி கேட்டதும் நெகிழ்ந்து போய் உளறலாக அவன் சொன்னதன் சாராம்சம் இதுதான்: அவனை இது வரை யாரும் தொட்டுப் பேசியதில்லை.

யாரும் பெயர் சொல்லி அழைத்ததில்லை. எல்லோருக்கும் அவன் மெண்டல்தான்.. இதை உடைத்து அண்ணே என்று அழைக்கச் செய்தது மட்டுமில்லை. தம்பி தம்பி என்று வேறு நான் அழைத்திருக்கிறேன். அவனை யாரும் தொட்டுக் கூட பேசாத ஒரு பொழுதில் தம்பியென அங்கீகரித்து அவனை அணைத்தும் பேசி இருக்கிறேன். தொடுகை நிராகரிக்கப்பட்ட ஒரு மனிதனின் வேதனையை அன்றுதான் நான் நேர்நின்று கண்டேன். அந்த கண்ணீர்த்துளி ஒவ்வொன்றிலும் ஆண்டாண்டு கால நிராகரிப்பின் வேதனையும் பெருகி வழிந்தது. இந்த அளவு நிராகரிக்கப் படுவதற்கு அவன் தீண்டத்தகாத சாதியில் பிறந்தவனும் அல்ல. எனது நண்பன் கண்ணனின் சுயசாதியைச் சேர்ந்தவன்தான். ஆதிக்க சாதியினன். ஏவல் வேலைகளையும் கீழ்மட்ட வேலைகளையும் செய்கிறான் என்பதனாலேயே அவன் தாழ்த்தப்பட்டு இருந்திருக்கிறான் என்ற வேதனையான உண்மை எனக்கு அப்போதுதான் உறைத்தது. தீண்டாமை என்பது ஒரு மனநிலை என்பது மறுபடியும் நிரூபணமான கணம் அது. இவனது கண்ணீரே இவ்வளவு சுட்டால் தீண்டத்தகாத சாதியில் பிறந்தான் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட ஓர் இனத்தின் மொத்த கண்ணீர் இந்த நாட்டையே எரித்து விடாதா..? எரிக்கவில்லை என்பதால்தான் இன்னமும் தீண்டாமை வளர்ந்தபடி இருக்கிறது.

பெரு மூச்சுகளும் மௌனங்களும் கடந்து போன கணத்தில் அவன் திடுமென பேசத் துவங்கினான். என்ன ஆச்சரியம் என்றால், பதில் சொல்வதற்குத் தவிர தானாக வாயைத் திறக்காத மனிதன் அவன். ஏதோ ஒன்று அவனை உடைத்து, அவனது மனதைத் திறந்து விட்டது போலும். அது அனுமதி கேட்டு வந்த பேச்சில்லை. நான் சொல்லவா, நீ கேட்கிறாயா என்ற தொனியே அதில் இல்லை. நான் சொல்கிறேன்.

நீ கேட்க வேண்டும் என்ற அதிகாரமும் அதில் இல்லை. கருதறுப்பு நேரங்களில் வறண்ட வயல்களினூடே நீங்கள் நடந்து போகும் போது தொலைவில் இருந்து கேட்கும் எவளோ ஒருத்தி பாடும் கருதறுப்புப் பாடல் போல.. பிச்சி ஒருத்தி இரவு நேரங்களில் தன் உன்மத்தம் அதிகமாகி பிதற்றும் அல்லது அரற்றும் சொற்களைப் போல, இரு பறவைகளின் நடனத்தைப் போல அல்லது மழையைப் போல, அவனது சொற்கள் அவை பாட்டுக்கு வெளிப்படத் தொடங்கின. எனக்கு அந்த அநாதரவான கருதறுப்புப் பாடல் பிடிக்கும். பைத்தியக்காரியின் புலம்பல்கள் என் மனம் தொடும். பேசட்டும் என்று விட்டு விட்டேன்..

எனக்கு முன்னால் அவனை கடைசியாக தொட்டுப் பேசியவள் அவனது அக்கா செல்லக்கிளி. அக்கா என்றால் உடன் பிறந்தவள் இல்லை. பெரியப்பா மகள். பெரியப்பா யாரென்று உங்களுக்குத் தெரியுமில்லையா..? நாட்டாமை குடும்பம் என்று சொல்கிறார்கள் இல்லையா..? அந்த குடும்பத்தின் பெரிய தலைக்கட்டு. ரொம்ப அமைதியானவர் என்று பெயர். இருக்கும் வரை ஊர் மெச்ச வாழ்ந்தவர். அவரது ஒரு சொல் பவுனுப் பெறும் என்பார்கள். வசதி வாய்ப்போடு இருந்த குடும்பத்தின் மூத்த மகன் அவர். கூட பிறந்தது ஏழு தம்பிகள். அதில் இரண்டாவது தம்பிதான் சென்றாயனது அப்பா. இப்போது அவரும் இல்லை.

பெரியப்பாவுக்கு தேவதானப் பட்டியில் இருந்து பெண் எடுத்திருந்தார்கள். பெரியம்மா அத்தனை அழகு. வெள்ளையம்மா என்ற பெயருக்கு ஏற்றபடி வெள்ளை என்றால் அம்புட்டு வெள்ளை. அவளது வீட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை செல்லமாகவே வளர்த்து விட்டார்களாம். ஓரளவு சமைக்கத் தெரியும் என்பதைத் தாண்டி எந்த விவரமும் தெரியாதவள். காசு எண்ணி கணக்கு வைக்கத் தெரியாது. கடைக்குப் போய் நல்ல பருப்பாக பார்த்து வாங்கத் தெரியாது. எண்ணை வாங்கிவந்தால் எவ்வளவு பாக்கி என்று பார்த்து வாங்கி வரத் தெரியாது. எந்த விவரமும் இல்லாதவளாக இருந்தாள் அந்தப் பெரியம்மா.

பெரியப்பா அவளது பலவீனங்கள் தெரிந்து அவள் எந்த குறையும் இல்லாமல் இருக்கப் பார்த்துக் கொண்டார். பருப்பு, காய்கறி உட்பட எந்த பொருளானாலும் அவரே வாங்கிப் போட்டு விடுவார். பால் கணக்கு உட்பட எந்த கணக்காக இருந்தாலும் அவரே பார்த்துக் கொள்வார். பெரியம்மாவும் எந்த சிரமமும் இல்லாமல் இருந்து வந்தாள். அப்போதுதான் திடீரென்று அவர்கள் குடும்பத்தில் இடி விழுந்தது. ஒரு விளக்கு வைத்த புதன் கிழமை மாலையில் வீட்டுக்கு வந்தவர் வேர்க்குது. அந்த காத்தாடியப் போட்டு விடும்மா.. என்றபடி உட்கார்ந்தவர் அப்படியே இறந்து போனார். அவர் இறக்கும்போது அவரது மகள் செல்லக்கிளிக்கு எட்டு வயது. அவனுக்கு ஐந்து வயது. ஊரே துக்கம் அனுஷ்டிப்பது மாதிரியான பெருஞ்சாவு பெரியப்பாவின் சாவு. சாவு நடந்தபின் சண்டைகளும் சச்சரவுகளும் வரிசையாக நடந்து முடிந்தன. சொத்து என்பது பாசத்தை விட கனமானதாக அந்த குடும்பத்தினுள் நின்றது. ஊருக்கே பஞ்சாயத்து பேசிய குடும்பத்துக்கு இப்போது ஊர்தான் பஞ்சாயத்து செய்து வைத்தது. நிலங்கள் பிரிக்கப்பட்டன. வீடு பங்கு போடப்பட்டது. கடன்கள் தலைக்கு இவ்வளவு என பிரித்துத் தரப்பட்டன. இறுதியில் பெரியப்பாவுக்கு ஆண் வாரிசு இல்லையாதலால் அவரது பங்கையும் ஏழு தம்பிமார் பிரித்துக் கொள்வது என்றும், பெரியம்மாவுக்கு இறுதிவரை வாழ்வதற்கான உதவிகளை செய்வது என்றும் செல்லக்கிளியின் திருமணத்தை ஏழு சித்தப்பாமாரும் பகிர்ந்து நடத்தி வைப்பதென்றும் பஞ்சாயத்தானது. அநியாயம்தான். அக்கிரமம்தான். ஆனால் செல்லக்கிளி சார்பில் தட்டிக் கேட்க அந்த குடும்பத்தில் ஒரு ஆம்பிளை கூட இல்லாமல் போச்சே..

ஆண்டு அனுபவித்த பெரிய வீட்டை விட்டு பெரியம்மா தெக்குத் தெருவில் இருந்த ஒரு சின்ன ஓரறை வீட்டுக்கு தள்ளப்பட்டாள். அவளுக்கான பண்ட பாத்திரங்கள் அவளுக்கு வழங்கப் பட்டன. பாத்திரங்களில் பெரும் பான்மை செல்லக்கிளியின் திருமணத்தின்போது திருப்பித் தரப்படும் என்ற வாய்மொழி உத்தரவாதத்தின் பேரில் தம்பிகள் எழுவரின் சம்சாரங்கள் பிரித்துக் கொண்டார்கள்.

பெருங்கொண்ட குடும்பத்தில் பிறந்தவள். பெருங்கொண்ட வாழ்வு வாழ்ந்தவள். அண்ட ஆளில்லாத நிலைமையில் ஒரு சிறு பொந்தில் தன் மகளோடு வாழத் துவங்கினாள்.

இங்குதான் செல்லக்கிளியைப் பற்றி சொல்ல வேண்டி இருக்கிறது. செல்லக்கிளியும் அழகு என்றால் அத்தனை அழகு. அவளது திருமணம் பற்றி பஞ்சாயத்தில் பேச்சு வரும் போதெல்லாம் சிததப்பாக்கள், அந்தப் புள்ளையோட அழகுக்கு மாப்புள்ளைக வரிசைல நிண்டு கட்டிக்கிட்டுப் போயிருவாங்ய.. என்று சொல்வதற்கு ஈடாக பேரழகியாக இருந்தாள். பருவம் வரும்போது அவளது அழகு என்ன ரூபமெடுக்கப் போகிறது என்பதே அனைவரின் கற்பனைக்கான சவாலாக இருந்தது. என்ன ஒன்று.. அழகில் மட்டுமல்ல, அறிவிலும் செல்லக்கிளி அவளது அம்மாவைக் கொண்டிருந்தாள். பத்து ரூபாய்க்கு சில்லறை வாங்கக் கூட தெரியாதவளாக இருந்தாள். எழுத்துக்களோ அவளது நினைவிலேயே நிற்காது. சொன்ன வேலையை செய்வாள். அதிலும் கூட நிறைய குறைகள் இருக்கும். சித்திகள் திட்டித் திட்டி சொல்லிக் கொடுத்தாலும் வேலைகள்கூட அவள் மண்டையில் ஏற மறுத்தன. குப்பையில் மலர்ந்திருக்கிறோம் என்ற பிரக்ஞையற்ற ஒரு காட்டுப் பூவைப் போலதான் தனது குறைகளைப் பற்றிய பிரக்ஞை ஏதுமின்றி அவள் பாட்டுக்கு சந்தோஷமாக வளைய வந்தபடி இருந்தாள் குறைந்த பட்சம் அவளது அழகு பற்றிய பிரக்ஞைகூட அவளுக்கு இல்லாமலிருந்தது.

பங்கு பாகம் பிரிக்கப்பட்டு இருட்டறைக்குள் அவர்களது வாழ்வு தள்ளப்பட்ட பிறகு சித்தப்பாக்கள் கொடுப்பதாகச் சொன்ன உதவித் தொகையும் சிறுத்துக் கொண்டே போக ஆரம்பித்தது. சாப்பிட வேண்டுமே. பசியெனும் பெருநோய் துரத்த அந்த நாட்டாமைக்காரரின் பொண்டாட்டி கருதறுப்பு, களையெடுப்பு, சித்தாள் வேலை என்று போகத் துவங்கினாள். ஆரம்பத்தில் லேசாக முனகிய சித்தப்பாக்கள் பிறகு அந்த முனகலையும், மாதா மாதம் கொடுத்து வந்த சிறு தொகையையும் கூட நிறுத்திக் கொண்டார்கள். இரண்டு வயிறு உண்ண வேண்டுமல்லவா.. அதனால் செல்லக்கிளியும் கூட அவளது அம்மாவுடன் அறுப்பு, நடவு என்று வேலைகளுக்குப் போகத் துவங்கினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித துயரங்களைப் பற்றி இயற்கைக்கு எந்த அக்கறையும் இல்லை.. வருடங்கள் ஏற ஏற செல்லக்கிளிக்கு வனப்பை அள்ளி அள்ளி கொடுக்கத் துவங்கியது இயற்கை. வயது வந்ததும் தோலில் ஏறிய மினுமினுப்பும், தானாய் செதுக்கிக் கொண்ட அவளது உடல் உறுப்புக்களின் செழுமையுமாக அவள் ஆட்டுக் கூட்டத்துக்குள் வாழச் சபிக்கப்பட்ட தேவதையைப் போல வளைய வரலானாள். இளவட்டங்கள், பெரியவர்கள் என்றில்லாமல் செல்லக்கிளி அனைவருக்குமான கனவு ராசாத்தியாகிப் போனாள். ஊரில் பெரிய மனுசர்கள் சிலபேர் அவளது சித்தப்பாக்களிடம் சீக்கிரம் அவளை யார் கையிலாவது பிடித்துக் குடுத்துருங்கப்பா. அந்தப் புள்ளைக்கும் வெவரமில்ல. அவ அம்மாக்காரிக்கும் விவரமில்ல.. என்று சொல்லிச் சென்றார்கள். சித்தப்பன்கள், அவன் பாத்துக்குவான், அவன் பாத்துக்குவான் என்று ஒருவர் மேல் ஒருவர் பொறுப்பை சுமத்திச் சுமத்தி கடந்து சென்றார்கள்.

இப்படியாக இருந்த ஒரு நாளில்தான், செல்லக்கிளியின் அம்மாவுக்கு திடீரென்று ஒரு நினைப்பு தட்டியது. கொஞ்ச நாளாகவே செல்லக்கிளி மாதாந்திர தொந்தரவுகளுக்கு துணி தேடவில்லையே என்று.. செல்லக்கிளியை அதட்டிக் கேட்டபிறகுதான் விபரம் தெரியவந்தது..

ஒரு சித்தியிடம் சொல்லவும் எல்லா சித்தி சித்தப்பாக்களும் வந்துவிட்டார்கள். வயிறு தெரியத் துவங்குமளவுக்கு செல்லக்கிளி கர்ப்பமாக இருந்தாள். அனைவர் தலையிலும் இடிதான் இறங்கியது. நாட்டாமை குடும்பமல்லவா..? சாதி மானம், குடும்ப மானம், கௌரவம் எல்லாம் என்னாவது..? வீடு முழுக்க அழுகையும் வன்முறையும்தான். ஆளாளுக்கு மாறி மாறி செல்லக்கிளியை அடித்துத் துவைத்தார்கள். இந்த சீரழிவுக்கு எவன் காரணமாக இருந்தாலும் எப்படியாவது அவனுக்கே செல்லக் கிளியை தட்டி விட்டுறலாம் என்பதே அவர்களது எண்ணமாக இருந்தது. அடித்துக் கேட்டதில் செல்லக்கிளி இன்னொரு இடியைப் போட்டாள். மூன்று இளைஞர்கள் மற்றும் ஒரு ஓய்வு பெறும் வயது அரசு ஊழியர் என நான்கு பேர் அவளை உண்டிருந்தார்கள். எது பற்றியும் விவரமில்லாத செல்லக்கிளிக்கு அது பற்றியும் எந்த விவரமும் இல்லை. ஒருவர் மற்றவருக்கு என்று அறிமுகம் செய்ய, நல்லாத்தானே இருக்கு என்று இவளும் உடன் பட்டிருக்கிறாள். அந்தக் குடும்பம் அடைந்த அதிர்ச்சிக்கு அளவே இல்லை. எவனாவது ஒருவன் என்றால் கட்டி வைக்கலாம். நான்கு பேர். அதிலும் மூன்று பேர் கல்யாணம் ஆனவர்கள். அதில் ஒருவர் பேரன் பேத்தி எடுத்தவர். அந்த ஊரில் வழக்கமாய் கருக்கலைக்கும் மாரி ரகசியமாக வரவழைக்கப் பட்டாள். அவள் செல்லக்கிளியின் வயிற்றைப் பார்த்துவிட்டு, இது ஆகாது. ரொம்ப மாசமாயிப் போச்சு. கலைக்கிறதும் ஒண்ணுதான். கொல்லுறதும் ஒண்ணுதான். நான் மாட்டேன் சாமி.. என்று போய் விட்டாள்.

அந்த சிறு வீட்டின் சுவர்களுக்குள், துக்கமும், அவமானமும், அருவெறுப்பும் கரைபுரண்டோடியது. செய்வதறியாது திகைத்த அனைவரும் கடைசியாக ஒரு முடிவை எடுத்தார்கள். தொத்தனும், செவ்வாயியும் அழைக்கப் பட்டார்கள். அந்த ஊரின் இரு இருண்ட மனிதர்கள் அவர்கள். தொத்தன் தொழுநோய் வந்து விரல்கள் ஊனமானவன். பிழைப்புக்காக பொட்டலம் விற்று உயிர் வாழ்பவன். ஊரின் தீண்டத்தகாத மட்டுமல்ல.. பேசத்தகாத மனிதன் என்ற லிஸ்ட்டிலும் அவன் இருந்தான். செவ்வாயி முன்னாள் பாலியல் தொழிலாளி. தற்போது வயதாகிவிட்டதால், யாராவது கேரளாக்காரப் பிள்ளைகள் கம்பம், போடி என்று வந்து தங்கி தொழில் பார்ப்பார்கள்.

செவ்வாயிக்கு தகவல் சொல்வார்கள். (அப்போது செல்போன் அல்ல.. டெலிபோனே அபூர்வமாக இருந்த காலம்). செவ்வாயி இந்த தகவலை ஆர்வமுள்ள கஸ்டமர்களுக்கு சொல்வாள். அவர்களிடம் சிறு தொகை வாங்கிக் கொண்டு அந்த பெண்கள் தங்கி இருக்கும் இடத்தையும் தனக்கான கோட் வேர்டையும் சொல்லி அனுப்புவாள். (அந்த கோடு வேர்டு இல்லலாவிட்டால் அவர்களை அந்த பெண்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்று சொல்லி அனுப்புவாள். உண்மையில் அந்த கோடு

**அந்த ஊரில் வழக்கமாய் கருக்கலைக்கும் மாரி ரகசியமாக வரவழைக்கப் பட்டாள். அவள் செல்லக்கிளியின் வயிற்றைப் பார்த்துவிட்டு, இது ஆகாது. ரொம்ப மாசமாயிப் போச்சு. கலைக்கிறதும் ஒண்ணுதான். கொல்லுறதும் ஒண்ணுதான். நான் மாட்டேன் சாமி.. என்று போய் விட்டாள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர்டின் மூலமாகவே அந்த கஸ்டமர்கள் செவ்வாயி மூலம் வந்தவர்கள் என்பதை அந்த பெண்கள் அறிவார்கள். கணக்கு வைத்துக் கொண்டு கஸ்டமருக்கு இவ்வளவு என்று இவளுக்கான தொகையை கொடுத்து விட்டு செல்வார்கள்.) செவ்வாயியும் தொத்தனின் லிஸ்ட்டுதான்..

பேச்சில் பேரங்களுக்குப் பிறகு முடிவு வந்தது. தொத்தனும், செவ்வாயியும் செல்லக்கிளியை ஆத்துக்குள் ஆழமான இடத்துக்கு அழைத்துச் சென்று தண்ணியில் மூழ்கடித்து கொன்றுவிட வேண்டியது. அதற்கான சம்பளமாக தொத்தனுக்கு 300 ரூபாயும் செவ்வாயிக்கு 200 ரூபாயும் (அங்கும் பெண்ணுக்கு குறைந்த கூலிதான்) தந்து விடுவதாக முடிவு செய்யப்பட்டு ஏக போகமாக இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப் பட்டது. இவை அனைத்தும் செல்லக்கிளியின் முன்பாகவே நடந்து முடிந்தன. செல்லக்கிளி யாருக்கோ என்பது போலத்தான் பார்த்தபடி இருந்தாள். இருவரும் செல்லக் கிளியை அழைத்துச் செல்ல எத்தனித்தபோது பெரிய சித்திதான் ஒரு நிமிஷம் நில்லுங்க என்று சொல்லி விட்டு மற்றவர்களை தனியே அழைத்துச் சென்று ஆலோசனை செய்தாள். தொத்தனோ பொம்பளையே கிடைக்காதவன். செவ்வாயியை கேட்கவே வேண்டாம் பொம்பளை வியாபாரம்தான் அவளது தொழிலே. செல்லக் கிளியை அவர்கள் அழைத்துச் செல்லும்போது தொத்தன் அவளுடன் உறவு கொள்ள மாட்டான் என்பதற்கோ, செல்லாயி போகும் வழியில் சில கஸ்டமர்களிடம் செல்லக்கிளியை அனுப்ப மாட்டாள் என்பதற்கோ எந்த உத்தரவாதமும் இல்லை. அதனால் யாராவது உடன் செல்ல வேண்டும் என்று சித்தி சொல்ல அனைவரும் அது சரிதானே என்று யோசிக்கத் துவங்கினார்கள். இதற்கு மேலும் குடும்ப மானம் போகக் கூடாது என்பதில அவர்கள் உறுதியாக இருந்தார்கள்.

நீ போ நீபோ.. என்று ஒருவர் மற்றவரை கை காட்ட, இருந்தவர்களிலேயே விவரமானவனாக அப்போது ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த சென்றாயன் இதற்கு தேர்ந்தெடுக்கப் பட்டான். அவனைப் பொறுத்த வரையில் அவன் அவர்கள் கூடவே போக வேண்டியது. வழியில் செல்லக்கிளிக்கு எதுவும் மானபங்கம் நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது. அவர்கள் கொன்று விட்டது உறுதியாகத் தெரிந்த பிறகு வீட்டுக்கு வந்துவிட வேண்டியது. அவ்வளவுதான். மானம் எவ்வளவு முக்கியம் என்று அவனுக்கு அழுத்தமாக சொல்லி அனுப்பினார்கள்.. அவனது கண்கள் மினுக்கத் தொடங்கியதை நான் கவனித்தேன். ஆலமரத் தண் காற்று கூட ஒரு இலையையும் அசக்காமல் நின்று கவனிக்கத் துவங்கியது. சற்று தள்ளி ஊதாப் பூ பூத்து நின்றிருந்த எருக்கஞ்செடி கூட இந்தப் பக்கம் திரும்பியது மாதிரி இருந்தது. எனது உள் முழுக்க ஒரு நடுக்கம் பரவிக் கிடந்தது. இதற்கு மேல் சொல்லாதே என்று அவனிடம் கெஞ்சச் சொல்லி ஒரு மனது சொன்னது. இன்னொரு மனதோ நடுக்கத்துடன் மேலே சொல்லு மேலே சொல்லு என்று சத்தமின்றி அவனிடம் இறைஞ்சிக் கொண்டு இருந்தது. கதிர் வீச்சைப் போல துயரம் சுமந்த அவனது கண்கள் பெரு வெளியின் காலக் கோட்டைத் தாண்டி இருபது வருடத்துக்கு முந்தைய கணத்தை நழுவ விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அதற்குள் முகம் புதைத்திருந்தன. என் கண் கலங்கியிருந்ததா எனத் தெரியாது. ஆனால் அடுத்து நடக்கப் போகும் சம்பவங்களுக்கு என் மனம் இறுகித் தயாராகி நின்றது நிஜம்..

*******

ஒப்பந்தப்படி தொத்தன் முன்னால் செல்லவேண்டியது. கொஞ்சம் இடைவெளி விட்டு செவ்வாயி செல்ல வேண்டியது. நல்ல இடைவெளி விட்டு சென்றாயன் செல்லக்கிளியை அழைத்துக் கொண்டு செல்ல வேண்டியது. நியமப்படி அந்த ஊர்வலம் தொடங்கியது.

மஞ்சளில் நீல நிறப் பூக்கள் நிறைந்த சீட்டிப் பாவாடையைத்தான் செல்லக் கிளி அணிந்திருந்தாள். ஊதா வண்ண லவிக்கையும், சாயம் போன ஆரஞ்சு வண்ண தாவணியும் அணிந்திருந்தாள். சிறு வயதில் செல்லக்கிளியும் சென்றாயனும்தான் விளையாட்டு சேக்காளிகள். நண்பர்களுக்குள் அடிதடி நடந்தாலும் இருவரும் சமாமாகவே சண்டை போட்டு சமமாகவே அடிகளைப் பகிர்ந்து கொள் வார்கள். திடீரென செல்லக்கிளி அந்த விளையாட்டு நாட்களுக்குள் போன மாதிரி பேச ஆரம்பித்தாள்: நீ ஓடு.. நான் நொண்டியடிச்சு துரத்தி வாறேன். என்றாள். இவனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. மறுத்து விட்டான். ஆனாலும் உற்சாகம் குறையாத செல்லக்கிளி அவனை பாதையோரம் நிறைந்திருந்த உண்ணிச் செடிகளின் பழங்களைப் பறித்துத் தரச் சொன்னாள். இவன் இறுக்கமாகவே பறித்துக் கொடுத்தான். உண்ணிப்பழம் தின்று ஊதா வண்ணமாகிப் போன அவளது நாக்கை இவனிடம் அடிக்கடி காட்டியபடி நடந்தாள். உண்ணிப் பூ பறித்து வெத்தலை போட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்லக்கிளி சமாதானமாக, உற்சாகம் குறையாமல் ஆத்துல தண்ணி கம்மியா வருதாமே.. என்னைய எப்புடி கொல்லு வாகளாம்..? சும்மா தெரிஞ்சுக்கிறதுக்குதான் கேட்டேன்.. என்று அவள் சொல்ல சென்றாயனுக்கு மெல்ல உடலில் நடுக்கம் தோன்றத் துவங்கி இருக்கிறது.**

கொண்டாள். திடீரென கீழே கிடந்த கல்லை எடுத்து வரப்புச் சரிவில் மண்டையாட்டிக் கொண்டிருந்த கரட்டானை நோக்கி விட்டெறிந்தாள். அது குறி தவறி நீரில்லாத கால்வாய்க்குள் சென்று மறைந்தது. இந்த வயக்காட்ல கருதறுக்க வந்தப்பதேன் நம்ம காமாச்சியக்காவுக்கு பாம்பு கடிச்சிச்சு.. அந்தா இருக்குல்ல ராவுத்தரு வயக்காடு.. அங்க வெதைப்புக்கு வந்தப்பதேன் என்னோட பச்சைப் பாவாட கிளிஞ்சு போச்சு.. என்று எதை எதையோ பேசியபடி வந்தாள். சென்றாயனுக்குள் இனந்தெரியாத ஒரு இறுக்கம் பரவி நின்றது. பதினான்கு வயதில் உலக நியதிகள் புரியாமலில்லை. ஆயினும் ஏதோ ஒன்று அவனை ஊமை செய்து வைத்தது..

அவளது முகம் வழக்கத்தைக் காட்டிலும் மிக அழகாக மினுமினுத்ததாம். (தாய்மையின் மினுக்கம் என்று நான் கணிக்கிறேன்.) அன்றைக்கு அவள் அவ்வளவு அழகாக இருந்தாளாம்..

ஏண்டா சென்றாயா.. (அப்போது அவன் கஞ்சா அடிக்கத் துவங்கவில்லையாதலால் மெண்டல் என்ற பெயர் அப்போது அவனுக்கு இல்லை. சென்றாயன் என்றே அழைக்கப் பட்டான்.) எப்புடிடா செத்துப் போவேன்..?: என்று அவள் திடுமென கேட்டபோதுதான் அவனுக்கு நடக்கப் போவதன் உக்கிரம் உறைத்திருக்கிறது. பயத்தை மறைத்துக கொண்டு கோபமாக, இப்ப நீ வாய மூடிக்கிட்டு வரமாட்ட..? என்று கத்தி இருக்கிறான்..

செல்லக்கிளி சமாதானமாக, உற்சாகம் குறையாமல் ஆத்துல தண்ணி கம்மியா வருதாமே.. என்னைய எப்புடி கொல்லு வாகளாம்..? சும்மா தெரிஞ்சுக்கிறதுக்குதான் கேட்டேன்.. என்று அவள் சொல்ல சென்றாயனுக்கு மெல்ல உடலில் நடுக்கம் தோன்றத் துவங்கி இருக்கிறது. வேகமா நட... என்று சொல்லி விட்டு அவன் முன்னால் நடக்க, நல்ல வேளை ஆறு வந்து விட்டது. தொத்தனும், செவ்வாயியும் வெயிலோடு எரிச்சலாக காத்துக் கொண்டிருந்தார்கள். எம்புட்டு நேரமா நடந்து வருவீக..? வெயிலு வேற இம்புட்டு போடு போடுது.. சோலிய முடிச்சிட்டு திரும்பி நடக்க வேணாமா..? என்று சலித்துக் கொண்டான் தொத்தன்.

ஆனால் செல்லக்கிளியின் பார்வை முழுக்க ஆற்றின் மறுகரையில் இருந்த மாந்தோப்பி லேயே இருந்தது. பரபரப்பாகி சென்றாயனிடம், எலேய் எலேய் தம்பி.. அதுல ஒரே ஒரு மாங்கா பறிச்சுத்தாடா.. ரொம்ப ஆசையா இருக்கு.. என்று கேட்கிறாள்.

தொத்தன், ப்ச். போற நேரத்துல என்னத்துக்கு மாங்கா தேங்கான்னுக்கிட்டு..? என்று சொன்னதுதான் தாமதம். உரத்த குரலில் சென்றாயன், ஏய் தொத்தா.. வாயத் தொறந்த.. கொண்டுருவேன். சாவத்தான போகுது..? வேணும்ன்றத திண்டுட்டுப் போகட்டும்.. என்றபடி ஆற்றுக்குள் இறங்கி அந்த தோப்பின் கரைப் பக்கம் ஆழம் இருந்ததால் நீந்திச் சென்று ஒரு மாங்காயை பறித்துக் கொண்டு வந்து செல்லக் கிளியிடம் கொடுக்கிறான்.

அவள் அதை ஒரு சின்னஞ்சிறுமியின் ஆவலுடன் தின்னத் துவங்குகிறாள். மெல்ல சென்றாயனுக்குள் ஏதோ ஒன்று நெகிழ்கிறது. செவ்வாயி, ஏம்மா முழு மாங்காயும் திங்கப் போறீங்களா..? என்று கேட்டதும், இவள் அவசர அவசரமாக கடைசி கடி கடித்தபடி பாக்கி மாங்காயை சென்றாயன் பக்கம் நீட்டி, இந்தாடா.. கடிக்காத பக்கமா நீ தின்னுக்க.. நான் போயி சாகுறேன்.. என்றபடி அவன் கையில் மாங்காயைத் திணித்து விட்டு ஓட்டமாக செவ்வாயி, தொத்தனைப் பார்த்து ஓடுகிறாள். சென்றாயன் கையில் பிடித்த மாங்காயுடன் பார்த்தபடியே இருக்க. தொத்தனும் செவ்வாயியும் சுற்றிலும் யாரும் இருக்கிறார்களா என்று பார்த்து விட்டு இரு பக்கமாக அவளைப் பிடித்து ஆற்றுக்குள் அழைத்துச் செல்கிறார்கள். இடுப்பளவு ஆழத்துக்கு சென்றதும் தொத்தன் செல்லக்கிளியை தண்ணீருக்குள் படுக்கச் சொல்கிறான். அவள் குப்புறப் படுக்கப் போக, அவன் மல்லாக்கப் படுக்கச் சொல்கிறான். அவள் மல்லாக்க, நீந்துவது போல படுக்க, சரேலென்று அவளை நீருக்குள் அமுக்கி தொத்தன் அவள் கழுத்து மேல் நின்று ஊண்டி மிதிக்கிறான். செவ்வாயி அவளது கால்களின் மேல் ஊண்டி நின்று கொள்கிறாள். சென்றாயன் மெல்ல நடுங்கத் துவங்க, செல்லக்கிளியின் கடைசிக் காற்று தண்ணீருக்குள் இருந்து கொப்பளித்து கொப்பளித்து வெளியேறுகிறது. சென்றாயனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலற வேண்டும் போல இருக்கிறது. கை கால்கள் நடுங்குகின்றன. குறைந்த பட்சம் அய்யோ என்று கத்தவாவது வேண்டும் போலிருக்கிறது. உள்ளுக்குள் நெகிழ்ந்த அது இப்போது தெறித்து உடைந்து விழ அப்படியே கேவி அழத் துவங்குகிறான். வைத்த கண்ணை எடுக்காமல் அங்கேயே பார்த்தபடி அப்படியே உட்கார்ந்து அழத் துவங்குகிறான். தொத்தனும், செவ்வாயியும் மரணம் உறுதியானபின் அவசர அவசரமாக கரைப்பக்கம் வருகிறார்கள். செவ்வாயி என்னமோ கொஞ்சம் தண்ணீரை எடுத்து தலையில் மட்டும் தெளித்துக் கொள்கிறாள். தொத்தன் வெளியில் வந்து நனைந்த கையை சட்டையின் நனையாத பகுதியில் துடைத்துக் கொண்டு, பாக்கெட்டில் இருந்து கஞ்சா சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைக்கிறான்..

நீல நிறப் பூக்கள் போட்ட மஞ்சள் பாவாடை மெல்ல மிதந்து வெளிவருகிறது. அப்புறம் ஒரு அடர் ஆரஞ்சு கொடி மாதிரி தாவணி வெளி வருகிறது. மெல்ல ஆற்றின் போக்கில் செல்லக்கிளி தன் பயணத்தைத் துவங்குகிறாள்..

கேவியபடும் சென்றாயனின் கையில் இருந்து அந்த உண்ணப்படாத மாங்காயை பிடுங்கி ஆறறுக்குள்ளேயே வீசிவிட்டு கிட்டத்தட்ட அவனை இழுத்துப் போகத் துவங்குகிறாள் செவ்வாயி..

அதற்குப் பின் ஒரு போதும் நுழையாத வீட்டைப் பார்த்து அழைத்துச் செல்லப் படுகிறான் சென்றாயன்..

************

ஒறங்க முடியலண்ணே.. கண்ண மூடுனா செல்லக்கிளி வந்து மாங்கா குடு, மாங்கா குடுன்னு கேக்குறாண்ணே.. (கையில் புகையும் கஞ்சா சிகரெட்டை காட்டி) இதப் போட்டாத்தேன் அவ வராம இருக்குறா.. அம்புட்டு பேரும் மெண்டலு மெண்டலுன்றாங்ய.. நம்ம தும்பம் யாருக்குண்ணே தெரியும்..? அவிங்யளுக்கு தெரியும். என்ன நடந்துச்சுண்டு நல்லா தெரியும். ஆனா எப்புடி நடந்துச்சுண்டு எனக்கும், இப்ப ஒனக்கும் மட்டுந்தாண்ணே தெரியும்.. என்றபடி நிமிர்ந்தவன் நான் அழுது கொண்டு இருப்பதைப் பார்த்ததும் சட்டென குற்றவுணர்வில் பார்வையைத் திருப்பிக் கொண்டு, மன்னிச்சுக்கண்ணே.. போயிருவோமா..? என்று கேட்க, நான் சரி என்று தலையை மட்டும் அசைத்தேன்..

*****

,இப்போது புன்னகைக்கும் சென்றாயனின் முகத்தில் குழந்தைமை கூடி இருந்தது. அந்தக் கண்ணில் சதா தெரியும் தயக்கம் போயிருந்தது. அவனது புன்னகை ஒரு அகல்விளக்கின் ஒளியைப் போல சுடர்ந்தது. எனது துக்கம் பெரிதாகி ஒரு புன்னகையாய் மாற, சென்றாயா.. என்று என் அன்பைத் திரட்டி அவனை அழைத்தேன்..

ஆத்துப் பக்கம் போயிறாதண்ணே.. ஆறெல்லாம் மஞ்சப்பாவாட மெதக்குது.. நீ போனா உன்னையும் உள்ள இழுத்துக்கிரும்.. போயிறாத.. என்ன..? என்றான் அவன்..

எனது துயரம் தாங்கவொண்ணாததாக இருந்தது. அவனுக்கு என்னால் ஒரே ஒரு ஆறுதலை மட்டும் தர இயலும் என்று தோன்றியது. இரு கைகளையும் நீட்டி வா என அவனை அழைத்தேன்.

அதை ஏற்றாற் போல இல்லாமலும் மறுத்தாற் போல இல்லாமலும் அதே அகல் விளக்குப் புன்னகையுடன் அவன் அங்கேயே நின்றான். நான் கூச்சத்தை எல்லாம் உதறிவிட்டு, நேராக அவனருகில் சென்றேன்.

என்னைய அடையாளம் தெரியுதா சென்றாயா..? வாடா.. ஒருக்கா உன்னை கட்டிப் புடிச்சுக்குறேன்.. என்று கைகளை நீட்டினேன். அவன் என் இரு கைகளையும் மாறி மாறிப் பார்த்தான். அவனை நான் அணைக்கப் போகும் கணத்துக்கு முந்தைய கணம் வண்டியோடு வந்து விட்ட கண்ணன் சட்டென என்னைப் பின்னுக்கு இழுத்தான்..

என்ன ரீ உங்களுக்கு பைத்தியமா..? அவென் இப்ப நெசமாவே மெண்டலாயிட்டான்.. நீங்க பாட்டுக்கு அவனை கட்டிப் புடிக்கப் போனா அவன் உங்கள கடிச்சு வச்சிட்டா என்ன செய்யுறது.. (திருமபி) எலேய் ஓடிப் போயிரு. இல்ல, அடிபெத்தே செத்துப் போவ.. என்றதும் அதே அகல்விளக்குப் புன்னகையுடன் சென்றாயன் மெல்ல நடந்து போய்விட்டான்.

உணவேதும் கிடைக்காமல் சமையலறையை விட்டு வெளியேறும் தளர்ந்த எலியைப் போலத்தான் அவன் நடந்து போனான்..

ஒரு முற்றுப் பெறாத அணைப்பை என் இரு கைகளிலும் தேக்கி நான் பெரும் துக்கவானாக, போகும் அவனையே பார்த்தபடி நின்றிருந்தேன்..

****** ■

# செல்லக்கிளியின் தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதை சொல்லிகளின் தெய்வம்

அவள் தன்னை அதிசிறந்த
கதை சொல்லியாகத் தெரியப்படுத்துபவள்
அவள் கூறும் கதைகள் எண்ணிலடங்கா
சொல்வாள் தினமும் விதவிதமாய்
வசீகரிக்கும் கேட்போரைச் சொல்லாடல்
ஒருமுறை அணுகினால் நகரவியலாது
பின்னெப் பொழுதும்...

நிணவாடை உறைந்த வீதிகளில்
உக்கிரச் சிறுதெய்வத்தின் அணுக்கமாய்
அவள் நடந்த நாட்களின் விவரிப்பில்
வீதியோர வீடுகளின் முற்றம் தெறித்த
கதைத் துணுக்குகளும் முகமறைந்த
மனிதர்களும்...

தான்கூறும் எதுவும் தன்கதையல்ல
தெளிவு சொல்வாள் ஒவ்வோர் முறையும்
குழந்தைக் கதைகளுமுண்டு அவளிடம்
ஒற்றைச் சிறகுத் தேவதைக் கதையில்
ஏறிப்பறந்த எந்தச்சிறுமியும்
இறங்கவில்லை தரையில் இந்நாள்வரை...

யத்தனமிகு எக்கதையினும் அவள்குரலில்
ஓடும் சிற்றோடையாய் காட்டாறாய்...
எனினும்...
சொன்னதில்லை அவள் யாரிடமும்
உக்கிரச் சிறுமூர்த்தி அவள் காதலனா
என வினவினால் சிரிப்பதும்
கதைசொல்லிகளின் தெய்வமாய் அவள்
நிறுவப்பட்டதை கேட்டு அழுததும்
ஏனென்று... ■

தோழமை வணக்கம்!


சென்ற சிறப்பிதழில் இடம்பெற்ற எனது ஆக்கத்தில் தவறுதலாகதொரு அச்சுப் பதிவு இடம்பெற்றிருந்தது. இதனை தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டுவருவதுடன் இதற்கான திருத்தத்தையும் வெளியிட்டு உதவுவீர்களென அன்புடன் எதிர்பார்க்கிறேன்.

காக்கைச் சிறகினிலே (இறக்கை3 இதழ்) சிறப்பு மலரில் 'புலம்பெயர் தமிழர் திருநாள் 2014' ஆக்கத்தில் எனவாக அமைந்திருக்கும் பத்தி கீழே வருமாறு அமைந்திருக்க வேண்டும. கணினி தட்டச்சில் பதிவு செய்து திருத்தம் மேற் கொண்டபோது இத்தவறு நடந்திருக்கிறது. இதற்காக மன்னிப்புக் கேட்கிறேன். இத்தகைய நோக்கை இலக்காகக் கொண்டதாக 2005ல் பிரான்சில் தமிழ் - தமிழர் கலை பண்பாட்டு ஆர்வலர்களுடன் இணைந்து 'சிலம்பு சங்கம்' உருவாக்கியது. பிரான்சு பாரீஸ் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளரும், கல்வெட்டு ஆய்வாளருமான நண்பர் அ. முருகையன் எம்மோடு கைகோத்து இந்தச் செயல்களில் எமக்கு தகுநல் ஆலோசகராக, எம்முடன் இணைந்திருந்தார். அதேபோன்று உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் (பிரான்சு), என்ற அமைப்பின் தலைவரும் நகரசபை உறுப்பினரும் நண்பருமான அலன் ஆனந்தன் அவர்களின் பங்களிப்பு மறக்க முடியாததொன்று. இத்தகைய ஒருங்கிணைப்புகளில் என்னுடன் எனது நீண்டகால தோழரும் புலம்பெயர் சமூக ஆர்வலருமான கி.பி. அரவிந்தன் இணைந்து பயணித்தார்.

தோழமையுடன், **முகுந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூலபாட ஆய்வில் புதுத்தடம் பதிக்கும் ய.மணிகண்டன்

**தொ**குப்பு, பதிப்பு, ஆய்வென்கிற வகைமைகளில் ய.மணிகண்டனின் (ய.ம) அருங்கொடைகள் யாப்பியல், பாரதியியல், பாரதிதாசனியல், மணிக்கொடி காலம் ஆகிய துறைகளில் புத்தொளி பாய்ச்சிப் புதுத்தடம் சமைக்கவல்லன. மணிகண்டனின் தொகுப்பு, பதிப்பு, மூலபாட ஆய்வுகளைக் காணப்புகு முன் அதற்கான முன்னிபந்தனை அவருடைய ஆய்வு முறையியலைப் பற்றிய புரிதல் நமக்கு இன்றியமையாதது என்பதேயாகும். இத்தொடர்பில் மூலபாட ஆய்வு மூலவர்களின் அருங்கொடை இவற்றிலிருந்தே தொடங்கியாக வேண்டியுள்ளது.

"ஆராய்ச்சியின் வளர்ச்சி என்பது மூல நூல் பதிப்பு, நூல் பதிப்பு, பிற துறையோடு ஒத்திட்டுப் பார்வையைத் தெளிவாக்கிக் கொள்ளுதல் எனத் தொடக்கப் படிநிலை களுடையது. இவ்வகையில்தான் உ.வே.சா.வின் பதிப்புப் பணியின் பெருமையை நாம் அளவிட வேண்டும்."

"உ.வே.சா.வின் பதிப்பு முயற்சி, நூல் வெளியீடுவோருக்குப் புதிய தடங்களை உருவாக்கித் தந்தது. சிறுநூல் (குஜிலி) வெளியீடுகள்கூட இவற்றில் பெரும் பாலானவை சித்தர் பாடல்கள், முகப்புப் பகுதியில் 'பரிசோதித்து' அல்லது 'பிழையறப் பரிசோதித்து' வெளியிடப் பெற்றது என்ற குறிப்பினைத் தாங்கி வெளிவந்தன" - தொ.பரமசிவன் ('அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்' - 24.8.2000 - 'தமிழாராய்ச்சியின் வளர்ச்சி' ப.68-71-72)

இத்தொடர்பில் 'பரிசோதானாசிரியர்' பற்றி சி.வை.தா.தம் கலித்தொகைப் பதிப்புரையில் இனம்கண்டு முன்னிறுத்துவது இங்கே எண்ணத்தக்கதாகும்.

"இலக்கணக் கொத்துடையார், நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என வழுத்த மூவகை ஆசிரியரோடு யான் பரிசோதனையாசிரியரென இன்னுமொன்று கூட்டி, இவர் தொழில்முன் மூவர் தொழிலினும் பார்க்க மிகக்கடியதென்றும், அவர் அறிவு முழுவதும் இவர்க்கு வேண்டியதென்றும் வற்புறுத்திச் சொல்கின்றேன். தூக்கினாலன்றோ தெரியும் தலைச்சுமை? பரிசோதனாசிரியர் படும் கஷ்டமும் ஓர் அரிய பழைய நூலைச் சுத்த மனசாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டார்க்கன்றி விளங்காது. இவையெல்லாம் அனுபவத்தாலன்றி அறியப்படாப் பொருள்கள். ஒன்றிற்கொன்று ஒவ்வாத இருபது இருபத்தைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிகளையும் அடுக்கிக்கொண்டு எம் கண்காணச் சிந்தாமணி பரிசோதனை செய்து பதிப்பித்த கும்பகோணம் வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் உ.வே.சாமிநாதய்யரைக் கேட்டால் இந்த நால்வகையாசிரியர் தாரதம்மியம் சற்றே தெரியலாம். எனக்கு அவரும் அவருக்கு நானும் சாட்சி" சி.வை.தாமோதரம்பிள்ளை ('கலித்தொகை' சி.வை.தா.பதிப்பு முன்னுரை)

'புலமிக்காரைப் புலமை தெரிதல் புலமிக்கார்க்கே புலனாகும்' என்னுமாறு இவை உ.வே.சா.வுக்குச் சி.வை.தா.வும், சி.வை.தா.வுக்கு உ.வே.சா.வும் சாட்சிகளாகும் சான்றாதாரங்கள். மூலபாட ஆய்வின் இவ்விருவர் தார-தம்மியங்களை ஒப்பாய்வு செய்து மதிப்பிட்டுரைக்கும் ஒரு கணிப்பீடும் இங்கே மனங்கொள்ளத்தக்கதாகும்.

"(உ.வே.சா.வின்) மூலபாட ஆய்வு யாந்திரீகமயமாக ஏட்டுப் பிரதிகளைச் சேகரித்தல், ஒப்பு நோக்கல், ஒப்புமைப் பகுதியாகக் குறிப்பிடுதல் என்ற முறையில் அமைந்துவிட்டது. சுருங்கச் சொன்னால் மூலபாடத் திறனாய்வை ஒரு நெறிமுறைப் பயிற்சியாகவோ, சாஸ்திரமாகவோ, அறிவியல் துறையாகவோ அவர் (உ.வே.சா) கருதவில்லை. அதற்குத் தேவையான பயிற்சியும் அறிவும் அவருக்கிருந்தன என்றும் கூறுவதற்கு இல்லை. அவரது பின்னணி அதற்கு இடமளித் திருக்காது. ஆனால் சி.வை.தாமோதரம் பிள்ளை மூலபாடத் திறனாய்வை முழுமையான ஆய்வுத்துறையாகக் கொண்டு செயல்பட்டவர். கால ஆராய்ச்சி, சரித்திர உணர்வு, ஒப்பியல் நோக்கு, திறனாயும் தன்மை ஆய்வறிவு நேர்மை, முறையியல் நுட்பம் ஆகியன அய்யரிலும் பார்க்கப் பிள்ளை யிடத்து அதிகமாகக் காணப்படுதல் தெளிவு."

"குறுகிய சிற்றுணர்ச்சிகளைக் கடந்த பெருந்தன்மை அவரிடத்து (அய்யரிடத்து)க் குறைவாகவே இருந்திருக்கிறது மாத்திர மென்று அவரது கல்வியின் தன்மையாலும் ஏற்பட்டதெனலாம். இவரோடு தாமோதரம் பிள்ளையை ஒப்பிடும்போது உன்னத பதிப்பாசிரிய இலக்கணங்கள் அனைத்தும் அவரிடம் பொருந்தியிருக்கக் காணலாம். இதற்கு முக்கியக் காரணம் பிள்ளையவர்கள் இளமைக் காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பொதுவாக யாழ்ப் பாணத்திலும் பின்னர் சென்னைப் பல்கலைச் சூழலில் ஆங்கில இலக்கிய ஆய்வாளர் தொடர்பாலும் பெற்ற மனப்பக்குவமே" க.கைலாசபதி ('ஈழத்து இலக்கிய முன்னோடிகள்')

நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என இலக்கணக் கொத்துடையார் வரையறுக்கும் மூவரைக் காட்டிலும் இன்னொன்றையும் கூட்டி உரைப்பதாக சி.வை.தா.முன்நிறுத்தும் பரிசோதனாசிரியர் தொழில் மிகக் கடிய தென்பதும் மட்டுமல்லாமல் முன்மூவர் அறிவு முழுவதும் பரிசோதனாசிரியர்க்கு வேண்டிய தென்றும், சுத்தமனசாட்சியோடு பரிசோதித்து என வலியுறுத்தியும் சி.வை.தா.எடுத்துரைப்பன ஆழமாக நாம் கருத்தில் இருத்த வேண்டியனவாகும்.

இத்தகைய பரிசோதனாசிரியர் தொழில் ஆகிய மூலபாட ஆய்வு எவ்வாறெல்லாம் வரையறுக்கப்படுகின்றது? இவ்வாய்வின் பயன்பாட்டில் எழுந்த முதல் நூல் யாது? இதனை எவ்வாறெல்லாம் வளர்நிலைகளாகப் பகுத்துரைப்பர்? இத்தகைய கேள்விகளுக்கு இனி விடைகாண முற்படுவோம்.

"ஏடுகளின் குடிவழியை (Genealogical tree) ஆராய்வது, ஏடுகளை அறிவியல் ஆய்வு முறைப்படி ஒப்பிடுவது முதலிய ஆய்வு முறைகளால் ஏடுகளின் முதன்மையான மூலத்தை (Archetypical) உறுதிப்படுத்திப் பதிப்பதுதான் மூலபாடத் திறனாய்வாகும்" - க.பஞ்சாங்கம் ('தமிழிலக்கியத் திறனாய்வு வரலாறு')

மூலபாடத் திறனாய்வு என்ற தொடர் முதன்முதலில் ஆளப்பட்டது 1784இல் வெளியிடப்பட்ட ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில்தான். அவ்வகராதியில், அத்தொடருக்கு,

'ஆசிரியரால் இயற்றப்பட்ட மூலத்தில், பிற்காலத்தில் நிகழ்ந்த மாசுகளை நீக்கி, அம்மூலத்தின் உண்மையான பொருளை நிச்சயித்து மூலத்தை நிலை நிறுத்தல்'

என விளக்கம் கூறப்பட்டுள்ளது." - அ.விநாயகமூர்த்தி ('அய்வர் அம்மானை' - ப.7)

மூலபாட ஆய்வின் நான்கு நிலைகளாக (1) சாசனஆய்வு, (2) நிலை பெறுத்தல், (3) பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சி, (4) பாடத்திருத்தம் எனவும்; (1) கீழ்நிலைத் திறனாய்வு, (2) மேல்நிலைத் திறனாய்வு, (3) வாயில்களின் திறனாய்வு என்றதன் வளர்நிலைகளின் அடிப்படையிலேயே இன்னொரு வகையாகவும்; ஜீன்போலண்ட் முதலான அறிஞர் கூறியதற்கு மறுப்பாக ஜீன்மா பில்லன் 1681இல் வெளியிடப்பட்ட 'சாசனவியல்' என்ற நூலே இத்துறையில் விரிவாக ஆராய்ச்சி செய்யப்பட்ட முதல் நூல் எனவும் விளக்கிச் செல்வார் விநாயகமூர்த்தி.

மூலபாட ஆய்வின் மீதான என் கவனமீக்கூரலுக்குக் களனமைத்துக் கொடுத்தது க.பஞ்சாங்கத்தின் சுட்டிக்காட்டலே:

"புதுமைப்பித்தன் கதைகளைப் பற்றி அழகான மொழியில் திறனாய்வு செய்துள்ள பொதியவெற்பன் உட்பட, புதுமைப் பித்தனைப் பற்றி ஆய்வு செய்த பலரும் மாப்பசான் கதைகளைப் புதுமைப்பித்தன் கதைகளாகக் கொண்டு புதுமைப்பித்தன் படைப்பாற்றலைப் பலவாறு வியந்து எழுதியுள்ளார்."

- க.பஞ்சாங்கம் (தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு)



புதுமைப்பித்தன் பற்றிய ஆய்வே என் முதல் நூல். எனது மாணவப் பருவத்திலான அவ்வாய்வு அப்பிரமாண்டத்தின்முன் புருவம் விரிய வியந்து நின்ற போதில் எழுதப்பட்டது. அப்போது நான் மாப்பசானைப் படித்தறியேன். எனக்குக் கிடைத்த பதிப்பில், மாப்பசான் கதைகள் புதுமைப்பித்தன் கதைகளாக இடம்பெற்றிருந்தன. அதற்குப் பின்னர் என் மூலபாட ஆய்வுப் புரிதல்களுக்கு அப்பால் 'புதுமைப்பித்தன் - ராமரத்தினம்' (இருவரும் முன்னும்பின்னுமாக) எழுதிய ஹிட்லர் வரலாறான 'கப்சிப் தர்பாரை' நான் பதிப்பித்தேன். அதன் மீதான மதிப்பீட்டில் புதுமைப்பித்தன் எழுத்தாக ராமரத்தினத்தின் எழுத்தை வேதசகாய குமார் பிறழ மயங்கிய போது, மூலபாட மேனிலைத் திறனாய்வு நோக்கில் 'காலச்சுவட்டில்' மறுத்தெழுதி நிறுவினேன். (கருத்தியல் மற்றும் நடை வேறுபாடுகள் வாயிலாக). அதன்பின்னர் உவேசாவின் 'என் சரித்திர'த்தில் கி.வா.ஜா.வின் இடைச்செருகல்கள் பற்றியும், சி.வை.தா-உ.வே.சா.மூலபாட முறையியல் குறித்து முற்சுட்டிய என் நூலிலும், கட்டுரையிலும் விரிவான ஆய்வுகளை முன்வைத்துள்ளேன்.

'IJ' என்னும் குறியீட்டுப் பெயரில் புதுவை முரசு இதழில் எழுதப்பெற்று 'மானுடம்போற்று' தொகுப்பில் சேர்க்கப் பெற்றுள்ள கட்டுரைகள் பாரதிதாசன் எழுதியவை அல்ல. குத்தூசி குருசாமி (insection) எழுதியவை என்பது கண்டறியப்பட்டுள்ளது. 'கிறுக்கன்' என்னும் புனைப்பெயரில் வெளிவந்த கட்டுரைகள் பாரதிதாசன் எழுதியவை, குத்தூசி குருசாமி எழுதியவை அல்ல என்பதும் நிலைநிறுத்தப் பெற்றுள்ளது" (ப.131)

ஓலைச்சுவடிகள் அச்சுருப்பெற்ற அன்றைய காலச்சூழலின் பதிப்புப்பணிக்கு மட்டுமல்லாமல், இன்றைய கணினி ஊழியின் பதிப்பு முயற்சிகளிலும்கூட மூலப்பாடப் பதிப்பு முறைமிகவும் இன்றியமையா ஒன்றேயாம். குறிப்பிட்ட நூலின் பல்வேறு பதிப்புகளுக்கூடாக ' பாடாந்தரந்தேரும் தள ஆய்வுகள்' வாயிலாகவே விமர்சனப் பங்களிப்புகளை வளர்த்தெடுக்க இயலும். மூலபாடப் பதிப்புகளால் இருண்ட பகுதிகளுக்குள் புது வெளிச்சம் பாய்ச்சப் படுதலும், சரியான தரவாதாரங்களாலும் மூலபாடத் தெரிவாலும் முந்தைய பிழையான நிலைப்பாடுகள் தகர்ந்து போதலும்; இவ்வாறாக ஆய்வின் தொடரோட்டம் முன்னெடுக்கப்படுதலும் விளைபயன்களாகும். மூலபாட ஆய்வுத்துறையில் கலிபோர்னியாப் பல்கலைக்காக ஜான்டிரைடன் நூல்களைப் பதிப்பிக்க முயன்றபோது விண்டன் ஏ.டியரிங் பாட வேறுபாடுகளைக் குறித்தல், மெய்ப்பாக்கம் (பிழைத்திருத்தம்) செய்தல், சொற்பட்டியல் இடுதல், ஏடுகள் அல்லது பதிப்புகளின் குடிவழிமுறைகளை உருவாக்கல் ஆகிய வகைகளிலும் கணிப்பொறியைக் கையாண்டதை விளக்குவார் விநாயகமூர்த்தி.

"நம்மிடையே பாடாந்தரத் திறனாய்வு இன்னும் தொடங்கவேயில்லை. செய்யப் படுவனவும், சங்க இலக்கியங்கள், மத்தியகால இலக்கியங்கள் பற்றியனவாகவே உள்ளன. தாற்கால இலக்கியங்களில் பாரதி, பாரதிதாசன் போன்றோரைப் பூரணமாக விளங்கிக் கொள்வதற்குப் பாடாந்தரத் திறனாய்வு அத்தியாவசியம். இத்தகைய தள ஆய்வுகள் இல்லாமல் இலக்கிய விமர்சனம் வளரமுடியாது."

- கார்த்திகேசு சிவத்தம்பி ('அய்வர் அம்மானை', ப.5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய புரிதல்களின் வெளிச்சத்தில் நோக்கத் தலைப்படும் போதுதான் 'பாலையில் ஓர் அருங்சுனை'யாய் நமக்கு வாய்த்திருக்கும் ய.மணிகண்டனின் தொகுப்பு, பதிப்பு ஆய்வு ஆகிய அருங்கொடைகளின் பெறுமதிகள் நமக்குப் புலனாகும்.

"கூப்பிட்டுச் சொன்னால் கும்பிட்டுக் கேட்கும்

யாப்புக்கு அதிகாரி யமணிகண்டன்"

"இரண்டாவது உ.வே.சா.என ய.ம.வை நான் மதிக்கக் காரணம், அவருடைய பதிப்புத்திறன், பாடபேத ஆய்வு, மொழி அறிவு எல்லாவற்றையும் இவர் கொண்டிருப்பதோடு - ஆசையோடு கூடிய ஈடுபாடும், அயரா முயற்சியும் அப்படியே இவரிடம் இருப்பதுதான்" - ஈரோடு தமிழன்பன் ('பாரதிதாசனின் வண்ணப் பாடல்கள்' முன்னுரை ப.6)

'எழுகபுலவ!' என பாரதிதாசனை நமக்கு அறிமுகப்படுத்திய பாரதியைப் போலவே, தம்மாணவனை நமக்கு அறிமுகப் படுத்துகின்றார் தமிழன்பன். நூலாசிரியராகவும், தொகுப்பாசிரியராகவும், பேராசிரியராகவும் விளங்குவதோடு சுத்த மனசாட்சியோடு பரிசோதிக்க வல்ல பரிசோதனாசிரியராகவும் திகழ்வதே ய.ம.வின் தனிச்சிறப்பாகும். பாரதியியல் ஆராய்ச்சிப் பதிப்பாளர் சீனி.விசுவநாதனை ய.ம.'பாரதிக்கு அமைந்த உ.வே.சா.' என்னுமாப்போலே அவரைப் 'பாரதிதாசனுக்கு அமைந்த சி.வை.தா.' என்பேன் நான்.

ய.ம.வின் தொகுப்பும் பதிப்புமாக முதன்முதல் வெளிவந்த நூலே பாரதிதாசன் வண்ணப்பாடல்கள் (1995) ஆகும். அதன் முகவுரையிலேயே பாடபேதங்களை எடுத்துக் காட்டியும், அறிஞர்களிடம் கலந்தாலோசித்தும், தாமே துணிந்தும் மூலபாடத்தை உறுதி செய்தது பற்றி முன்வைக்கின்றார்.

"முற்பதிப்புகளை ஒப்பிட்டுச் சரிசெய்ய வாய்ப்பின்றி முதற்பதிப்பிலிருந்தே தொடர்ந்து கொண்டிருக்கும் சில (அச்சு-பதிப்புப்) பிழைகளும் உள்ளன. (சந்தமும் பொருளுங்கெடுவதால் இந்த இடங்கள் பிழையானவை என அறியப் பட்டன) அவை, அறிஞர்தம் ஆலோசனையுடன் இந்நூலில் சரிசெய்யப்பட்டுள்ளன"

"பழைய இலக்கியங்களுக்குத்தான் பாடபேதங்கள் தோன்றும் என்றில்லாமல், அண்மைக் காலத்தில் வாழ்ந்து மறைந்த பாரதிதாசனின் கவிதைகளிலும் பல பாட பேதங்கள் தோன்றியுள்ள மையைப் பல பதிப்புகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் அறிய முடிகின்றது. அப்பாட பேதங்களுள் சில மேலோட்டமாகப் பார்த்தால் பொருத்தமானவையாகவே தோன்றுகின்றன. பொருள் அடிப்படையில் மட்டுமன்றி யாப்பு முதலான இலக்கண அடிப்படையிலும் ஆழ்ந்து நோக்குகையில்தான் உண்மையான பாடத்தை உறுதி செய்ய முடிகின்றது" ய.மணிகண்டன் (பாரதிதாசன் வண்ணப் பாடல்கள் ப.13-14)

இத்தொடர்பில் சி.வை.தா.வின் பதிப்பு முறையியல் குறித்து 'சி.வை.தா. சரித்திர' நூலாசிரியர் கணித்துரைப்பது இங்கே எண்ணத்தக்கது. இதன் குறிப்புகள் சில சி.வை.தா.வின் முறையியல் தாக்கம் ய.ம.வின் பதிப்பு முறையியலிலும் ஊடாடிக் கிடப்பதை நமக்குணர்த்தக்கூடியன.

"பிள்ளையவர்களுக்குச் சந்தேகம் பிறந்துழியெல்லாம் பெயர் போந்த வித்துவான்களை வினவியும், அயனூற்றுணிபுகள் மேற்கோள்களோடு சீர்தூக்கியும் இன்னும் ஐயமறுத்துக் கொள்ளாத விடங்கள் பலவுளவென்று அவர்தாமே கூறியிருக்கின்றனர். பிரதிகளின் சுத்த ரூபத்தையே எல்லாற்றானும் தழுவியும், அப்பிரதிகளனைத்தையும் மாறுகொண்ட வழி அம்மாறு பாடுகளனைத்தையும் ஒருங்கே நிரைத்தும், யாதுங் கண்டாங் கிடந்தராது எழுத்தழிந்து சிதைந்த வழி அவ்வாறிருத்தல் வேண்டுவன என்று தஞ்சுயமதி கொண்டு நாட்டியும், கரலிகிதங்களாவேற்பட்ட வழூஉக்களை யோட்டியும் பிரசுரித்த இந்நூலினருமை (தொல்காப்பியம் பொருளதிகாரம் (நச்சர்) பதிப்பு) செந்தமிழமுதம் பருகியவற்கன்றோ தெரியும்" - எஸ்.காராளசிங்கம் (முற்சுட்டிய சி.வை.தா. சரித்திரம்.)

பொருள் அடிப்படையில் மட்டுமன்றி யாப்பு முதலான இலக்கண அடிப்படையிலும் ஆழ்ந்து நோக்குகையில்தான் உண்மையான பாடத்தை உறுதி செய்ய முடிகின்றது என ய.ம.குறிப்பிடுவது முகாமையானது. எந்த



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாப்பிலவர் எழுதிய போதிலும் அவை செய்யுள்களாகத் தேங்கிவிடாமல் பெரும் பாலும் கவிதையாகக் கனிந்த கவித்துவப் பாங்கென்பது பாரதிதாசனின் தனிச்சிறப்பான கொடை எனிலது மிகையாகாது.

'யாப்பியல்' எனும் வகையில் ய.ம.வின் பங்களிப்புகள் (1) பாரதிதாசன் வண்ணப் பாடல்கள் (1905), (2) தமிழின் யாப்பிலக்கண வளர்ச்சி (2001), (3) ஒளிந்திருக்கும் சிற்பங்கள் (குறள் வெண்பாத் தொகுதி - 2003), (4) பாரதிதாசன் யாப்பியல் (2004), (5) சி.வை.தா.இயற்றிய கட்டளைக் கலித்துறை (2005), (6) நேரிசை வெண்பா இலக்கியக் களஞ்சியம் (2006) எனத் தொடர்கின்றன. இவ்வகையில் தி.வீரபத்திர முதலியார் பற்றிப் 'பரவலாக அறியப்படாத தமிழ் யாப்பியல் ஆராய்ச்சி முன்னோடி' எனக் காக்கைச் சிறிகினிலே (பிப்-2013) கட்டுரையும் ஓர் அபூர்வமான கொடையேயாகும்.

> "தமிழ் ஆராய்ச்சியின் தவிர்க்க முடியாத முதன்மையான புலம் 'தமிழ்யாப்பியல்' என்பதைத் தமிழாராய்ச்சியில் ஈடுபட்ட அயலவர்கள் உணரும் அளவிற்குக்கூட நம்மவர்களில் பலரும் உணரவில்லை"- ய.மணிகண்டன் ('காக்கைச் சிறகினிலே' பிப் 2013)

சி.வை.தா.வின் முன்னோடித் தகைமையை அறியொணாமல் உ.வே.சா. விலிருந்து பதிப்பாசிரியர் வரலாற்றைக் காணப்புகும் வெங்கட்சாமிநாதன், 'நாணயம்' சீனிவாசன், ஜெயமோகன் வகையறாவினரைப் போல் தமிழ்யாப்பு குறித்த ஆய்வில் தி.வீரபத்திர முதலியாரின் முன்னோடித் தகைமையை அறியொணாமல் அ.சிதம்பரநாதரிடமிருந்து தொடங்கும் மூத்த பேராசிரியர்களின் கல்வி வளாகச் சூழலை அக்கட்டுரையில் எடுத்துரைக்கின்றார். இவை யாவற்றையும் குறித்த ய.ம.வின் யாப்பியல் கொடைகள் விரிவாகப் பேசப்பட வேண்டியனவே. என்றாலும் இங்கே யாப்பியலைக் கைவந்த கலையாகக் கையாண்ட பாரதிதாசன் வண்ணப் பாடல்களின் உண்மையான பாடத்தை உறுதிப்படுத்த பாரதிதாசன் யாப்பியலை வழங்கிய ய.ம.வின் யாப்பியல் புலமை உறுதுணையாவதை இனம்காணும் அளவில் மட்டுமே எடுத்துரைக்க நேர்ந்தது. ■




# பாராட்டு விழா

2013 ஆம் ஆண்டு
'கொற்கை' நாவலுக்காக
சாகித்ய அகாதமி
விருது பெற்ற எழுத்தாளர்
திரு. **ஜோ டி குரூஸ்** அவர்களுக்கு

நாள் : 16.02.2014 ஞாயிற்றுக்கிழமை
காலை 10 மணி
இடம் : பூ.ச.கோ. பொறியியல் கல்லூரி
'D' அரங்கம், கோவை.

**நிகழ்முறை**
வரவேற்புரை : மு.வேலாயுதம்
தலைமை :
எழுத்தாளர் திரு. நாஞ்சில் நாடன்
நூல் அறிமுகவுரை :
எழுத்தாளர் திரு. க.வை. பழனிச்சாமி
வாழ்த்துரை :
எழுத்தாளர் திரு. பெருமாள் முருகன்
எழுத்தாளர் திரு. பவாசெல்லத்துரை
ஏற்புரை : எழுத்தாளர் திரு. ஜோ டி குரூஸ்

வரவேற்று மகிழ்கிறோம்
அனைவரும் வருக!

**விஜயா பதிப்பகம்**
கோவை - 640 001.
தொடர்புக்கு : 2382614, 2385614


## அறிவிப்பு

**ஜோ டி குரூஸ் எழுதும்**
**"வேர்பிடித்த விளைநிலங்கள்"**
**அடுத்த இதழில் வரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா.அமரேசன் பதிவுகள்

# ஊருக்கு வளங்களும்.... சேரிக்கு சலுகைகளும்...

இரண்டாயிரம் ஆண்டுக்கும் மேற்பட்ட இந்துச் சமூகக் கட்டமைப்பில் சாதி இறுகிப்போய் தன்னுடைய கட்டமைப்புகளை மேலும் இறுக்கிக் கொண்டேதான் வந்திருக்கின்றது. ஆயினும் சாதிய பாகுபாடற்ற ஒரு சமூகக் கட்டமைப்பை நோக்கி நகர்த்தும் பணியும் இதே காலத்தில் பற்பல பரிமாணத்துடனே தொடர்ந்து நடந்து கொண்டேதான் இருக்கின்றது. இதுதான் இந்திய வரலாறு.

இவ்வரலாற்றை இன்னும் சுருக்கமாகச் சொல்வதென்றால் ஒரு தீண்டப் படாதவனுக்கும் தீண்டப்படுபவனுக்குமான தொடர் உரிமைப் போராட்டம். இதில் தீண்டப்படுபவன் கையில் பொருளாதாரம் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கின்றது. தீண்டத்தகாதவனிடம் பொருளாதாரம் சென்று சேராவண்ணம் சாதிய சமூக அமைப்பு கண்காணித்துக் கொண்டேயிருக்கின்றது.

ஊரென்றும் சேரியென்றும் பிரிந்து கிடக்கும் இந்திய சமூகக் கட்டமைப்பில் எல்லா வளங்களும் ஊருக்கென்றும் ஊர் மக்கள் அளிக்கும் பிச்சை அல்லது சலுகைகள் மட்டும் சேரிக்கென்றும் அதைத் தவிர்த்து எந்த நிலையிலும் சமபங்கு என யாரும் கேட்டு விடாத நிலையில்தான் நாம் காலம்காலமாக வளர்க்கப்பட்டிருக்கின்றோம் அல்லது வார்க்கப் பட்டிருக்கின்றோம்.

**வேதகாலத்தில் தீண்டப்படாத மக்களின் நிலை**

இந்திய கிராமத்தில் தீண்டத்தகாதவர்களின் வாழ்க்கை நிலை எந்த நிலையில் உள்ளது மேலும் அவர்கள் எத்தகைய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு வாழ்க்கையை நடத்துகின்றனர் என்பதை புரட்சியாளர் அம்பேத்கர் இவ்வாறு விளக்குகின்றார்.

தீண்டாதவர்கள் இந்துக்கள் வசிக்கும் இடத்துக்கு அப்பால் தனியான பகுதிகளில் வசிக்க வேண்டும். இவ்வாறு பிரித்து வைக்கும் விதியை மீறுவது குற்றமாகும்.

தீண்டாதோர் வசிக்கும் பகுதிகள் தெற்குத் திசையில் இருக்க வேண்டும். ஏனென்றால் தெற்குதான் நான்கு திசைகளில் மிகவும் அமங்கலமானது. இந்த விதியை மீறி நடப்பது குற்றமாகக் கருதப்படும்.

தீண்டாதவர்கள் தீட்டு ஏற்படுத்தும் தூரம் அல்லது நிழல் தீட்டு பற்றிய விதியைப் பின்பற்ற வேண்டும். இந்த விதியை மீறுவது குற்றமாகும்.

தீண்டாத சமுதாயத்தில் உறுப்பினர்கள் நிலம், கால்நடைகள் போன்ற செல்வங்கள் சேர்ப்பது குற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீண்டாத சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஓட்டுக் கூரை உள்ள வீடு கட்டுவது குற்றம்.

தீண்டாத சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சுத்தமான உடை உடுப்பது, ஷூ அணிவது, கைக்கடிகாரம் அல்லது தங்க நகை அணிவது குற்றம்.

தீண்டாத சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கம்பீரமாக ஒலிக்கும் பெயர்களை வைப்பது குற்றம். அவர்களின் பெயர்கள் இகழ்ச்சியைக் குறிப்பனவாக இருக்க வேண்டும்.

தீண்டாத சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு இந்துவின் முன்னால் நாற்காலியில் உட்காருவது குற்றம்.

தீண்டாத சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கிராமத்தின் வழியே குதிரை மீதோ பல்லக்கிலோ அமர்ந்து செல்வது குற்றம்.

தீண்டாத சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கிராமத்தின் வழியே ஊர்வலத்தை நடத்திச் செல்வது குற்றம்.

தீண்டாத சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இந்துவுக்கு வணக்கம் தெரிவிக்காமலிருப்பது குற்றம்.

தீண்டப்படாத சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பண்பட்ட மொழியொன்றைப் பேசுவது குற்றம்.

தீண்டாத சமுதாயத்தைச் சேர்ந்தவர் யாரேனும் இந்துக்கள் உண்ணாவிரதமிருக்கின்ற புனித நாளிலும், உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டு உணவு உண்ணப்போகும் நேரத்திலும் அல்லது உணவு உண்ணும் நேரத்திலும் கிராமத்திலும் செல்ல நேர்ந்தால் பேசிக் கொண்டு செல்வது குற்றமாகும். ஏனென்றால் அவர்களின் மூச்சு, ஊரின் காற்றையும் இந்துக்களின் உணவையும் மாசுபடுத்துவதாகக் கருதப்படுகிறது.

தீண்டாதவர் ஒருவர், தீண்டத்தக் கனவான புறச்சின்னங்கள் எதையும் அணிந்து தம்மை தீண்டத்தக்கவர் போல காட்டிக் கொள்வது குற்றம்.

இந்த விதிமுறைகள் யாவும் தீண்டப் படாதவர்களின் பொருளாதாரத்தையும் சமூகத்தில் அவர்கள் சேர்ந்து வாழும் முறையையும் தடுக்கும் விதத்திலேயே இருப்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**சங்க காலத்தில் தீண்டப்படாத மக்களின் நிலை**

துடியன் பாணன் பறையன் கடம்பன் இந்த நான்கு குடிகள் இல்லாது குடிகள் இல்லை என்று தொல்காப்பியத்தில் சொல்லப் பட்டிருந்தாலும் இதனுடைய உள்நோக்கை பார்க்கும்போது இழிநிலையில் இருந்த இந்த சமூக மக்களை இழிநிலையில் பார்க்கக்கூடாது என வலியுறுத்தவே எழுதப்பட்ட ஒன்றாக எடுத்துக் கொள்ள வேண்டிய தேவையிருக் கின்றது. மேலும் இவர்கள் போர்க்களத்தில் இறந்த வீரர்கள் மற்றும் அரசர்களின் இறுதிச் சடங்கை செய்யும் மக்களாகவே சங்க இலக்கியத்தில் வரையறுக்கப்பட்டிருக் கின்றனர். அதிலும் போர்க்களத்தில் இறக்கும் வீரனின் அல்லது அரசனின் தலையில் உள்ளவைகள், ஒரு சாதிக்கு என்றும், தோளில் உள்ளவைகள் இன்னொரு சாதிக்கும் எனவும், கைகளில் உள்ளவை ஒரு சாதிக்கு என்றும், கால்களில் உள்ளவை ஒரு சாதிக்கு என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது

போர்க்களத்தில் செத்துமடியும் ஒரு போர் வீரனிடமோ அல்லது அரசனிடமோ என்ன இருக்கும். போர்க்களத்தில் சண்டையிட தேவைப்படும் கருவிகள் மட்டுமே இருக்கும். அதை சொந்தம் கொண்டாடுவதற்காகவே இந்த நான்கு சாதிகளும் போர்க்களத்தில் பிணங்களை எரியூட்டும் வேலையைச் செய்து கொண்டு வந்திருக்கின்றன. இவற்றிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியவை வேறு வேலை வாய்ப்புகள் இவர்களுக்கு மறுக்கப் பட்டதாலோ என்னவோ போர்க்களத்தில் பிணங்களுடன் தங்களுடைய வாழ்வை பிணைத்துக் கொண்டது.

இதுவே நீட்சி பெற்று போர்க்காலம் இல்லாத காலத்தில் நிகழும் மரணத்தையும் போரில் இறந்தவனாகவே பாவித்து மார்பைக் கீறி சுடுகாட்டில் புதைக்கப்பட்ட வரலாற்று சம்பவத்தோடு பிணைந்து போகின்றது. சங்க காலத்திலேயே தலித்துகள் தொண்டூழியம் செய்யப் பிணத்துடன் பிணைக்கப் பட்டிருந்தனர். இப்போதும் எங்கு மரணம் நிகழ்ந்தாலும் அதை அடக்கம் செய்ய தலித்துக்கள் தேவைப்படுகின்றனர்.

அரசிடமிருந்து அல்லது அரசாங்கத்திட மிருந்து நிரந்தர வருமானம் வரும் வேலை களையும், சேவைகளையும் பிற சாதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பற்றிக் கொண்டு வருமானம் இல்லாத இழிவான வேலையான பிணத்துடன் தலித்துகள் பிணைக்கப்பட்டதால் தலித்து களுக்கான பொருளாதார கட்டமைப்பு சங்க காலத்திலேயே கடைநிலையில்தான் இருந்திருக்கின்றது.

தொல்காப்பியர், முதல்குடி என்று குறிப்பிடும் இந்த நான்கு சாதிகளும் போர்க்களத்தில் சண்டையிட்டதை சங்க இலக்கியமும் வரலாறும் உறுதி செய்யவில்லை. ஆயினும் மற்ற சாதிகள் போர்க்களத்தில் சண்டையிட்டதை பெருமைபடப் பேசுகின்றனர். அதன்வழியாகவே எல்லா வளங்களும் மற்றவர்களுக்கு வந்து சேர்ந்து இருக்கின்றது? (விளிம்பு மையம் மொழி நெய்தல் வெளியீடு)

### பிற்கால அரசர்கள் காலத்தில் தீண்டப்படாத மக்களின் நிலை

அரசர்களின் காலத்தில் நாட்டில் இருந்த நிலம் 3 வகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

1) பண்டார நிலங்கள்: முழுவதும் அரசனுக்குச் சொந்தமானது.

2) அமர கிராமங்கள்: இவர்கள் விளைச்சலில் பாதியை அரசனுக்குத் தர வேண்டும். மேலும் படை வீரர்களைப் பராமரித்து தேவைப்படும்போது அரசனுக்கும் வழங்கிட வேண்டும்.

3) மான்ய கிராமங்கள் :

அ) பிரம்மதேயம்: பிராமணர்களுக்குத் தானமாக வழங்கப்படுவது

ஆ) தேவதேயம்: கோயில்களுக்குத் தானமாக வழங்கப்படுவது

அ) மடப்புரம்: மடங்களுக்குத் தானமாக வழங்கப்படுவது

இவ்வகையான நிலங்களில் விவசாயக் கூலிகளாகவும் பண்ணை அடிமைகளாகவும் தலித்துகள் குறிப்பாக பறையர்களும் பள்ளர்களும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவர்களுக்கு குறைந்த கூலியே கொடுக்கப் பட்டிருக்கின்றது. தாங்கள் வேலை செய்யும் இடத்திலேயே விவசாயத்துக்குப் பயன்படாத நிலத்தில் குடிசைகட்டிக் கொண்டு வாழ அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு அவர்கள் குடிசை போட்டு வாழ்ந்து இருக்கும் நிலங்களில் வீட்டுத் தோட்டங்கள் அமைத்து காய்கறி பயிரிட்டாலும் அது அந்த பண்ணை உரிமையாளருக்கே சொந்தம்.

இதனைத் தவிர்க்கவே பூசனி, அவரை, சுரைக்காய் போன்ற கொடி வகைப் பயிர்களை அதிகமாக நட்டு அதனை பண்ணை முதலாளியோ மற்றும் அவரின் வேலைக் காரர்களோ பறித்துச் சென்றுவிடாமல் இருக்க அவர்கள் வசிக்கும் வீட்டுக் கூரையின் மேல் ஏற்றி விடுவார்கள். தலித்தின் வீட்டுக் கூரையின் மேலேறி காய்களைப் பறித்துக் கொண்டு செல்வது ஒரு வகையான தீண்டாமையாகப் பட்டதால் அவர்கள் வீட்டுக் கூரையின் மேலிருந்த செடிகொடிகளில் விளைந்த காய்களையே அவர்கள் உண்டு வாழ்ந்திருந்தனர்.

பண்ணை அடிமையாக இருந்த பறையனுக்கும், பள்ளனுக்கும் விளைச்சலில் 20 பங்கில் கால்பங்கு மட்டுமே கூலியாக வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. நிலத்தோடும், உழைப்போடும் நேரடித் தொடர்பிலிருந்த தலித் சாதியினருக்கு மிக மிகக் குறைந்த பங்கே வழங்கப் பட்டிருக்கின்றது.

1595 முதல் 1795 வரையிலான 200 ஆண்டுகளில் 25 முறை பெரும் பஞ்சங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பஞ்சங்களினால் பெருமளவு பாதிக்கப்பட்டவர்கள் தலித்துகளே. அதனால் பண்ணை அடிமை யிலிருந்து வெளியேறி வேறு தொழில்களில் ஈடுபட்டாலும் அரசர்களது படைகொண்டு அவர்களை அடக்கி மீண்டும் பழைய முறைப்படி பண்ணை அடிமையாக்கப் பட்டனர். (பள்ளு இலக்கியம் ஒரு சமூகவியல் பார்வை கோ.கேசவன்)

### ஆங்கிலேயர்களின் காலத்தில் தீண்டப்படாத மக்களின் நிலை

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் நிலவுடைமையின் வடிவம் மாற்றம் பெற்றது. ஆயினும் தாழ்த்தப்பட்ட மக்கள் பண்ணை அடிமைகளாகவே தொடர்ந்தனர். ஆங்கிலேய அரசு 1841 ஆம் ஆண்டு வெளியிட்ட சட்ட ஆணைக்குழுவின் அறிக்கை, மதுரை மாவட்டத்தில் 18 விழுக்காட்டினரும், நெல்லை மாவட்டத்தில் 38 விழுக்காட்டினரும், தஞ்சை மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களும் பண்ணை அடிமைகளாக இருந்ததை பதிவு செய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயேர் ஆட்சியில் பண்ணை அடிமைகள் தாங்கள் விரும்பும் எஜமானரிடம் அடிமையாக இருக்கும் வகையில் சில சட்டத் திருத்தங்களுடன் பண்ணையாள், படியாள் என்ற பெயர்களில் பண்ணை அடிமைகள் அழைக்கப்பட்டனர். ஆயினும் வறுமை நிலை தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. 1819ல் நெல்லையில் ஒருவன் தன்னை ரூ.32க்கு ஒரு மிராசுதாரரிடம் விற்றுக் கொண்டதையும், தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒரு குடும்பம் முழுவதுமே தங்களை ரூ.35க்கு விற்றுக் கொண்டதையும் அறிஞர் மூர்லேண்ட் பதிவு செய்திருக்கின்றார்.

1888இல் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிக்கையொன்றில் 'தொழிலாளர்கள் (பறையர்கள்) மிகக்கொடிதான இடத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அக்குடிசைகளில் திரும்புவதற்குக்கூட இடம் இல்லை. தங்கள் எஜமானர்களைத் திருப்திப்படுத்த தவறினால் அந்த இடத்திலிருந்து ஒட்டுமொத்தமாக வெளியேற்றப்படுவார்கள் என்றும் தொடர்ந்து 1889ல் இவர்களில் பெரும் பகுதியினர் ஒரு வேலை உணவுக்கே வழியில்லாமல் திண்டாடுகிறார்கள்; உடுத்துவதற்கு சரியான உடையில்லை; குடியிருப்பு வசதியோ மிக மோசமாக உள்ளது; வாழ்வதற்குத் தேவையான உணவாக மருத்துவர்களால் ஏற்றுக்கொள்ளப் படும் உணவின் அளவுக்கும் மிகக்குறைவான சத்துக்குறைந்த உணவை உட்கொண்டே மனநிறைவடைந்திட நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

**சுதந்திரத்திற்குப்பின் தீண்டப்படாத மக்களின் நிலை**

சுதந்திரம் அடைந்தபின் நாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் பலவாக இருந்தாலும், தலித்துகள் வாழ்க்கை நிலையில் எந்த வகையான மாற்றங்களும் நிகழவில்லை. 1991ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக் கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகையில் 19.18 விழுக்காடு தலித்துகள். தேசிய மக்கள் தொகையில் தலித்துக்களின் சராசரி 16.48 விழுக்காடு. நாட்டில் அதிகமான தலித் மக்கள் வாழும் மாநிலங்களுள் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. அடுத்ததாக பஞ்சாப் (28.31) இமாச்சல பிரதேசம் (25.34), மேற்கு வங்காளம் (26.32) உள்ளது. இன்றும் 80 விழுக்காட்டிற்கும் அதிகமான தலித் மக்கள் கிராமங்களில்தான் வாழ்ந்து வருகின்றனர்.

பண்ணை அடிமை என்னும் பெயர் மாறி பண்ணையாள் என்னும் பெயரும் மாறி இப்போது தலித்துகளை நிலமற்ற விவசாயக் கூலிகள் என்னும் பெயர் கொண்டு அழைக்கின்றனர். பெயர் மட்டுமே மாறி மாறி வந்திருக்கின்றதே ஒழிய நிலத்துடன் பிணைக்கப்பட்ட அவர்களின் வாழ்க்கை முறையில் எந்த வகையான மாற்றமும் இல்லை. 21.32 சதமானம் தலித் மக்கள் நகர்ப்புறங்களில் அமைப்பு சாரா தொழிலில் ஈடுபட்டு வாழ்ந்து வருகின்றனர்.

சுதந்திரம் அடைந்த பின் நில உச்சவரம்புச் சட்டம் அமலில் வந்த பிறகும், தலித்துக்களுக்கான நிலம் பகிர்ந்தளிக்கப் படாமல் உள்ள நிலையில், தமிழகத்தில் உள்ள சிறு மற்றும் குறுநடுத்தர நிலமுடையவர்களாக 11.3சதமான தலித் மக்கள் மட்டுமே உள்ளனர். தமிழக நிலப்பரப்பில் 7.1 சதமான நிலம் தலித்துக்களுக்குச் சொந்தமாக உள்ளது. 40சதமான தலித் மக்கள் கல்வியறிவு பெற்றுள்ளனர். இவற்றில் பள்ளி இடை நிற்கும் தலித் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

தலித்துக்களின் இறப்பு விகிதமும், தலித் பெண்களின் பேறுகால இறப்பு விகிதமும் 80 சதமானம். இன்றும் அதிக எண்ணிக்கையில் நிகழ்வதற்கு தலித்துக்களுக்கு உள்ள ஊட்டச்சத்து குறைபாடே காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

தலித் மக்களின் கல்வி விகிதம் 39.47 சதமானம். இது 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது மற்ற சாதியினரின் கல்வி விகிதமாக இருந்த ஒன்று. கல்வியைப் பொறுத்த வரை நாம் மிகவும் பின்தங்கி இருக்கின்றோம். தலித் பெண்களின் கல்வி விகிதம் 30 சதமானத்துக்கும் குறைவாகவே உள்ளது. பிற சாதிப் பெண் களின் கல்வி விகிதம் 50 சதமானத்துக்கும் மேலாக உள்ளது. பள்ளி இடை நிற்கும் விகிதம் தலித்துகளிடம் அதிகமாக உள்ளது.

அடிப்படை வசதிகளைப் பொறுத்த வரையிலும் தலித்துகளுக்கான குடிதண்ணீர் வசதி 70.85 சதமானம். மற்றவர்கள் 66.81 சதமானம். மின்சார வசதி தலித்துகளுக்கு 30.91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதமானமும், மற்றவர்களுக்கு 61.31 சதமானமாக உள்ளது. கழிப்பிட வசதி தலித்துகளுக்கு 9.84 சதமானமும், மற்றவர்களுக்கு 29.76 சதமானமாகவும் உள்ளது. (ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டம், 1997-2000)

சராசரி மாத வருமானம் தலித்துகளுக்கு 87.83 ரூபாய் கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கும், 113.50 ரூபாய் நகர்ப்புறத்தில் உள்ளவர்களுக்குமாக இருக்கின்றது. இதுவே மற்ற சாதியினருக்கு 119.94 ரூபாய் கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கும், நகர்புறத்தில் உள்ளவர்களுக்கு 170.30 ரூபாய் ஆக உள்ளது.

## பொருளாதாரத்தில் மீண்டெழுந்த விளிம்புநிலை சமூகங்கள்

இந்து மதக் கட்டமைப்பு பறையர், பள்ளர், அருந்ததியர், வண்ணார், இவர்கள் தொட்டால் தீட்டு என்று கற்பித்ததால் இவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள் என்றால், சாணார்கள் என்னும் மரமேறித் தொழில் புரிவோரைப் பார்த்தாலே தீட்டு என்று அவர்களது நடமாட்டத்தைக்கூட ஒதுக்கி வைத்திருந்தது. இன்னும் ஈழவ சாதி சமூக மக்கள் சுவாசித்த காற்று தம்மீது பட்டாலே தீட்டு என்று கற்பித்ததில் அவர்களையும் விலக்கி வைத்திருந்தது. ஆனால் இந்த இரண்டு சமூகமும் தங்களுக்கான மாற்றத்தை தாங்களே தான் செய்ய முடியும் என்பதை உணர்ந்து ஒரு சமூகத்தின் வளர்ச்சி என்பது ஒட்டுமொத்த சமூகத்தின் வளர்ச்சிதான் என்பதைப் புரிந்து கொண்டு இன்று பொருளாதாரத்தில் வளர்ந்து வரலாறாக நிற்கின்றன.

ஈழவசமுகம்: கல்வியைக் கை கொள்கின்றனர்; ஈழவ சாதியை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கூடாது எனப் போராடி பிற சாதியினர் பட்டியலில் சேர்த்துக் கொண்டனர்; அவர்களுக்குள்ளேயே எல்லா உறவுகளையும் வைத்துக் கொண்டனர்; நமக்கு நாமே என்னும் விதியின்படி தங்களுக்குத் தேவையானதையும் தங்களுடைய வளர்ச்சியையும் அவர்களே தீர்மானித்துக் கொண்டனர்; தங்களின் பாரம்பரியத் தொழிலை கைவிட்டு எல்லாத் தொழில் களிலும் தங்களை ஆர்வத்துடன் ஈடுபடுத்திக் கொண்டனர். பிறகு அந்த தொழிலையே சொந்தமாக செய்யத் தொடங்கிவிட்டனர்.

சாணார் சமூகம்: சாணார்களும் நாடார் என்னும் பொதுச் சாதியில் தங்களை இணைத்துக் கொண்டு தாங்கள் தாழ்த்தப் பட்டவர்கள் பட்டியலில் சேர மறுத்து விட்டனர்; தங்களின் பாரம்பரியத் தொழிலான மரமேறுதலை விட்டு விட்டு கிடைத்த எல்லா தொழில்களையும் செய்து அதில் வளர்ந்தனர்; தங்களுக்கு என்று சொந்தமான நிறுவனங்களையும், கோயில்களையும் உருவாக்கிக் கொண்டனர்; கல்வியைக் கை கொண்டனர். தனிநபராக முன்னேற முயலாமல் ஒட்டு-மொத்த சாதியையும் முன்னேற்றினர்.

## அரசு திட்டங்களும் அணுகுமுறைகளும்

சங்க காலத்தில் போரில் வீரமரணம் எய்துவது என்பது மறவர்களின் பங்கு. பறையனின் பங்கு என்பது இறந்த மறவனின் ஈமச்சடங்கை நிறைவேற்றுது. போரில் வெற்றி பெறும் மன்னன் நாட்டை சூறையாடுகின்றான். சூறையாடிய பொருள் பங்கிடப்படுகின்றது. இது மறவர்களைச் சேரும். ஆனால் மறவர்கள் பங்கிடப்பட்டதிலிருந்து பறையர்களுக்குத் தானம் கொடுக்க வேண்டும். பறையர்கள் தானம் பெறலாம். உரிமை கோரக்கூடாது. இழிவு என்பது எங்கே கட்டமைக்கப் பட்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நடப்பில் பறையர்களைப் பொறுத்தவரை அரசாங்கம் இன்றும் மறவனாகவே இருக்கின்றது. அரசு பறையர்களுக்கு தானம் கொடுக்கின்றது. உரிமை கொடுக்கவில்லை.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்கென மத்திய அரசும் மாநில அரசும் 1981 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு உட்கூறு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன. தற்போது இந்தத் திட்டம் சிறப்பு உட்கூறு துணைத் திட்டம் என்று அழைக்கப்படுகின்றது. அதன்படி மாநில அரசு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினை மக்களின் மேம்பாட்டிற்கு என ஒதுக்கீடு செய்யும் தொகைக்கு ஈடான தொகையை மத்திய அரசும் தொடர்ந்து வழங்கும்.

இந்த தொகையைப் பயன்படுத்தி தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின் மக்கள் மேம்பாட்டிற்கான திட்டங்களை வகுத்து அம்மக்களை பொருளாதார வளர்ச்சியடையச் செய்வதே நோக்கம். ஆனால் அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையாகச் செய்வதில்லை. ஏனென்றால் மாநில அரசு ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யும் தொகை சுமார் ரூ.2500 கோடி. அதற்கு ஈடாக மத்திய அரசும் 2500 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்கின்றது. இவ்வாறு ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும் 5000 கோடி பணம் எங்கு செல்கின்றது என்பதே எவருக்கும் தெரிவதில்லை.

பின் இந்தத் தொகை எங்குதான் செல்கின்றது. திட்டமில்லாத செலவுகளுக்குப் பயன்படுத்தப் படுகின்றது. அரசின் ஆடம்பர விழாக்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

ஒரு தேசிய வங்கியினை ஆரம்பிக்கத் தேவைப்படும் மூலதனம் வெறும் 300 கோடி ரூபாய் ஆகும். சிறப்பு உட்கூறு துணைத் திட்டத்தைப் பயன்படுத்தி ஆண்டுதோறும் 17 தேசிய வங்கிகளை ஆரம்பிக்கலாம்.

கிராமப்புற வங்கிகளை ஆரம்பிக்க 10 கோடி மூதலீடு தேவைப்படுகின்றது. சிறப்பு உட்கூறு துணை திட்டத்தைப் பயன்படுத்தி ஆண்டுதோறும் 500 கிராமப்புற வங்கிகளை ஆரம்பிக்க முடியும். இதன்மூலம் ஆண்டு தோறும் கிராமப்புறத்தில் இருக்கும் பல லட்சம் ஏழை எளிய மக்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும்.

ஏழை எளியவர்களுக்கு கடன் உதவி தரும் நுண்நிதி நிறுவனம் ஆரம்பிக்க 5கோடி முதலீடு தேவைப்படுகின்றது. அரசு சிறப்பு உட்கூறு துணை திட்டத்தைப் பயன்படுத்தி ஆண்டுதோறும் 1000 நுண்நிதி நிறுவனங்களை ஆரம்பித்து தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு கடன் உதவி அளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும்.

எப்போதும் ஒரு சமூக மக்கள் இரந்து முன்னேற முடியாது. மாறாக முனைந்துதான் முன்னேற வேண்டும். அவ்வகையான முனைந்து முன்னேறும் திட்டம் எதுவும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களிடமும் இல்லை, தலைவர்களிடமும் இல்லை. இப்போது தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்குத் தேவைப்படுவது இந்த மக்களை முனைந்து முன்னேற்ற தேவைப்படும் திட்டங்கள் மட்டுமே. இல்லையெனில் எத்தனை நூற்றாண்டுகள் கடந்தாலும் இவர்கள் ஏழைகளாக்கப்படும் ஏழைகளாகத்தான் இருப்பார்கள். ■

# கடிதம்

அன்புள்ள தாத்தாவிற்கு
பாட்டிக்கு ...
நீங்கள் முதியோர் இல்லத்தில்
நலமா?

வயோதிகத்தில் காப்பாற்றுவான்
என்ற உங்கள் நம்பிக்கையை
நடைபிணமாக்கிய என் தந்தை
நலம் ....

பணக்கார மருமகளும்
அரசுவேலை பார்க்கும் ...
என் அம்மாவும் நலம் ...

நான் மட்டும் நலமில்லை ...
பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்தால்
பூட்டிய கதவுகளே என்னை
வரவேற்கின்றன ....

ஆயா - காப்பியை தந்து
மாலை நேர வகுப்பிற்கு
அனுப்புகிறாள் ....

என் வெண்டை பிஞ்சு விரல் பிடித்து
வீதியில் நடந்தபடி
வீரக்கதைகள் சொல்ல நீ இல்லை
விளையாடி களைத்து வந்தபின்
தலையை கோதி
மடியில் போட்டுக்கொள்ள பாட்டி
இல்லை ....

தொலைக்காட்சி அலைவரிசைகளில்
பொம்மைகளோடு விளையாடி
நானும் பொம்மையானேன் ...

எங்கள் வீட்டில் அலங்கார
பொருள்கள் அதிகம் ...
அன்பு கிடைக்காமல் அவஸ்தைகளும்
அதிகம்

எதற்கும் இப்போதே
என் பெற்ற வர்களுக்கும்
உங்கள் முதியோர் இல்லத்தில்
இடம் கேட்டு வை ...
இந்த சூழலில் வளர்ந்தால் ..
நான் அவர்களை
அங்குதானே அனுப்ப முடியும் ...


அன்பு கிடைக்காத பேரன் ... ...

- மங்கையர்செல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பிஞ்சு மடல்கள்



காக்கைச் சிறகினிலே

நான் தே பிரித்தோ மேல்நிலைப் பள்ளியில் படிக்கின்றேன். நான் ஜனவரி மாதம் உள்ள காக்கை இதழை படித்தேன். அதில் திருமயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொல் பழங்கால பாறை ஓவியங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்த காலத்தில் பென்சில், மார்க்கர், பேப்பர் இருந்தே எவனும் ஒரு ஓவியம் கூட வரைவதில்லை. ஆனால் பழங்காலத்தில் ஒன்றும் இல்லாமல் கூட, பாறைகளில் வரைந்துள்ளார்கள் என்பது வியக்கத் தக்கது. இது போன்று உலகில் இன்னும் எத்தனையோ கண்டுபிடிப்புகள் மறைந்துகிடக்கின்றன. அதையும் நம் உலக மக்கள் கண்டுபிடித்து, காக்கை இதழில் பிரசுரம் ஆக எதிர்பார்த்து கொண்டு இருக்கின்றேன்.

— இ. ஆரோக்கிய மார்சலின்
தேவகோட்டை.




-1-

காக்கைச் சிறகினிலே


பாசமுள்ள எட்வின் ஐயாவுக்கு,

ஐயா வணக்கம். நான் தே பிரித்தோ மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் "பேனா முனை" ஆசிரியர் மார்சலின் பேசுகின்றேன். ஐயா இக்கடிதத்தில் முதன் முதலில், என் "பேனா முனை" இதழை உலகிற்கு அறிமுகப்படுத்தியதற்கும், காக்கை இதழில் பிரசுரம் செய்ததற்கும் என் நெஞ்சம் நிறைந்த கோடான கோடி நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன். ஐயா, ஜனவரி மாத காக்கை இதழில் மிக அழகாக கட்டுரை எழுதியுள்ளீர்கள். அதை படித்து நான் மகிழ்ந்தேன். ஐயா, எனக்கு புத்தகம் எழுதுவது மிகவும் பிடிக்கும். நான் எட்டாம் வகுப்பு படிக்கும் போது "அறிவுச்சுடர்", "நாங்கள் பாரதி" என்ற இதழை வெளியிட்டேன்.



-2-

பிறகு, ஒன்பதாகும் படித்து கொண்டிருக்கும் போது எங்களுக்கு வந்த தமிழ் ஐயா. திரு. அமலன் பெர்னாட்ஷா எங்களுக்கு நிறைய கவிதைகளை எழுத சொல்லிக் கொடுத்தார். அதுமட்டுமில்லாமல், மாணவர்களின் படைப்புகளை வேறு வேறு இதழுக்கு அனுப்பி வைப்பார். அதன் பிறகு தான் நாமும் ஒரு மாத இதழ் தயாரிப்போம் என்று எண்ணி, அதற்கான ஒரு இணை உண்டாக்கி ஆரம்பித்தேன். இந்த "பேனா முனை" என்ற இதழை N.S.M.P.U.S தலைமையாசிரியர் திரு. கணேசன் வெளியிட்டார். ஒரு மாதத்திற்கு ரூபாய் 500 செலவாகிறது. ஒரு மாதத்திற்கு 100 பிரதி அச்சடிக்கப்படுகிறது. என் இதழுக்கு பள்ளி நிர்வாகம் சிறந்த ஒத்துழைப்பு தருகிறது. நான் இதில் மட்டும் ஆர்வம் காட்டாமல் படிப்பிலும் ஆர்வம் காட்டுவேன். நான் இதுவரை வைத்த இரு தேர்விலுமே வகுப்பில் முதல் தரத்தில் உள்ளேன். கடைசியாக உங்க காக்கை இதழ் மேலும் வளரவும், என் "பேனா முனை" இதழை காக்கை



-3-

இதழில் பிரசுரம் செய்ததற்கும் என் உள்ளம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! நன்றி!! நன்றி!!!

இப்படிக்கு,
உங்கள் உண்மையுள்ள
மாணவன்,
இ. ஆரோக்கிய மார்சலின்

காக்கைச் சிறகினிலே

என்ற இதழ் மேலும் வளர வாழ்த்துகிறேன்...

எழுக! வளர்க!

ஜனவரி 2014 "காக்கையில்" இரா. எட்வின் எழுதிய
"வீட்டுக்கு ஒரு மரம் பள்ளிக்கு ஒரு இதழ்" கட்டுரைக்கு
தேவகோட்டை பள்ளி மாணவர்களிடமிருந்து வந்த மடல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மடல் திறப்பு

நெருக்கடிகளுக்கு மத்தியில் நடுநிலை மாறாமல், தனித்துவமான அடையாளங்களை இழக்காமல் தொடர்ந்து இயங்கும், காக்கையின் மூன்றாண்டு பயணம் ஊடகத்துறையின் நம்பிக்கை வெளிச்சம். காக்கை, மேலே....மேலே....உயரே....உயரே! இலக்கிய உலகின் இமயங்களை நோக்கி பயணிக்க சிறகாய் இருப்போம்.

**- தங்க.முருகதாசன், மயிலாடுதுறை**

கடந்த மூன்று மாதங்களாக காக்கைச் சிறகினிலே வாசித்து வருகிறேன். சனவரித் திங்கள் இதழ் பல அரிய தகவல்களைத் தந்திருக்கிறது. ஆய்விற்கு சுரங்கமாக புதைந்துக் கிடக்கும் புத்தகங்களை உள்ளடக்கிய தஞ்சை சரசுவதி மஹால் குறித்த தகவல், நம்மைக் குறித்து தொன்மையான செய்தி சொல்லும் திருமயம் பாறை ஓவியங்கள் என சீரிய தகவல்கள்.

**- கே.நிலாமுதீன், திருச்சி**

சாரோன் சிறுகதையில், "என்னோட வாழ்நாள் என்பது நான் உயிரோடு இருக்கிற நாட்கள் மட்டும் இல்லை. நீ என்னோடு இருக்கிற நாட்கள் மட்டுமே" என்று காதலின் உச்சத்தையும், "பறவைகளின் ஓசை எந்த இசைக்கருவிகளாலும் வாசிக்க முடியாத ராகங்கள், எந்த மொழி எழுத்துக்களாலும் விவரிக்க முடியாத பாடல்கள்" என்று சொல்லி படைப்பாளிகளின் கற்பனை உலகிற்கு எல்லையே இல்லை என்பதைக் காட்டிவிட்டார்.

**- எஸ்.மீனாட்சிசுந்தரம், சென்னை-16**

உப்புக்குழி மிக யதார்த்தமான உரையாடல்களைக் கொண்டு நகரும் நல்ல கதை. தோப்பில் மீரான், ஜாகிர்ராஜா வரிசையில் அர்ஷயா சையத்தும் இடம் பெறுகிறார். சிறு கதைகளை இன்னும் அதிகமாக்கலாம். யோசியுங்கள்.

**- வளவ.துரையன், கடலூர்**

காக்கைச் சிறகினிலே மூன்றாம் ஆண்டில் தடம்பதிக்கும் செய்தி மகிழ்ச்சிக்குரியது. சாரோன் சிறு க(வி)தை அபாரம். உப்புக்குழியின் கரிப்பு நெடுநாள் நீடிக்கும். தலைமுறைகள் இனிவரும் திரைத்துறைத் தலைமுறைகளுக்கோர் கலங்கரை விளக்கம்.

**- க.த.அ.கலைவாணன், வேலூர்**

திருமயம் பாறை ஓவியங்களைப் பற்றிய செய்திகள் அடங்கிய முனைவர் அருள்முருகனின் செவ்வி பல தரவுகளை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. தமிழின் தொன்மையான பாறை ஓவியங்களின் கண்டு பிடிப்பு, தமிழனின் பெருமையை மேலும் பறைச்சாற்றுவதாக அமைந்துள்ளது.

தஞ்சை சரசுவதி மகால் ஓலைச்சுவடிகளைப் பற்றிய கட்டுரை, மிகச் செறிவான விவரங்களை உள்ளடக்கியிருந்தது. ஓலைச்சுவடிகளின் வரலாறு; புஸ்தகங்களுக்குப் பெயர் வந்த விவரம்; வரலாற்றுப்பின்புலம்; நூலகங்களை அழித்த வரலாறு என்று இளவழகன் கட்டுரையில் அதகளம் செய்துள்ளார். பாராட்டுகள்.

**- சூர்யநிலா, சேலம்**

திருநெல்வேலி மாவட்டத்தில், சரஸ்வதி பூஜை அன்று, புத்தகங்களை அடுக்குவது, 'ஏடு அடுக்குவது' என்றும் மறுநாள் காலை அவற்றைப் பிரிப்பது, 'ஏடு பிரித்தல்' என்றும் சொல்லப்படுகிறது. இந்த சொற்பிரயோகத்தின் வேர் எங்கு உள்ளது எனத் தேடினால், 2014 ஜனவரி காக்கைச் சிறகினிலே இதழில், 'தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் ஒளிந்து கிடக்கும் ஓலைச்சுவடிகள்' என்கிற வி.அ.இளவழகனின் கட்டுரையை வாசித்தபோது, "முறையான நீள அகலம் கொண்ட பனை ஓலைத் துணுக்குகள், ஏடுகள் எனப்பட்டன" என்ற வரிகளில், அதற்கான வரலாறு துவங்குவதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

**- சு.இராமசுப்பிரமணியன், தோவாளை, கன்னியாகுமரி**



Owned and published by V.Muthaiah from 17/14, Diwan Rama Road, Purasaivakkam, Chennai - 600 084 and Printed by H.Dhanasekar at Sekar Offset Printers, New No. 50 (Old No. 168/1) Big Street, Chepauk, Chennai - 600 005. **Editor : V.Muthaiah**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரான்சில் நடைபெற்ற
# புலம்பெயர் தமிழர் திருநாள் 2014
# பொங்கல் விழாக் காட்சிகள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kaakkai Cirakinile (Monthly)
Registrar of Newspapers for India No. TNTAM/2012/43921

Postal Registration No. TN/CCN/588/2013-2015
Date of Publication : 25.1.2014

# GK LEADERS

Institute for IAS, IPS, IFS & TNPSC Exams



Announces

# IAS 2014

## PRELIMINARY

POLITY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
ECONOMY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
HISTORY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
GEOGRAPHY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
SCIENCE & TECH AND ENVIRONMENT INCLUDING CURRENT AFFAIRS ₹ 2000

## MAINS

| | |
|---|---|
| PAPER-I | Essay: ₹ 3000 |
| PAPER-II | General Studies- I: Indian Heritage and Culture, History and Geography of the World and Society. ₹ 3000 |
| PAPER-III | General Studies- II: Governance, Constitution, Polity, Social Justice and International relations. ₹ 3000 |
| PAPER-IV | General Studies-III: Technology, Economic Development, Bio diversity, Environment, Security and Disaster Management. ₹ 3000 |
| PAPER-V | General Studies- IV: Ethics, Integrity, and Aptitude. ₹ 3000 |

3032,'Z'BLOCK, 3RD STREET, 13TH MAIN ROAD, ANNA NAGAR WEST, CHENNAI-40
(ADJACENT TO NATESAN INSTITUTE OF CO-OPERATIVA MANAGEMENT)
CONTACT:044-26224044,9600033300 web:www.gkleadersiasips.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org